


புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2041 பிப்ரவரி 04, 2010 புரட்சி 9 முழக்கம் 4 விலை: ரூ.2.50


# போர்க் குற்றவாளி ராஜபக்சேவின் ஜனநாயக ‘முகமூடி’

இனப் படுகொலையை நடத்தி முடித்த ராஜபக்சே, மீண்டும் இலங்கையின் அதிபராக, சிங்களர்களால் சிம்மாசனத்தில் உட்கார வைக்கப் பட்டுள்ளார். பெருமளவு தமிழர்கள் ராஜ பக்சேவுக்கு பாடம் புகட்டுவதற்காகவே அவரை எதிர்த்து போட்டியிட்ட முன்னாள் ராணுவ தளபதி சரத் பொன்சேகாவுக்கு வாக்களித்து ராஜ பக்சேவுக்கு தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். சரத் பொன் சேகாவுக்கு தமிழர்கள் அளித்த வாக்கு, ராஜபக்சேவுக்கு காட்டிய எதிர்ப்பே தவிர, பொன் சேகாவுக்கு ஆதர வானவையாகக் கருதிட முடியாது.

தமிழர்களின் இந்த நியாயமான கோபத்தை, அங்கீகரிக்காமல் ராஜபக்சேயின் வெற்றியை இந்தியாவின் ஆளும் வர்க்கமும், பார்ப்பனர்களும் கொண்டாடுகிறார்கள். பார்ப்பன நாளேடான ‘இந்து’, ராஜபக்சே முதிர்ந்த அரசியல்வாதி என்று புகழ்மாலை சூட்டி, தலையங்கம் தீட்டுகிறது. ராணுவ தளபதி திடீரென்று ஜனநாயகத் தேர்தல் களத்துக்கு வரலாமா என்று கேள்வி எழுப்புகிறது. ராஜபக்சே, கடந்த காலங்களில் நடத்தியது ஜனநாயக ஆட்சியா, ராணுவ ஆட்சியா என்பதை மக்கள் மறந்துவிடவில்லை.

ராஜபக்சே மீண்டும் அதிபராகிவிட்டதாலேயே அவர், இனப்படுகொலைக் குற்றத்திலிருந்து தப்பித்து விட முடியாது. சர்வதேச சமூகம் தனது மவுனத்தைக் கலைத்து, உண்மைகளைப் பேசத் தொடங்கியிருக்கிறது. இரண்டு செய்திகளை குறிப்பிட விரும்புகிறோம்.

இத்தாலி நாட்டின் மிலன் நகரை மய்யமாகக் கொண்டு செயல்படும் ‘நிரந்தர மக்கள் தீர்ப்பாயம்’, அயர்லாந்து தலைநகர் டப்ளினில், கடந்த ஜன. 14, 15 தேதிகளில் இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணையை நடத்தியது. இறுதிகட்டமாக, தமிழர் பகுதியில் முள்ளி வாய்க்கால், வட்டு வாசல் பகுதியிலிருந்து தப்பி வந்தவர்கள், நேரடியாக ஆணையத்தின் முன் சாட்சியமளித்துள்ளார்கள். போர் நடைபெற்ற பகுதியில் எடுக்கப்பட்ட செயற்கைக்கோள் படங்கள், மருத்துவமனை மீது நடந்த தாக்குதல்கள் எல்லாவற்றையும் ஆணையம் பரிசீலித்தது.

ராணுவப் பிடியில் இருந்த தமிழ் இளைஞர்களை, நிர்வாணப்படுத்தி, கண்களைக் கட்டி, ராணுவம் சுட்டுக் கொன்ற கொடூரமான படுகொலைகளை, இலண்டனிலிருந்து ஒளி பரப்பாகும் ‘சேனல்-4’ தொலைக்காட்சி ஒளிபரப்பியபோது, அவை போலியான படங்கள் என்று ராஜபக்சே ஆட்சி மறுத்தது. ஆனால், அவை உண்மையான படங்கள் தான் என்று அய்.நா.வில், சட்டப்புறம்பான செயல்பாடுகளைப் பதிவு செய்யும் பிரிவு தலைவர் பிலிப் ஆல்ஸ்டன் அந்தப் படங்களை உரிய ஆய்வுக்கு உட்படுத்தி, அறிக்கை அளித்து விட்டார்.

உரிய சாட்சிகள், ஆவணங்களோடு தீர்ப்பாயம், இலங்கை அரசு போர்க்குற்றம் இழைத்துள்ளதாக அறிவித்துள்ளது. இலங்கை அரசுக்கு எதிரான இனப்படுகொலை குற்றச்சாட்டுகளின் மீது மேலும், புலனாய்வு செய்யப்பட வேண்டும் என்று, தீர்ப்பாயம் பரிந்துரைத்துள்ளதோடு, இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் அமைதிப் பேச்சு வார்த்தை முறிந்ததற்கு பன்னாட்டு சமூகமே, குறிப்பாக அமெரிக்காவும், இங்கிலாந்துமே காரணம் என்று கூறியுள்ளது.

இத் தீர்ப்பாயம், சர்வதேச அளவில் முக்கியத்துவம் பெற்றதாகும். 1967 முதல் இத்தகைய விசாரணைகளை நடத்தும் இந்த அமைப்பு, முதலில் ப்ரஸ்ஸல்ஸ் தீர்ப்பாயம் என்று அழைக்கப் பட்டது. வியட்நாம் மக்களுக்கு எதிராக, அமெரிக்க படைகள் இழைத்த மனித உரிமை மீறல்களை, விசாரணை நடத்தி, முதன்முதலில் உறுதி செய்த பெருமை, இந்த அமைப்புக்கு உண்டு. அதே அமைப்புதான் ராஜபக்சேயை இப்போது குற்றவாளி என்று முதன்முதலாக கூண்டில் ஏற்றிருக்கிறது.

2004 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரை இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர்கள் 34 பேர். இதில் 3 பேர் சிங்களர்கள். ஒருவர் முஸ்லீம். 30 பேர் தமிழர்கள். இது தவிர ஆஸ்திரியா (1), ஆஸ்திரேலியா (3), கனடா (3), டென்மார்க் (4), பிரான்சு (12), ஜெர்மனி (4), இந்தியா (5), மலேசியா (1), நெதர்லாந்து (2), நேபாளம் (2), சுவிட்சர்லாந்து (16), லண்டன் (10), அமெரிக்கா (2), நாடுகளைச் சார்ந்த 50க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் இலங்கையை விட்டு வெளியேறியிருக்கிறார்கள். (அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளது. வெளியேறிய பத்திரிகையாளர்களின் எண்ணிக்கை) ‘சண்டே லீடர்’ இதழின் ஆசிரியர் லசந்த விக்ரமசிங்க (இவர் இலங்கை அரசால் தான் கொல்லப்படலாம் என்று முன்கூட்டியே மரண சாசனமாக எழுதி வைத்தவர்) கொல்லப்பட்டு, பல மாதங்களாகியும் அது தொடர்பாக எந்த ஒரு விசாரணையையும் இலங்கை அரசு மேற்கொள்ளவில்லை.

இதை பல்வேறு ஊடக அமைப்புகளும், மனித உரிமை அமைப்புகளும் சுட்டிக்காட்டி குற்றம் சாட்டியுள்ளன. இலங்கை அரசுக்கு எதிராக எழுதிய சிங்கள பத்திரிகையாளர்கள் 11 பேர், சாட்சியின்றி, வெள்ளை வாகனத்தில் தடுத்து படுகொலை செய்யப்படலாம் என்று அஞ்சி, இந்தியா உட்பட, பல வெளிநாடுகளில் தஞ்ச மடைந்துள்ளனர்.

அமெரிக்காவின் வெளிநாட்டுத் துறை, அந் நாட்டின் நாடாளுமன்றத்தில், 2009 சனவரியி லிருந்து மே மாதம் வரை 120 நாட்களில் ஈழத்தில் நடந்த போர்க் குற்றங்களை விரிவாக விளக்கி, அறிக்கை சமர்ப்பித்திருக்கிறது. பாதுகாப்பான பகுதி என்று சிறிலங்கா அரசு அறிவித்த பகுதிகளில் உயிர்ப் பாதுகாப்புத் தேடி தஞ்சமடைந்தவர்கள் மீதே 55 முறை குண்டுகளை வீசி, 4027 தமிழர்களை படுகொலை செய்ததையும், 5074 தமிழர்கள் படுகாயமடைந்ததையும் மருத்துவமனைகளிலேயே 40 முறை குண்டுவீசித் தாக்குதல் நடத்தி 258 நோயாளிகளை படுகொலை செய்து 2807 நோயாளிகளை படுகாயப்படுத்தியதையும், வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்த 1500 தமிழர்களை துப்பாக்கிக் குண்டுக்கு இரையாக்கி யதையும், ஆக 191 தாக்குதல் சம்பவங்களில் 13,373 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு, 13,675 தமிழர்கள் படுகாயங்களுக்கு உள்ளாக்கப்பட்டதை விரிவாக ஆதாரத்துடன் முன் வைத்துள்ளது அமெரிக்க வெளிநாட்டுத் துறையின் அறிக்கை.

இலங்கையின் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஓய்வு பெற்றபோது அளித்த பேட்டியில், ராஜபக்சேயின் இனப் படுகொலைக்கு கடும் கண்டனத்தைத் தெரிவித்து, இலங்கையின் குடிமகனாக தாம் இருப்பதற்கு வெட்கப்படுவதாகக் கூறியுள்ளார். ராஜபக்சேயுடன் இன படுகொலை யில் கைகோர்த்து நின்ற முன்னாள் ராணுவத் தளபதி சரத் பொன்சேகா, இப்போது, ராஜபக்சே, போர்க்குற்றங்களை ‘அப்ரூவராகி’ப் பேசுகிறார்.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை உள்நாட்டுப் பிரச்சனை என்று கூறி, இனப் படுகொலையை இந்தியாவின் ஆளும் பார்ப்பன வர்க்கம் நியாயப்படுத்தி வருகிறது. ஒரு நாடு, இறையாண்மைக்குரிய தகுதியைப் பெற வேண்டுமானால், அதன் குடிமக்களை காப்பாற்றும் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும். குறிப்பாக, இன அழித்தொழிப்பு, போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடிய குற்றங்கள் ஆகிய வற்றிலிருந்து தனது குடிமக்களை பாதுகாக்கும் பொறுப்பு ஒவ்வொரு நாட்டுக்கும் உண்டு என, அய்.நா.வின் பொதுச் சபையில், 2005 ஆம் ஆண்டில் ஏற்கப்பட்ட உலக உச்சி மாநாட்டின் தீர்மானம் கூறுகிறது.

ஒரு அரசு இந்தப் பாதுகாப்பை வழங்காத சூழலில், பாதிக்கப்பட்ட குடிமக்களைப் பாது காக்கும் பொறுப்பு, பன்னாட்டு சமூகத்துக்கு உண்டு என்று, அத் தீர்மானம் கூறுகிறது. இப்படித்தான், சூடான் நாட்டின் ஒரு பிரிவு மக்களை, அந்நாட்டு அரசாங்கமே அழித்தொழிக்க முயற்சித்தபோது, 2006 ஆம் ஆண்டில், “பாதுகாப்புக்கான பொறுப்புடைமை” (Responsibility to Protect - R2P) என்ற அய்.நா.வின் மேற்கூறிய சட்டத்தைப் பயன்படுத்தி, அய்க்கிய நாடுகள் சபை, அந் நாட்டுக்கு பன்னாட்டு இராணுவத்தை அனுப்பியது. அங்கு இப்போதும் பன்னாட்டுப் படைகள், பாதுகாப்புப் பணியில் இருக்கின்றன.

இப்போது ராஜபக்சே மீண்டும் சிங்களப் பேரினவாதத்தின் ஆதரவுடன் அதிகாரத்துக்கு வந்துவிட்டதைக் காட்டி, போர்க் குற்றங்களை மறைத்து, ஜனநாயகவாதியாக உயர்த்திப் பிடிக்கும் முயற்சிகள் வெற்றி பெறுமா என்ற கேள்விக்கு காலம் பதில் சொல்லும்.

இலங்கையின் அரசியல் சட்டத்துக்கு உட்பட்டு, தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கப் போவதாக ராஜபக்சே கூறுவதும், அதே பல்லவியை இந்தியா பாடுவதும், தமிழர்களை ஏமாற்றும் நாடகம்தான்.

தமிழர்களின் பூர்வீகப் பகுதியான வடக்கு-கிழக்கு மாநிலங்களை இணைப்பதுகூட இலங்கை அரசியல் சட்டப்படி செல்லாது என்று, அந் நாட்டின் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்த நிலையில், தமிழர்களுக்கென்று அதிகாரங்களை எப்படி இந்த அரசியல் சட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப் போகிறார்கள்? இலங்கையின் ஒற்றையாட்சி முறையை முடிவுக்குக் கொண்டு வந்து, தமிழர்களின் பூர்வீகப் பகுதியை தனித் தேசமாக அங்கீகரிக்காத வரை எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை.

‘பயங்கரவாதத்துக்கு எதிரான போர்’ என்ற போர்வையில் மக்களுக்கு எதிரான இனப்படு கொலையை நடத்தி முடித்தவர்கள், மீண்டும், ‘ஜனநாயக முகமூடி’ தரித்துக் கொண்டு தமிழர்களை நிரந்தர அடிமைகளாக்கப்படு வதற்கான முயற்சிகள்தான், இப்போது நடக்கின்றன. விடுதலைப்புலிகள் வீழ்த்தப்பட்டு பயங்கரவாதம் முடிவுக்கு வந்துவிட்டதாகக் கூறும் இலங்கை அரசு, அடுத்த என்ன செய்யப் போகிறது என்ற சர்வதேச சமூகத்தின் கேள்விக்கு பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது.

இந்த நெருக்கடியை மேலும் கூர்மைப் படுத்துவோம்!

## சாதிவாரி கணக்கெடுப்பு

*மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் சாதிவாரியாகக் கணக்கெடுப்பதன் மூலம் ஒவ்வொரு சமூகமும் அவர்கள் மக்கள் தொகைக்கேற்ப கல்வி, வேலை வாய்ப்புகளில் உரிய பிரதிநிதித்துவம் பெற்றுள்ளார்களா என்பதை அறிய முடியும். சமூகத்தைப் பற்றி சரியான நிலை அப்போதுதான் தெரியவரும். சாதிவாரிக் கணக்கெடுப்பை ஒழிப்பது, சாதி ஒழிப்பாகிட முடியாது.*

*எனவே, அண்மையில் உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளதை ஏற்று, மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் போது பட்டியல் இனமக்களைக் கணக்கெடுப்பது போலவே, இதர சாதிப் பிரிவினைர் பற்றிய கணக்கெடுப்பும் எடுக்க வேண்டும் - என்பதே நமது கருத்து.*

## பி.டி. கத்தரிக்காய் தேவையா

*அமெரிக்க விதை நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் ஏழாண்டு ஆராய்ச்சிக்குப் பிறகு மரபணு மாற்றம் செய்யப்பட்ட பி.டி. கத்தரிக்காய்க்கு எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இந்த கத்தரிக்காய் பயிரிடப்பட்டால், ஏற்கனவே பயிரிடப்படும் நூற்றுக்கு மேற்பட்ட கத்தரிக்காய் வகைகள் அழிந்து போய்விடும் ஆபத்துகள் உள்ளன. பூச்சி இல்லாத கத்தரிக்காய் என்பது உண்மைதான் என்றாலும், அதை உண்ணும்போது, எந்த அளவுக்கு உடலுக்கு கேடு பயக்கும் என்பது ஒரு கேள்வி. அத்துடன், இது அறிமுகப் படுத்தப்பட்ட நாடுகள், பின்தங்கிய, ஏழை நாடுகள்தான்.*

*இந்தியாவின் பெரிய சந்தையை குறி வைத்து, இங்கே அறிமுகப்படுத்த துடிக்கிறார்கள். அது மட்டுமன்றி, இதைப் பயன்படுத்தினால், விவசாயிகள் பெரிய விதைக் கம்பெனிகளை சார்ந்தே நிற்க வேண்டிய நிலை வந்துவிடும். இதன் காரணமாக மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிக்காய்க்கு எதிர்ப்பு வலுக்கிறது. இது நியாயமான எதிர்ப்பே ஆகும்.*

## ஜல்லிக்கட்டு வேண்டாம்

*புதுக்கோட்டை மாவட்டத்தில் ஜல்லிக்கட்டில் மாட்டை அடக்கச் சென்ற இரண்டு தமிழர்கள் மாடு முட்டி மரணமடைந்து விட்டனர். ஒவ்வொரு ஆண்டும் இத்தகைய துயரமான மரணங்கள் தொடருகின்றன. ஜல்லிக் கட்டு நிறுத்தப்பட வேண்டும் என்றால், அது தமிழனின் வீரம் என்று கூறுகிறார்கள். மாட்டை அடக்குவதில் வீரம் அடங்கியிருக்கவில்லை. உறுதி, துணிவு, அறிவு, விவேகம் ஆகியவற்றில்தான் வீரத்தைத் தேட வேண்டும்.*

*அண்மையில் ஒரு ஆசிரியை, பள்ளிக் குழந்தைகள் சென்ற வாகனம் ஆற்றில் மூழ்கியபோது, தனது உயிரைப் பணயம் வைத்து, பல குழந்தைகளைக் காப்பாற்றிவிட்டு மரணமடைந்தார். காளை மாட்டை அடக்கும் ஆண்களை விட இந்தப் பெண் வீரமானவர்தானே.*

*அர்ப்பணிப்பு, தொண்டு, சமூகத்தின் மீதான கவலையில் உறுதி காட்டி நிற்பதே உண்மையான வீரம்! இது கிராமத்தில் நிலவும் சாதிக் கட்டமைப்பை வலிமைப்படுத்தக் கூடிய ஆண் களுக்கான, அறிவுக்கு ஒவ்வாத, விளையாட்டு! பலியான உயிர்கள் போதும்!*

# கல்வியை குடும்ப நிறுவனமாக்கிய வீரமணி


Periyar varsity brass faulted for crisis

K. KARTHIKEYAN

DC | COLOMBO

Jan. 20: Derecognition of the Periyar Maniammai ... college and provide free education to the poor way back in 1965. The institution is among the 16 TN deemed universi... shattered dream Ayya (Periyar) always held the ... University run by Periyar Maniammai Educational and Charitable Society. "Though eminent professors ... offered to donate land and money, but Veeramani had failed in the sacred duty," Mr Mani added.

***ஜனவரி 21, நாளிட்ட 'டெக்கான் கிரானிக்கல்' நாளேட்டில், அதன் செய்தியாளர் கே. கார்த்தி கேயன் எழுதியுள்ள செய்தி கட்டுரை:***

பெரியார் மணியம்மை நிகர்நிலை பல்கலைக் கழகத்தின் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டுள்ளது. இது திராவிடர் கழகத்துக்கு கிடைத்த பலத்த அடி. பெரியார் கொள்கையை உண்மையாகப் பின்பற்றுவோரால், திராவிடர் கழகமும், பெரியார் பெயரால் நடத்தப்படும் கல்வி நிறுவனமும் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகி வருகிறது. 1965 ஆம் ஆண்டிலேயே பெரியார், தமது சொந்த நிலத்தையும், ரூ.5 லட்சம் பணத்தையும், தமிழக அரசிடம் தந்து, அரசே கல்லூரியை உருவாக்கி, இலவசக் கல்வி வழங்குமாறு கேட்டுக் கொண்டதை, அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டுள்ள நிறுவனங்களில் பெரியார் மணியம்மை கல்வி நிறுவனமும் ஒன்று. கல்லூரி நிர்வாகத்தில் முறை கேடுகள் நடப்பதாக, மத்திய மனித வளத்துறை அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

கல்வி நிறுவனங்களை நிர்வகிப்பதில் கல்வியாளர்களுக்கு பதிலாக, குடும்ப உறுப்பினர்கள் நிர்வாகிகளாக செயல்படுவதை, அமைச்சகம் சுட்டிக்காட்டியுள்ளது. தி.க. தலைவர், பல்கலைக் கழகத்தின் வேந்தராகவும், அவரது மகன் அன்பு ராஜூ, நிர்வாகக் குழு உறுப்பினராகவும் உள்ளார்கள் என்பது கவனிக்கத்தக்கது. பெயர் கூறவிரும்பாத தி.க. தொண்டர்கள் "எவ்வளவோ திறமையான பேராசிரியர்கள் இருக்கும்போது, வீரமணியும், அன்பு ராஜூம் அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டு விட்டார்கள்" என்று கூறுகிறார்கள்.

"பெரியார் கொள்கைப் பாதையிலிருந்து இன்றைய திராவிடர் கழகம் விலகிப் போய்விட்டது என்பதற்கு இந்த அங்கீகார ரத்து சரியான சான்று" என்று, பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கூறினார். அனைவருக்கும் இலவச கல்வி வழங்குவது அரசுக்குரிய கடமை என்ற கருத்தை தொடர்ந்து வலியுறுத்தியவர் பெரியார். அதனால் தான் அரசுக்கு கல்லூரிக் கட்டுவதற்கான நிலத்தையும், பணத்தையும் அன்பளிப்பாக வழங்கினார். வீரமணி பெரியாரின் உயரிய கொள்கையிலிருந்து விலகி விட்டார் என்று, அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் தா. பாண்டியன் கூறுகையில், "பெரியார் பெயரிலுள்ள கல்வி நிறுவனமும், இந்த பட்டியலில் இடம் பிடித்து விட்டது வேதனையைத் தருகிறது" என்றார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி சட்டமன்ற உறுப்பினர் ரவிக்குமார், "நிகர்நிலை பல்கலைக்கழகங்களே கூடாது" என்றார். இது குறித்து கருத்து கேட்பதற்கு கி. வீரமணியை தொடர்பு கொள்ள முயற்சிகள் மேற்கொண்டும் முடியவில்லை.

**'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேட்டில் (ஜன. 2) வெளி வந்த கட்டுரையின் ஒரு பகுதி.**

திராவிடர் கழக நிறுவனர் ஈ.வெ. ராமசாமி, அவரது துணைவியார் மணியம்மை பெயரில் உள்ள கல்லூரி நிறுவனமும், நிகர்நிலை அங்கீகாரம் ரத்தான நிறுவனங்களின் பட்டியலில் மாணவர்களை சுரண்டும் நிறுவனமாக இடம் பெற்றுள்ளது. அந்தத் தலைவர்கள் - கொள்கைகளையே இது அவமதிப்பாகும். பெரியார் எப்போதுமே கல்வியை இலவசமாக வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி வந்தார். சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் ஏழைகளுக்கும் அரசே உயர் கல்வி வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

பெரியார் பாரம்பர்யத்தில் வந்த கி. வீரமணி, தொடங்கிய கல்லூரி குடும்ப நிறுவனமாகிவிட்டது


Tamil Nadu home for family-run degree shops

G Babu Jayakumar | ENS
Chennai, January 19

THE Union Human Resources Development Ministry's recommendation to strip 44 institutions of their "deemed to be university status" will ... for students and parents. For all

என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகி நிற்கிறது. அண்மையில் வீரமணியின் மகன், திராவிடர் கழகத்துக்குள் (தலைமைப் பொறுப்பில்) கொண்டு வரப்பட்டுள்ளார். கல்வி நிறுவனத்தின் நிர்வாகத்திலும், அவர் இடம் பெற்றுவிட்டார். கல்வியை வர்த்தகமாக்கி விட்டார்கள். இப்படி கருப்புப் பட்டியலில் இடம் பெற்றுள்ள நிகர் நிலைப் பல்கலைக் கழகங்கள் (பெயரில் நிகர்நிலை என்ற பெயரை ஒட்ட வைத்துக் கொள்ளக் கூடாது என்று பிறகு அறிவிக்கப் பட்டது) தங்களுக்கு, அத்தகைய அந்தஸ்து கோரியதற்கான காரணம், தரமான கல்வியைத் தருவதற்காக அல்ல; மாணவர் சேர்க்கைக்கான எல்லா இடங்களையும் விற்பனை செய்யலாம் என்பதே காரணம். இந்த நிறுவனங்கள் அண்ணா பல்கலைக்கழகத்தோடு இணைக்கப்பட்டிருக்குமானால், 'நேர்முக பேட்டி' (கவுன்சிலிங்) வழியாக தேர்வு செய்யப்படும் மாணவர்களுக்கு, கணிசமாக இடங்களை ஒதுக்க வேண்டியிருந்திருக்கும். இதற்கு மாறாக, நிகர்நிலை பல்கலைக் கழகம் என்ற அங்கீகாரத்தைப் பெற்று விட்டால், எல்லா இடங்களையும் அவர்களே நிரப்பிக் கொள்ளலாம்.

உண்மையில், இப்போது நடவடிக்கைக்கு உள்ளாகியுள்ள கல்வி நிறுவனங்கள், போட்டி அதிகமாக உள்ள பாடப் பிரிவுகளில் எவ்வளவு மாணவர்களை அதிகமாக சேர்க்க முடியுமோ, அவ்வளவு சேர்த்துள்ளனர். கல்விக் கட்டணத்தைக்கூட, இந்த நிறுவனங்களே தங்கள் விருப்பத்துக்கேற்ப நிர்ணயித்துக் கொள்கின்றன. கிராமங்களிலிருந்து வரும் பல பெற்றோர்கள் இந்த நிறுவனம் அண்ணா பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்டிருக்கவில்லை என்பதைக்கூட தெரியாதவர்களாக, தங்கள் பிள்ளைகளை சேர்க்கிறார்கள்.

**- 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேட்டில், 'பட்டங்களை விற்கும் கடைகளை நடத்துவதில் தமிழ்நாடு - முன்னணி' என்ற தலைப்பில் ஜி.பாபு ஜெயகுமார் எழுதியுள்ள கட்டுரையின் ஒரு பகுதி.**

## சீர்காழியில் அய்யா நினைவு நாள்

சீர்காழியில் 24.12.2009 காலை 10 மணிக்கு பேருந்து நிலையம் அருகில் உள்ள அய்யா சிலைக்கு கழகத் தோழர்கள், சீர்காழி நகர அமைப்பாளர் சி. ரமேசு, நகர செயலாளர் பா. பிரபாகரன், மாவட்டத் தலைவர் இரா. பரசுராமன் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர். தலைவர் நந்த இராசேந்திரன், கொள்ளிட ஒன்றிய செயலாளர் பா. பாக்கியராசு, நகர தலைவர் ப.வ. பெரியார் செல்வம், மாண வரணி தலைவர் ரகுநாத், செயலாளர் செல்வேந்திரன், அமைப்பாளர் அருண், தோழர்கள் கிருஷ்ணகுமார், இன்ப சேகரன், பெரியார் சிலம்பு, பாவேந்தன் மற்றும் கழக ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். சீர்காழி நகர துணைச் செயலாளர் அனந்தராசு நன்றி கூறினார். 27.11.2009 மாவீரர் நாளை முன்னிட்டு, கழக சார்பில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

## திருச்சி தெருமுனைக் கூட்டம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம் இலால்குடி வட்டம் இடையாற்று மங்கலம் பகுதியில் 23.1.2010 அன்று மாலை 4 மணி முதல் 7 மணி வரை கழகம் சார்பாக கொள்கை விளக்க தெருமுனைக் கூட்டம் மாவட்டத் தலைவர் செ.த. இராசேந்திரன் தலைமையில் இலால்குடி வட்ட அமைப்பாளர் முத்து செழியன், சாதி ஒழிப்பு சட்ட எரிப்புப் போராட்டத்தில் சிறைச் சென்ற பெரியார் தொண்டர் தங்கராசு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திருச்சி பெரியார் இசைக்குழு குமார், ஆறுமுகம் ஆகியோர் கழக கொள்கை பாடல்களை பாடினர். தலைமையுரையில் செ.த. இராசேந்திரன் இரட்டைக் குவளை, தீண்டாமை ஒழிப்பு பற்றி வலியுறுத்திப் பேசினார் மற்றும் கழகத் தோழர் புதியவன், கழகத்தின் சாதனைகள் பற்றி பேசினார். கவுதமன், மூக்கன் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர். பொது மக்கள் திரளாகக் கூடி ஆர்வமுடன் கேட்டனர். மாவட்ட செயலாளர் மு.மனோகரன் நன்றி கூறினார்.

# ‘வர்ணபேதம்’ சாதிகளானது எவ்வாறு?

*சென்னை பல்கலைக்கழக கருத்தரங்கில் 27.11.2009 அன்று அம்பேத்கர் நோக்கில் சாதியம் தோன்றிய சமூக வரலாற்றை விளக்கி பேராசிரியர் ஆ. சிவசுப்பிர மணியன் ஆற்றிய உரை இது.*

இந்திய சமூகம் குறித்து அறிய விரும்பும் எவரும் இந்தியாவில் நிலவும் சாதிகளைப் புறக்கணித்து விட முடியாது. ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு தீங்காக அது இந்தியச் சமூகத்தில் நிலைத்து நிற்கிறது. கேம்பிரிட்ஜ் பல்ககலைக்கழகத்தில் சமூக மானுடவியல் பேராசிரியராக இருந்த ஹட்டன் என்பவர் 1946 இல் ‘இந்தியாவில் சாதி - அதன் செயல்பாடு, தோற்றம்’ என்ற தலைப்பில் 1946 ஆம் ஆண்டில் நூல் ஒன்றை எழுதியுள்ளார். அந்நூலின் முன்னுரையில் இந்தியச் சாதிகளைக் குறித்து ஐயாயிரம் நூல்கள் வெளி வந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். தற்போது இவ்வெண்ணிக்கை மேலும் அதிகரித்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

சாதிகளைக் குறித்து வெளியான நூல்களை இரு வகையாகப் பிரிக்கலாம். முதலாவது வகை குறிப்பிட்ட சாதியின் புகழ் பாடுவது; இரண்டாவது வகை ஏதேனும் ஒரு கோட்பாட்டின் அடிப் படையில் அதை அணுகி ஆராய்வது.

முதாவது வகையினர் வேதங்களையும், உப நிஷத்துகளையும், ஸ்மிருதிகளையும் பெரும்பாலும் ஆதாரமாகக் கொண்டு, தம் சாதியின் தோற்றம் மிகப் பழமையானது என்று குறிப்பிடுகின்றனர். புராண இதிகாச நாயகர்கள், ரிஷிகள் ஆகியோரின் மரபில் வந்ததாகத் தம் சாதியின் புகழ் பாடினர்.

தமிழ்நாட்டுச் சாதி வரலாறுகள், சங்க நூல்கள், பக்தி இலக்கியங்கள், காப்பியங்கள், கல்வெட்டுகள் ஆகியனவற்றின் துணையுடன் இப்பணியைச் செய்துள்ளன. இதன் பொருட்டுப் பல சாதிகளின் தோற்றம் குறித்துப் புராணங்கள் உருவாகியுள்ளன. தேவைப்பட்டால் பிற சாதிகளில் உள்ள புலவர்களுக்குப் பணம் கொடுத்துப் புராணங்களை எழுதச் செய்துள்ளனர்.

இரண்டாவது வகையான ஆய்வுகள் தொடக்கத்தில் வெளிவந்துள்ளன; தற்போதும் வெளி வருகின்றன. ஆனால் காய்தல் உவத்தலின்றி இத்தகைய ஆய்வுகளைச் செய்வது கடினமான ஒன்றாக மாறி வருகிறது. வாக்கு வங்கி அரசியலில் சாதிகளின் பங்களிப்பு இறுக்கமான ஒன்றாக மாறிவிட்டதும், சாதிகளின் பெயரால் தம் அரசியல் செல்வாக்கையும், பொருளாதார நிலையையும் வளர்த்துக் கொள்ள விழைவோர் குறிப்பிட்ட சாதியின் பாதுகாவலராகத் தம்மை வெளிப்படுத்திக் கொள்வதும் இதற்கான முக்கிய காரணங்களாகும்.

இத்தகைய சமூகச் சூழலில்தான் ‘இந்தியாவில் சாதிகளின் தோற்றம் குறித்து அம்பேத்கரின் கருத்துக்களைத் தொகுத்துக் கூற வேண்டியுள்ளது.

**வருணம்**

இந்தியச் சாதிகளைக் குறித்து அறிய விரும்பும் எவரும் அதன் முன் வடிவமாக இருந்த ‘வருணம்’ என்பதைப் புறக்கணித்துவிட முடியாது.

வருணம் என்பது குறித்து இந்தியாவின் முக்கிய சமூக மானிடவியல் அறிஞரான சியாமா சரண் தூபே பின்வருமாறு வரையறை செய்துள்ளார்:

*இந்து சமுதாய அமைப்பில் வருணம் என்பது மக்களை அடையாளம் காட்டுகின்ற பிரிவுகளின் தொகுப்பு மாத்திரமே. அது சமுதாய அமைப்பின் அன்றாடம் இயங்குகின்ற பகுதி அல்லது அலகு அல்ல. அது பலவகையான சாதிகளுக்கு உரியதான அளிக்கப்பட்ட படிநிலையைப் பொதுவாக மட்டும் குறிப்பிடு கிறது.* ***அதைச் சாதிகளை வகைப்படுத்தும் சாதனமெனக் கூறலாம்.*** (அழுத்தம் எமது)

வருணம் என்பது சாதிகளை வகைப்படுத்தும் சாதனமாக மாறுவதற்கு முன்பு அது மாற்றிக் கொள்ளக் கூடிய ஒன்றாகவே இருந்துள்ளது. மேலும் ஒரே குடும்பத்தில் வேறு வருணத்தவரும் இருந்துள்ளனர். சுருக்கமாகக் கூறினால் வருணம் என்பது வேலைப் பிரிவினையைப் போன்றே இருந்துள்ளது.



ரிக் வேதத்தில் இடம் பெறும் முனிவர் ஒருவர் கவிஞராகவும் அவரது சகோதரர் மருத்துவ ராகவும், அவர்களின் தாய் நெல் குத்தும் பெண்ணாகவும் இருந் துள்ளனர்.

வருணம் நான்கு வகைப்படும். அவை முறையே பிராமணர் - சத்திரியர் - வைசியர் - சூத்திரர் எனப் பெயர் பெற்றன.

**வருணத்தின் தோற்றம்:**

வருண முறையின் தோற்றம் குறித்து 1) தெய்வீகத் தோற்றுவாய்க் கோட்பாடு 2) முக்குணக் கோட்பாடு என்ற இரு கோட்பாடுகளை தூபே முன் வைக்கிறார்.

இவற்றுள் தெய்வீகத் தோற்றுவாய்க் கோட்பாடு குறித்து, சாதிகளின் தோற்றம் தொடர்பான அம்பேத்கரின் கருத்துக்களுடன் இணைத்துக் கூற இருப்பதால் முக்குணக் கோட்பாடு என்பதை மட்டும் இங்குக் காண்போம்.

இக்கோட்பாடு பண்டைய இந்தியத் தத்துவத்துடன் தொடர்புடையது. மனிதர்களிடம் உள்ளியல்பாக சத்வ, தாமஸ், ரஜஸ் என்ற மூன்று குணங்கள் உள்ளதாகப் பண்டைய இந்தியத் தத்துவ ஆய்வாளர்கள் கருதினர். அதன் விளக்கம் வருமாறு:

**சத்துவம்** - நற்சிந்தனைகள், நற்செய்திகள், நற்பண்பு, வாய்மை, விவேகம்.

**ராஜசம்** - உயர்தர வாழ்க்கை, ஆடம்பரம், மிகையான உணர்ச்சிகள், கேளிக்கை களில் நாட்டம், கர்வம், வீரம்.

**தாமசம்** - பண்பு நயமின்மை, மந்தம், ரசனை, உணர்வு இல்லாமல் இன்பங்களில் மிகையாக ஆழ்ந்திருத்தல், கற்பனை வளமின்றிக் கடுமையான வேலை களைச் செய்யக் கூடிய உடல் வலிமை.

இம்மூன்று குணங்களின் அடிப்படையில் வருணங்கள் வகைப்படுத்தப்பட்டதை

*“சத்துவ பண்புகள் உடையவர் பிராமண ரெனவும், ராஜச குணமுடையவர் சத்திரியர் அல்லது வைசியர் என்றும், தாமச குண முடையவர் சூத்திரர் எனவும் வகைப் படுத்தப்பட்டனர்”*

- என்று தூபே குறிப்பிடுகிறார்.

**அம்பேத்கர் நோக்கில் வருணம்:**

நான்கு வருணங்களின் தோற்றம் குறித்து புருஷசுக்தம் குறிப்பிடுகிறது. இது தெய்வீக தோற்றுவாய்க் கோட்பாட்டுடன் தொடர் புடையது. புருஷசுக்தத்தின் பதின்மூன்றாவது மந்திரம் பிரம மனால் நான்கு வருணங்கள் படைக்கப்பட்டதை

*“ப்ராஹமணன் இவருடைய முகமானான், கைகள் க்ஷத்திரியனாகச் செய்யப்பட்டன. அப்பொழுது தொடைகள் வைச்யனாக ஆயின. திருவடிகளிலிருந்து சூத்ரன் உண்டானான்.”*

- என்று குறிப்பிடுகிறது. இதன் அடுத்த பகுதியாக நான்கு வர்ணங்களுக்கிடையேயான வேலைப் பிரிவினை பின்வருமாறு வகுக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| **பிராமணர்** | **– வேதம் ஓதுதல்** |
| **க்ஷத்திரியர்** | **– நாட்டையாளுதல்** |
| **வைசியர்** | **– செல்வம் ஈட்டுதல்** |
| **சூத்திரர்** | **– ஏவல் புரிதல்** |

ஆனால் புருஷசுக்தம் ரிக் வேதத்தின் பிந்திய காலத்தில் சேர்க்கப்பட்ட பகுதி என்றும் அதில் நான்கு வருணங்களின் தோற்றத்தைக் குறிக்கும் சுலோகங்கள், புருஷசுக்தம் சேர்க்கப்பட்ட பிறகு புகுத்தப்பட்டவையென்றும் அம்பேத்கர் கருது கிறார். அத்துடன் பிராமணர்கள் தம் உயர் நிலையை நிலைநிறுத்திக் கொள்ள, கள்ளத்தனமாக ரிக் வேதத்தில் இதைப் புகுத்தியுள்ளனரென்று சில விமர்சகர்கள் கூறியுள்ளதையும், புருஷசுக்தத்தின் மொழி நடை ரிக்வேதத்தின் மொழிநடையிலிருந்து மாறுபடுவதை அவ்விமர்சகர்கள் சுட்டிக் காட்டி யுள்ளதையும் அவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

*புருஷ சுக்தாவை எவரேனும் படிப்பார்களே யானால் 11 மற்றும் 12வது பாடல்களை விடுத்து ஏனைய பகுதிகள் பூராவுமே எடுத்துரைப்பதுபோல அமைந்துள்ளன. ஆனால் நான்கு வருணங்களின் தோற்றங்களை விளக்கும் பாடல்களான அவை இரண்டும் கேள்வி பதில் வடிவங்களில் அமைந்துள்ளன. இங்கே குறித்துக் கொள்ள வேண்டிய விஷயம் என்னவெனில், ஏன் இந்த இரு பாடல்கள் மட்டும் எடுத்துரைப்பது போன்ற வடிவங்களை மாற்றிக் கேள்வி பதில் வடிவங்களில் அமைக்கப்பட்டுள்ளன? ஆசிரியர் அவர்கள் ஒரு புது விஷயத்தை நுழைக்கவும் அதுவும் அழுத்தமாக அதைத் தெரிவிக்கும் விதத்தில் அமைக்கவும் விரும்பி யதால்தான் இப்படி அதன் மரபு மாற்றப்பட்டுள்ளது என்பதுதான் அதற்குச் சரியான காரணமாக இருக்க முடியும். புருஷ சுக்தா ரிக்வேதத்தின் பிந்திய காலத்தில் சேர்க்கப்பட்ட பகுதிகள் என்பது மட்டுமல்லாது இந்தக் குறிப்பிட்ட பாடல்கள் மிகப் பிந்தியன; அதுவும் புருஷ சுக்தாவிற்குப் பிறகே புகுத்தப்பட்டுள்ளன எனவும் கூறலாம்.*

*பிராமணர்கள் வேதமே சதுர்வர்ண முறைக்கு இசைவாணை வழங்கியுள்ளது என்பதை நிலை நிறுத்துவதற்காக, இந்நான்கு வருணமுறை நடைமுறைக்கு வந்து நீண்ட காலமானதற்குப் பிறகு புருஷ சுக்தாவை முழுவதுமாக இல்லாவிட்டாலும் பாடல்கள் 11 மற்றும் 12-களை ரிக்வேதத்தில் கள்ளத்தனமாகப் புகுத்தியுள்ளார்கள் என்று சொன்னால் இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமே யில்லை.*

வருணமுறையானது நான்கு அடுக்குகளைக் கொண்டிருந்தது. இதில் மேலடுக்கில் முதன்மை யானவனாக பிராமணனும் அதையடுத்து சத்திரி யனும் வைசியனும் இடம் பெற்றனர். இவர்கள் மார்பில் முப்புரிநூல் தரிக்கும் உரிமையுடை யவர்கள். நான்காவதான சூத்திரர்களுக்கு மார்பில் பூணூல் அணியும் உரிமை கிடையாது.

**நன்றி: ‘உங்கள் நூலகம்’, ஜன. 2010**

**(அடுத்த இதழில் முடியும்)**

## திருப்பூரில் முத்துக்குமார் நினைவேந்தல்

ஈழத் தமிழர்களைக் காப்பாற்றக் கோரியும், தமிழர்களின் நல்வாழ்விற்கு தனித் தமிழீழமே தீர்வு எனவும் பிரகடனம் செய்து தன்னையே தீக்கிரை யாக்கிய போராளி முத்துக்குமாரின் முதலாமாண்டு நினைவாக 29.1.2010 அன்று உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி, ஆனைமலை, தாராபுரம், மடத்துக் குளம், பல்லடம், திருப்பூர் ஆகிய பகுதிகளில் கழகத் தின் சார்பாக 1000 சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. ஆனைமலை, கனியூர், காரத்தொழுவு, கடத்தூர், ஜோத்தம்பட்டி ஆகிய பகுதிகளில் முத்துக்குமார் படம் அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தது.

## திருச்சியில் தீண்டாமை ஒழிப்பு தொடர் பிரச்சாரம்

கழகம் சார்பாக திருச்சி மாவட்ட கிராமப் புறங்களில் தீண்டாமை ஒழிப்பு தொடர் பிரச்சாரம், வருகின்ற 7.2.2010 ஆம் நாள் மணப்பாறையில் துவங்கி, வையம்பட்டி, தரகம்பாடி, சமயபுரம், வீரப்பூர், தோகமலை, கடவூர், பாலவிடுதி, காவல் காரன் பட்டி, அல்லித்துறை, சோமரசம்பேட்டை, எட்டறை, சந்தியார் பாளையம், பொய்யாமணி, பெருக மணி, பெட்டவாய்த்தலை, வாத்தலை, குணசீலம், நொச்சியம், மண்ணச்சநல்லூர், சமயபுரம், லால்குடி, அரியமங்கலம், பூவாளூர், நன்னிமங்கலம், இடையாற்றுமங்கலம் வழியாக 13.2.2010 ஆம் நாள் நிறைவாக காட்டூரில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொள்ளும் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெறும்.

# வன்னியர்கள் மீது பாய்ந்த கைவிரல் ரேகைப் பதிவு ஆணை

*விரல் ரேகையைப் பதிவு செய்ய வேண்டும் என்ற ஆணை, கள்ளர் சமூகத்தினருக்கு மட்டுமல்லாது, வன்னியர் சமூகத்தினருக்கும் இருந்தது. குறிப்பாக தென்னாற்காடு மாவட்டத்தில் 'படையாட்சி' என்று அழைக்கப்பட்ட வன்னியர் சமூகத்தினர் காவல் நிலையங்களில், அன்றாடம் கைவிரல் ரேகை பதிவு செய்ய வேண்டும் என்று சில பார்ப்பன போலீஸ் அதிகாரிகள், அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்கள். ஜஸ்டிஸ் கட்சி ஆட்சியில் இந்த ஆணையை ரத்து செய்ய வேண்டும் என்ற அவசர தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது. ஆனால், இதை காங்கிரசார், தங்களின் சாதனைபோல அப்போதே பொய் பிரச்சாரம் செய்துள்ளனர். இந்த வரலாற்றுச் செய்திகளை 1935 ஆம் ஆண்டு 'விடுதலை' ஏட்டிலும், 'குடிஅரசு' இதழிலும், 'தென்னாற்காடு ஜில்லா படையாட்சிகள்' எனும் தலைப்பிலும் பதிவாகியுள்ளது. செய்தியை இங்கு வெளியிடுகிறோம்.*

சமீபத்தில் நடக்கப் போகும் தென்னாற்காடு ஜில்லா போர்டு தேர்தல்களில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பெரியார்கள், மற்ற இடங்களில் உண்மையை மறைத்தும், உள்ளதைக் குறைத்தும் கூறிப் பொய்ப் பிரச்சாரம் செய்த மாதிரி, தங்களுடைய ஒழுங்கீனமான சுயநலப் பிரச்சாரம் செய்ய முற்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. அவர்கள் செய்த சூழ்ச்சிகளைக் குறித்து நமது நிருபர் எழுதிய விவரங்களை வேறொரு பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம். அவற்றால், சுயநலக் கூட்டத்தார் ஜஸ்டிஸ் கட்சியினரைத் தோற்கடிக்க எவ்வளவு தூரம் முயற்சி செய்கிறார்களென்பது விளங்கும். தம்முடைய பிரச்சாரத்திற்காக, எவ்வளவு கேவலமான முறைகளையும் அனுசரிப்பார்களென்பது, அவர்களுடைய முழுப் பொய்ப் பிரச்சாரத்தினால் புலப்படுகின்றது. சில வாரங்களுக்கு முன், படையாட்சி வகுப்பினரைச் சேர்ந்தவர்கள் அனைவரையும் குற்ற பரம்பரைச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட அரசாங்க உத்தரவு ரத்து செய்யப்பட்டது.

க்ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்த பழங்குடி மக்களான படையாட்சிகள் ஏன் குற்றஞ் செய்யும் வகுப்பினரோடு சேர்க்கப்பட்டார்கள்? அதற்குக் காரணமென்ன? காரணம் சில பார்ப்பன போலீஸ் உத்தியோகஸ்தர்கள். அவர்களுடைய 'ரிப்போர்ட்டு'களில் அவ்வகுப்பினரை குற்ற வகுப்பினர் சட்டத்தின் கீழ் கொண்டு வருதல் மிக அவசியம் என்று எழுதியதனால், அரசாங்கத்தார், தவறாக அப்படிப்பட்ட உத்தரவை வெளியிட்டார்கள். அந்த உத்தரவு படையாட்சி வகுப்பினரிடையே பெருத்த பரபரப்பை உண்டு பண்ணியது. அவர்களுடைய சுயமரியாதைக்கும், கௌரவத்திற்கும், அரசாங்க உத்தரவு இடையூறு செய்ததைக் கூட்டங்களிலும், பத்திரிகைகளிலும் கண்டிக்கப்பட்டது. அந்த அவமரியாதையான உத்தரவை ரத்து செய்வதற்குத் தென்னாற்காடு ஜில்லா போர்டு தலைவர், ராவ்பகதூர் ஜம்புலிங்க முதலியார் அவர்கள் பிரயாசைப்பட்டு வெற்றி பெற்ற விஷயம் அந்த ஜில்லாவாசியான படையாட்சிகளுக்குத் தெரிந்திருக்குமென்று நம்புகின்றோம்.

**வரலாற்றிலிருந்து....**

சென்னை சட்டசபையில் ஜஸ்டிஸ் கட்சியினர் ஒருவரால் அவசரத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அவ்வுத்தரவை ரத்து செய்யும் விஷயமாக அரசாங்கத்தார் கவனிப்பதாக வாக்குறுதியளித்ததின் பேரில், தீர்மானம் 'வாப்பீஸ்' வாங்கிக் கொள்ளப்பட்டது. பின்னர், ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகர்களின் முயற்சியால், அரசாங்கத்தார் பார்ப்பன போலீஸ் உத்தியோகஸ்தர்களுடைய 'ரிப்போர்ட்'டுகளின் மேல் தாங்கள் அம்மாதிரி உத்தரவிட்டது தவறென்று உணர்ந்து, படையாட்சிகளின் கிளர்ச்சியின் உண்மையை அறிந்து, உத்தரவை ரத்து செய்தார்கள்.

இவ்வுத்தரவு ஜஸ்டிஸ் கட்சியாரால் ஏற்படுத்தப்பட்டது. காங்கிரஸ்காரர்கள் தான் சட்டசபையில் இதை விவாதித்து ரத்து செய்வதற்கு உதவி செய்தார்கள் என்று சுயநலக் கூட்டப் பத்திரிகைகள் சில கூறுவது எவ்வளவு பொய்யான விஷயம் என்பதை படையாட்சிகள் அறிவார்கள் என்று நம்புகிறோம். படையாட்சிகள் பார்ப்பனரல்லாத பெருங்குடி மக்களில் மிகப் பழங்குடி மக்கள். அவர்களைப் பற்றிப் பார்ப்பனர்கள் பரிந்து பேசுவதும், அவர்களுடைய நன்மைக்காகப் பாடுபடுவது போலப் பாசாங்கு செய்வதும், மக்களை ஏமாற்றி 'ஓட்'டுப் பறிப்பதற்கேயாகும். காங்கிரஸ் என்ற போர்வையை மேல் போர்த்திக் கொண்டால், படையாட்சிகளை ஏமாற்றிவிடலாம் என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் போலும்.

சதாகாலமும் பொய், ஏமாற்றுதல், மானக்கேடான செயல்களைச் செய்து, வேலை சம்பாதித்தல், புல்லிய செய்கைகளின் மூலம் வயிறு வளர்த்தல் முதலிய குற்றங்களை இரவு பகலாகச் செய்து வரும் பார்ப்பனர்களை, குற்ற வகுப்பினர் சட்டத்தின் கீழ் கொண்டுவர வேண்டியிருக்க, தமிழ்நாட்டின் விவசாய விருத்திக்குக் கற்றூண் போல் விளங்கி, பழமையும் பெருமையும் பொருந்திய க்ஷத்திரிய வீரத்தையும், தேக பலத்தையும் நாட்டின் செழுமைக்கு உபயோகிக்கும் படையாட்சிகளைக் குறற் பரம்பரை வகுப்பினராகச் சேர்த்தது எவ்வளவு தவறான விஷயம். இத்தவறுதலுக்குக் காரணம் பார்ப்பனர்கள் என்பதையுணர்ந்து, அவ்வுத்தரவு ரத்து செய்ததற்குக் காரணம் ஜஸ்டிஸ் கட்சி என்பதறிந்து, சமீபத்தில் நடைபெறப் போகும் தேர்தலில் சுயநலக் காங்கிரஸ் கூட்டத்தை முறியடிப்பார்கள் என்று நம்புகிறோம்.

**'விடுதலை'**
**'குடி அரசு' மறு பிரசுரம் – 08.12.1935**

"புரட்சிப் பெரியார் முழக்கம்" **ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 9840940400

# கொள்கைக்கு பெருமை சேர்க்கும் பாலா

தேசிய அளவில் சிறந்த திரைப்படம் தந்த இயக்குனர் என்ற விருதை மத்திய அரசு இயக்குனர் பாலாவுக்கு வழங்கியுள்ளது. அவர் இயக்கிய 'நான் கடவுள்' என்ற படத்துக்காக, இந்த சிறப்பினைப் பெற்றுள்ளார். பத்திரிகையாளர்கள் அவரை சந்தித்து, "தேசிய விருது கிடைத்ததற்காக கடவுளுக்கு நன்றி தெரிவித்தீர்களா?" என்று கேட்டவுடன், பாலா, அதற்கு நறுக்கென்று பதிலளித்துள்ளார்.

'நான் கடவுள்' படத்தில், கடவுளா வந்து நடித்தார்?

கடவுளா வந்து மேக் அப் போட்டார்?

கடவுளா வந்து உடையலங்காரம் செய்தார்?

கடவுளா வந்து காமிராவை ஆப்பரேட் செய்தார்?

கஷ்டப்பட்டு நடித்தவர்கள் நடிகர்கள்; நடிகைகள்.

கஷ்டப்பட்டு உழைத்தவர்கள் தொழிலாளர்கள்.

இல்லாத கடவுளுக்கு நான் ஏன் நன்றி சொல்ல வேண்டும்?"

- என்று திருப்பிக் கேட்டுள்ளார்.

பாலாவை அறிவுலகம் பாராட்டுகிறது. தேசிய விருதுகளைப் பெரும் திறமையுள்ள இயக்குனர்கள், பகுத்தறிவாளர்காக தங்களை அடையாளம் காட்டும் துணிவைப் பெற்றிருப்பதன் மூலம், பகுத்தறிவு கொள்கைகளுக்கு பெருமை சேர்க்கிறார்கள்.

## சீர்காழி கழகத் தோழர் பெரியார் செல்வம்– கனிமொழி சாதி மறுப்பு மணவிழா

நாகை மாவட்டத் தலைவர் இரா. பரசுராமன் மகனும், சீர்காழி நகரத் தலைவரும் தலைமைச் செயற் குழு உறுப்பினருமான பெரியார் செல்வம்-கனிமொழி ஆகியோர் வாழ்க்கை இணை நல வரவேற்பு விழா 10.10.2009 சனிக்கிழமை மாலை 5 மணியளவில் சீர்காழி பழைய பேருந்து நிலையம் அருகிள்ள சுபம் திருமண மண்டபத்தில் நடந்தது. சாதி மறுப்பு விழாவிற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கினார். அனைவரையும் வரவேற்றார் பெரியார் செல்வம், தி.மு.க. நகர செயலாளர் இரா. பொன்முடி, பா.ம.க. மாவட்டச் செயலாளர் க. அகோரம், விடுதலை சிறுத்தைகள் கட்சி ஸ்டாலின், தமிழ்ச் சங்கம் கோ. நடராசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ம.தி.மு.க. ஆலோசனைக் குழு உறுப்பினருமான கா. சுப்பு வேலு, கழகப் பொதுச் செயலாளர் கோவை இராம கிருட்டிணன், விடுதலை இராசேந்திரன், பா.ம.க. பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினர் தி. வேல்முருகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

# வெற்றிகரமாக தொழில் நடத்த...

கி. வீரமணி நடத்துவது மக்களால் நடத்தும் மக்கள் பல்கலைக்கழகமாம்! எனவே வழக்கை சந்திக்க நிதி திரட்ட ஆரம்பித்துவிட்டார்!

ஆமாம்! நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களை சமூகநீதி பல்கலைக்கழகம் என்று கூற முடியாது. காரணம் அங்கு இடஒதுக்கீட்டைப் பின்பற்ற வேண்டும் என்று கட்டாயமே இல்லை.

'மக்களால் உருவாக்கப்பட்ட மக்கள் பல்கலைக்கழகம்' என்று வசனம் பேசுகிறார்.

மக்கள் கூட இருக்கட்டும், பெரியார் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கே கறாராக, கட்டணத்தை வைத்தால்தான் அங்கே இடம்.

தமிழகத்தில் ஒரு நிகர்நிலை பல்கலைக்கழகம்கூட 69 சதவீத இட ஒதுக்கீட்டை பின்பற்ற முன்வரவில்லை என்கிறார் அமைச்சர் பொன்முடி!

குடும்ப நிறுவனங்களாக மாற்றிக் கொண்டு, வர்த்தகமாக்கிவிட்டார்கள் என்று குற்றம்சாட்டுகிறது மத்திய மனிதவளத் துறை அமைச்சகம்.

இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு வீரமணியிடம் எந்த பதிலும் கிடையாது.

இப்படி, கல்வியை வணிகமாக்கிக் கொண்டு, வழக்குக்கு நிதியும் திரட்டுகிறார்கள்!


ஏற்கனவே வணிகமாக்கியவர்கள், தடையை வைத்தும் பணம் வசூலிக்கிறார்கள். வெற்றிகரமாக தொழில் நடத்தும் கலைக்கு வீரமணி ஒரு நூலே எழுதலாம். அவ்வளவு தகுதியும் அவருக்கு இருக்கிறது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 4th Febuary 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

2010 02



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2041 பிப்ரவரி 11, 2010 புரட்சி 9 முழக்கம் 5 விலை: ரூ.2.50

## சென்னையில் கண்டன ஆர்ப்பாட்டம்

# செங்கை சிறப்பு முகாமில் கொடூரத் தாக்குதல்

*செங்கல்பட்டு சிறப்பு அகதிகள் முகாமில் ஈழத் தமிழர்கள் மீது காவல்துறையினர் 150 பேர் கடந்த 2 ஆம் தேதி நள்ளிரவில் சுவர் ஏறி குதித்து உள்ளே சென்று மூர்க்கத்தனமாகத் தாக்குதலை நடத்தியதைக் கண்டித்து தமிழினப் பாதுகாப்பு போராட்டக் குழு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் பிப்.4 ஆம் தேதி மாலை 4 மணியளவில் நடை பெற்றது.*

சென்னை மெமோரியல் அரங்கு அருகே, ஒரே நாள் இடைவெளியில் நடத்தப்பட்ட கண்டன ஆர்ப்பாட்டத்தில் பெருமளவில் தோழர்கள் திரண்டு, காவல்துறையின் காட்டுமிராண்டித் தாக்குதலுக்கு எதிராக கண்டன முழக்கங்ளை எழுப்பினர். ஆர்ப்பாட்டத்துக்கு ஊடகவியலாளர் அய்யநாதன் தலைமை தாங்கினார். கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலை வகித்தார்.

கடுமையான தாக்குதலினால் ஒவ்வொருவர் உடலிலும் அழுத்தமான காயங்கள் பதிந்திருந்ததை நேரில் சென்று பார்வையிட்டு வந்த வழக்கறிஞர் புகழேந்தி, ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று உரையாற்றும்போது குறிப்பிட்டார். 33 தமிழர்கள் மட்டுமே அடைக்கப்பட்டுள்ள அந்த முகாமில் மிக மோசமாக மனித உரிமைகள் ஏதுமின்றி நடத்தப்படுகிறார்கள். உறவினர்கள்கூட அவர்களை எளிதில் சந்தித்துப் பேச முடியாது. தங்கள் மீதான வழக்குகளை 5 ஆண்டுகாலமாக விசாரிக்காமல் தடைப்படுத்தி வருவதை சுட்டிக்காட்டி வழக்கை விரைந்து முடிக்க வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை முன் வைத்து உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகிறார்கள். நியாயத்துக்காக தொடர்ந்து போராடும் தமிழர்களை அச்சுறுத்தி, இனி அவர்கள் போராடவே கூடாது என்று பாடம் கற்பிக்கும் நோக்கத்துடனேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று ஆர்ப்பாட்டத்தில் பேசிய பலரும் குற்றம் சாட்டினர்.

2 ஆம் தேதி காலை தங்கள் முகாமை உள்ளுக்குள் தாளிட்டுக் கொண்டு, போராளிகள் உண்ணா விரதப் போராட்டம் நடத்தினர். பகல் முழுதும் காவல்துறை, அமைதியாக இருந்துவிட்டு, நள்ளிரவில் 150 பேர் சுவர் ஏறி குதித்து, தமிழர்களைத் தாக்கியுள்ளனர். சுவர் ஏறி குதித்து தாக்க வேண்டிய அவசியம் என்ன என்ற கேள்வியை வழக்கறிஞர் புகழேந்தி எழுப்பினார். அதிகாரிகள் தங்கள் கடமையை நிறைவேற்றாமல் தடுத்ததாக குற்றம் சாட்டி, 13 பேர் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். படுகாயமடைந்தவர்களின் பெயர், காயமடைந்த உடல் பகுதிகளை வழக்கறிஞர் புகழேந்தி, விவரமாக நேரில் சந்தித்து தயாரித்திருந்தார்.

கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் பேசுகையில், “சிறப்பு முகாம் என்பதேகூட சட்ட விரோதமான முகாம்; அது முகாம் என்ற வரையறைக்குள்ளும் வரவில்லை; சிறை என்ற வரையறைக்குள்ளும் வரவில்லை; சிறை என்றால் கூட, அதற்காக பின்பற்றப்பட வேண்டிய விதி முறைகள் உண்டு. சிறப்பு முகாமில் எந்த விதிகளும் பின் பற்றப்படவேண்டிய அவசியமில்லை. முகாமில் அடைக்கப்பட்டுள்ளவர்களின் உறவினர்கள், குடும்பத்தினர், தமிழ்நாட்டில், வெவ்வேறு அகதி முகாம்களில் பிரித்து வைக்கப்பட்டுள்ளனர். குடும்பத்தினரோடு சேர்ந்து வாழ்வதைக்கூட அரசு அனுமதிக்க மறுக்கிறது. உலக செம்மொழி மாநாட்டை கோலாகலமாக நடத்துவதற்கு தயாராகும் தி.மு.க. அரசு, ஈழத் தமிழர்கள் மீது கொடூரமான தாக்குதலை நடத்தி, அவர்களின் ரத்தத் துளிகள் மீது விழா எடுப்பது என்ன நியாயம்?” என்று கேட்டார்.




மறுமலர்ச்சி தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் மல்லை சத்யா பேசுகையில், முகாமில் இருப்பவர்கள் அதிகாரிகளைக் கடமையை செய்யவிடாமல் தடுத்தார்கள் என்றால், அதற்காக, வழக்கு தொடர வேண்டுமே தவிர, மூர்க்கத்தனமாக தாக்குவதா என்று கேட்டார். ஆர்ப்பாட்டத்தில், ஆவடி மனோகரன், தீராளன் (புரட்சிகர இளைஞர் முன்னணி), வழக்கறிஞர் கயல், வழக்கறிஞர் அமர்நாத், கவிஞர் தமிழேந்தி, நாம் தமிழர் இயக்க சென்னை மாவட்ட அமைப்பாளர் அதியமான் உள்ளிட்டோர் பேசினர்.

பெரியார் திராவிடர் கழகத் தோழர்களும், தமிழ் அமைப்புகளைச் சார்ந்தோரும் பெருமளவில் பங்கேற்றனர். முதலில் ஆர்ப்பாட்டத்துக்கு அனுமதி மறுத்து, தோழர்களை கைது செய்ய தயாராக வந்திருந்த காவல்துறை, கடைசி நிமிடத்தில் அனுமதி வழங்கியது.

மாவட்டக் கழகத் தலைவர் தபசி. குமரன் நன்றி கூறினார்.

**– நமது செய்தியாளர்**

## ராகவேந்திரா மடம் தாக்குதல்

# தே.பா. சட்டம் பாய்ந்த ஈரோடு கழகத்தினர் விடுதலை

திருவரங்கத்தில் பெரியார் சிலை தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து, கழகத் தோழர்கள் பலரும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் தி.மு.க. அரசு கைது செய்தது. ஈரோட்டில் ராகவேந்தர் மடத்தைத் தாக்கி, பார்ப்பனர் பூணூலை அறுத்ததாக ஈரோடு மாவட்டக் கழகத் தலைவர் இராம. இளங்கோவன், கழகப் பொறுப்பாளர்கள் குமரகுருபரன், முருகானந்தம், அர்ச்சுணன், ரஜினி ஆகியோர் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டனர். 8.12.2006 அன்று கைது செய்யப்பட்ட தோழர்கள், அய்ந்தரை மாதம் சிறைவாசத்துக்குப் பிறகு பிணையில் விடுதலையானார்கள். வழக்கு ஈரோடு மாவட்ட விரைவு நீதிமன்றத்தில் நடந்து வந்தது.

பிப்.9 அன்று மாலை 5 மணிக்கு நீதிபதி இராசமாணிக்கம், தோழர்கள் அனைவரையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தார். வழக்கில், கழகத் தோழர்களுக்காக தொடர்ந்து வாதாடி வரும் வழக்கறிஞர் பாப்பா மோகன், இந்த வழக்கிலும் கட்டணம் ஏதும் வாங்காமல் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபடுத்திக் கொண்டு வாதாடினார். விடுதலையான செய்தி வந்தவுடன் தோழர்கள் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர்.

அரசு வழக்கறிஞர், வழக்கில் தண்டனை பெற்றுத்தரவேண்டும் என்பதில் உறுதியாக இருந்து வாதாடிய நிலையில், வழக்கறிஞர் பாப்பா மோகன் நீதிமன்றத்தை பெரியார் கருத்துகளைப் பரப்பும் வாய்ப்பாகப் பயன்படுத்தினார்.

பெரியார் ஒரு புரட்சிக்காரர், சீர்திருத்தவாதியல்ல என்பதற்கு பல்வேறு சான்றுகளை எடுத்துக் காட்டியபோது – நீதிபதி, கருத்துகளை ஆர்வத்துடன் கேட்டார். இந்த வழக்கில் கைது செய்யப்பட்டு, சிறையிலிருந்த செல்லத்துரை, சங்கர் எனும் கழக ஆதரவாளர்கள், வழக்கு விசாரணைக்கு வரவில்லை. எனவே அவர்களை தனியே பிரித்து வழக்கு நடத்தப்பட்டது.

**(உள்ளே – ‘புதிய ஜனநாயகத்துக்கு’ பதில்)**

# குற்றம் காணுவதே இவர்களின் 'மெகா புரட்சி'

*'புதிய ஜனநாயகம்' ஏடு பெரியார் திராவிடர் கழகத்தை கொச்சைப்படுத்துவதில் பேரார்வம் காட்டி எழுதி வருகிறது. 'தினமலர்' பார்ப்பன நாளேட்டின் பாணியில் 'புலி ஆதரவாளர்கள்' என்று கழகத்தினரையும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை ஆதரிப்போரையும் கிண்டல் செய்கிறது.*

"சென்னை இராயப்பேட்டையில் பெரியார் தி.க.வினரை, தி.மு.க. குண்டர்கள் கடுமையாகத் தாக்கி, பெரியார் சிலையையும் சேதப்படுத்தினர். பல பெ.தி.க. தொண்டர்கள் மீது பொய் வழக்கு போடப்பட்டு அலைக்கழிக்கப்பட்டனர். இவை எல்லாம் இப்போது மறப்போம் மன்னிப்போம் என்பதாகிவிட்டன. அண்மையில் இராயப்பேட்டையில் பெரியார் தி.க. நடத்திய பொங்கல் விழாவிற்கு, தங்கள் மீது தாக்குதலை நடத்திய "ஈழத் துரோகிகளை" தி.மு.க.வின் பொறுப்பாளர்களிடமே மேடை அமைப்பு போன்றவற்றுக்கு நன்கொடை பெற்றுக் கொண்டு, அவர்களோடு சேர்ந்து கோலாகலமாகப் பொங்கல் விழாவை நடத்தி முடித்துள்ளனர். 'அது அரசியல்; இது தமிழரின் விழா' என்று நாக்கைச் சுழற்றி விளக்கமும் அளிக்கின்றனர்" என்று எழுதுகிறது, 'புதிய ஜனநாயகம்'! (பிப்ரவரி 2010)

பெரியார் திராவிடர் கழகம் 'நாக்கைச் சுழற்றி' அளித்த அந்த விளக்கத்தில், என்ன தவறு இருக் கிறது என்பதை சுட்டிக்காட்டி விமர்சித்திருந்தால், அதில் 'எழுத்து நாணயம்' இருந்திருக்கும். அந்த நேர்மை கூட ஜனநாயகத்தில் புதிய பாதையைத் தேடி புரட்சி நடத்த வந்தவர்களிடம் இல்லாமல் போய்விட்டது. நாமும் அதே பாணியில் பதில் சொல்வது என்றால், இப்படித்தான் கூற வேண்டும். "அடக்குமுறை", "பொய் வழக்கு", "அலைக் கழிப்பு"களை சந்தித்து வலியைத் தாங்கும் பெரியார் திராவிடர் கழகத்தினர் - தமிழின ஓர்மையைப் பேணும் கவலைக் கொண்டவர்கள். எனவே களப்பணியில் தமிழர்களோடு கை கோர்க்கும் நேரத்தில் கைகோர்த்தும், போர்க்கொடி உயத்த வேண்டிய நேரத்தில் நெஞ்சு நிமிர்த்தியும் போராடுவார்கள். பார்ப்பனியத்தை உள்வாங்கிக் கொண்டவர்கள்தான் செயல் களத்தில் தமிழர்கள் இணைவதை சிதைக்கத் துடிப்பார்கள். சமூகத்தைக் கூறுபோட்டு, தனது அதிகாரத்தை செலுத்துவது தான் பார்ப்பனியம்! புதிய ஜனநாயகத்தின் பார்ப்பனியம் பெரியார் தி.க. மீது நஞ்சைத்தான் கக்கும்.

தமிழ்நாட்டில் ஒரே 'அக்மார்க்' புரட்சியாளர்கள் தாங்கள் மட்டுமே என்பதை பறையடித்து, பிரச்சாரம் செய்யும் 'விடுமுறை நாள்' புரட்சியாளர்களுக்கு காவல்துறையின் அடக்கு முறைகளை சந்திக்கும் அவசியமுமில்லை. அவர்கள் மிகவும் பாதுகாப்பாகவே 'புரட்சி' செய்கிறார்கள். இவர்கள் தேசியப் பாதுகாப்பு சட்டத்தை சந்திக்காத 'தேச பக்தர்கள்' தேசவிரோத சட்டங்கள் இவர்களை நெருங்காது. அடக்குமுறை சட்டங்கள் இவர்களிடம் வாலை சுருட்டிக் கொள்ளும்! அடக்குமுறை சட்டங்களே பாயாத புரட்சியாளர்கள்! பெரியார் திராவிடர் கழகத்தினர் தான் அந்த அடக்கு முறைகளை சந்திக்கிறார்கள். அரசு அடக்கு முறைகளோடு இந்த 'பாதுகாப்புப் புரட்சி'யாளர்களின் அவதூறுகள் வேறு!

'தினமலர்', சுப்ரமணியசாமி, 'இந்து' ராம், ஈ.வெ.கி.எஸ். இளங்கோவன், இராமகோபாலன் வகையறாக்களின் ஒலி குழலாக விடுதலைப் புலிகளை கிண்டல் கேலி செய்து கொண்டு பிரபாகரனை 'சமூக பாசிஸ்ட்' என்று கூறிக் கொண்டு தனது 'புரட்சிகர' அடையாளத்தை வெளிப்படுத்துவதில் புதிய ஜனநாயகத்துக்கு அப்படி ஒரு குதூகலம்!

இந்த 'அகில இந்திய புரட்சியாளர்கள்' தமிழ் நாட்டில் குற்றக் கூண்டில் ஏற்றாத கட்சிகளோ, இயக்கங்களோ, அமைப்புகளோ இல்லை. அரசியல் கட்சிகள், சமுதாய இயக்கங்கள், பெண்கள் அமைப்புகள், தலித் அமைப்புகள், பெரியார் இயக்கங்கள், சுற்றுச் சூழல் அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள், மார்க்சிய லெனினியக் குழுக்கள் என்று அனைத்து கட்சிகளையும், அமைப்புகளையும், இயக்கங்களையும் குற்றவாளி கூண்டில் நிறுத்தி, சகட்டுமேனிக்கு சாடுவதே இவர்களின் மக்கள் புரட்சி. புதிய ஜன நாயகத்தின் பார்வையில் ம.க.இ.க./வி.வி.மு/பு.மா.இ.மு./பு.ஜ.தொ.மு. ஆகிய அமைப்புகளில் இடம் பெறாத எவரும் சந்தர்ப்ப வாதிகள்/சமூகத் துரோகிகள்/பாசிஸ்டுகள்/எதிர் புரட்சியாளர்கள்.

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 11.02.2010**

இவர்கள் வழமையாக நடத்தி வரும் புரட்சிகள் தான் என்ன? தஞ்சையில் ஆண்டுக்கு ஒரு முறை தமிழ் இசை விழா; இப்போது அதுவும் சில ஆண்டுகள் காணாமல் போய் விட்டது. மற்றொரு புரட்சி. சில கூட்டங்களில் போய் உட்கார்ந்து கொண்டு, திடீரென்று எழுந்து எதிர்ப்புக்குரல் எழுப்புவது; இதே போன்ற ஒரு 'புரட்சி'க்கு பெரியார் திராவிடர் கழகத்தையும் அழைத்தார்கள். சென்னைக்கு குஜராத் முதல்வர் நரேந்திரமோடி வந்த நேரம். சென்னை தேனாம் பேட்டை காமராசர் அரங்கில் நடந்த நிகழ்ச்சியில் இதேபோல் 'புரட்சி' நடத்த பெரியார் திராவிடர் கழகத்தினரை சந்தித்தார்கள். நாமும் தோழர் களுடன் கலந்து பேசி தயாராக இருக்கிறோம் என்று அறிவித்தோம். சில நாட்கள் கழித்து மீண்டும் வந்து சந்தித்தனர். 'புரட்சி'யின் அக 'புறச்' சூழல்களை அலசி ஆராய்ந்துவிட்டு, "இந்த 'புரட்சி' வேண்டாம் என்று முடிவெடுத்து விட்டோம்; இந்துத்து வாதிகள் ஏதாவது நடக்கும் என்று எதிர்பார்த்து தயாராக வந்திருப்பார்கள்; அதை நாம் அலட்சியப்படுத்திட முடியாது அல்லவா? எனவே வேண்டாம் என்று முடிவெடுத்து விட்டதாகக் கூறினார்கள். அப்போது மோடிக்கு எதிராக பாசிச எதிர்ப்பு முன்னணி என்ற கூட்டமைப்பு ஒன்று உருவாக்கப் பட்டிருந்தது. அதில் பெரியார் திராவிடர் கழகம் இடம் பெற்றிருந்தது. தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகமும் இடம் பெற்றிருந்தது. 'அக்மார்க்' புரட்சியாளர்கள் இஸ்லாமியர்களோடு இணைந்து நிற்க முடியாது. அது வகுப்புவாத அமைப்பு என்று கூறிவிட்டார்கள்.




தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டை தாங்கள் ஆதரிக்கவும் இல்லை; எதிர்க்கவும் இல்லை என்று இவர்கள் கூறுகிறார்கள். இட ஒதுக்கீடு கொள்கை புரட்சிக்கு பாதகமான அம்சங்களை உள்ளடக்கி புரட்சியைத் தடுக்கிறது என்கிறார்கள். நிலவும் சமுதாயப் பொருளாதார அரசியல் அமைப்பின் கீழ் மக்கள் வெறுப் படைந்து கலவரம் செய்துவிடக் கூடாது என்பதற்காக, ஆட்சி செய்வோரே இந்தக் கொள்கையைக் கொண்டு வந்தார்கள் என்றும், அது நிறுவனமாக்கும் 'ஆட்சி யாளர்களின் கொள்கை' என்றும் கூறுகிறார்கள். இது திராவிடர் கழகத்தினரோ, நீதிக்கட்சியினரோ போராடிப் பெற்ற உரிமையல்ல. ஆட்சியாளர்களாலேயே புகுத்தப் பட்ட கொள்கை என்று விளக்கங்களை அள்ளி வீசுகிறார்கள். (புதிய ஜனநாயகம், ஜூலை 2006)

ஆக, அரசு நிறுவனங்களை உறுதிப்படுத்தும் எந்த நடவடிக்கையும் புரட்சிக்கு எதிரானது என்பது இவர்களின் வாதம். இவர்களே - தில்லை கோயிலை மீண்டும் தீட்சதர் கைப்பற்றாமல் தடுக்க... அனைத்து சாதியினரும் அர்ச்சகராவதற்கான தடையை உடைக்க.... உச்சநீதிமன்றம் போவதற்கு வழக்கு நிதி தாரீர்! என்று வழக்கு நிதி திரட்டு கிறார்கள். 'இந்த வழக்கு நிதி கோரும் அறிக்கையில், இவர்களால் குற்றக்கூண்டில்நிறுத்தப்பட்டுள்ள கட்சிகள், இயக்கங்களைச் சார்ந்தவர் தரும் நிதியை ஏற்க மாட்டோம் என்று அறிவிப்பு ஏதுமில்லை; பெரியார் தி.க., நன்கொடை வாங்கினால்தான் சந்தர்ப்பவாதம்; புரட்சியாளர்களுக்கு அது பொருந்தாது போலும்.

இதேபோல் பெரியார் திராவிடர் கழகம் உச்சநீதிமன்றம் போயிருக்குமானால், அரசு சுரண்டல் நிறுவனங்களிடம் நீதி கேட்கப் போராடும் இவர்கள் சந்தர்ப்பவாதிகள். கோயில்கள் என்ற நிறுவனத்தைக் காப்பாற்று கிறவர்கள் என்று புதிய ஜனநாயகத்தில் அனல் பறக்க எழுதியிருப்பார்கள்.

ஆனால் புரட்சியாளர்கள் என்றால், நீதிமன்றம் போகலாம்; அதற்காக கட்சி, மத, இயக்க வேறுபாடின்றி நிதி திரட்டலாம்.

இப்போது உச்சநீதிமன்றத்தின் படிக்கட்டுகளில் ஏறி, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆவதை உறுதி செய்யக் கிளம்பி விட்டோம் என்று மார்தட்டுகிறவர்கள், அன்று தி.மு.க. அரசு, அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும், புதிய சட்டத்தை, 2006 ஆம் ஆண்டு கொண்டு வந்தபோது என்ன எழுதினார்கள்?

- மதம் என்பது தனி நபர் பிரச்சினை. அது நிறுவனமாக இருந்து கொண்டு எந்தப் பிரிவு மக்கள் மீதும் ஆதிக்கம் செலுத்த முடியாது என்று இந்திய அரசியல் சட்டம், மதச் சார்பற்றதாக ஆக்கப்படும் வரை நீதிமன்றம் போய் எந்தப் பயனும் கிடைக்காது.
- உச்சநீதிமன்றமே ஆகம விதிகளுக்கு விளக்கம் கூறும் பார்ப்பனப் புரோகிதர்களாக செயல்படுகிறது. இதை அரசியல் சட்டமும் ஏற்கிறது. இந்த அரசியல் சட்டத்தை, இங்குள்ள ஓட்டுப் பொறுக்கி அரசியல் கட்சிகள் மதச்சார்பற்ற சட்டம் என்று கொண்டாடுகிறார்கள்.
- அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்பதை ஒரு சீர்திருத்தச் சட்டம் என்று வேண்டுமானால் கூறலாம். ஆனால் இந்த சீர்திருத்தத்தை சட்டத்தின் மூலம் மட்டுமே நிலைநாட்டிட முடியுமா? முடியாது. சமுதாயத்தின் ஆதரவைப் பெறாத எந்த சீர்திருத்தச் சட்டமும் வெற்றி பெறாது.
- 1972 இல் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகும் சட்டம் கொண்டு வரப்பட்டது. என்ன பயன் கிடைத்தது? 2006 ஆம் ஆண்டு வரை பார்த்தால் மொத்த சமூகமும் முன்பைவிட பார்ப்பனியத்தை உள்வாங்கி, எங்கும் பார்ப்பன மயமாய் இருக்கிறது.

- என்று சட்டங்களையோ, நீதிமன்றங்களையோ நம்பக் கூடாது என்று 2006 ஆம் ஆண்டில் எழுதியது இவர்கள்தான்! (புதிய கலாச்சாரம், ஜூலை 2006) அவர்களே இப்போது உச்சநீதி மன்றம் போவதற்கு வழக்கு நிதி திரட்டி தங்கள் 'சந்தர்ப்பவாதமற்ற', 'புரட்சிகர வளர்ச்சிப் போக்கை' கடைவிரித்திருக்கிறார்கள்!

கவிஞர் இன்குலாப்பையும் இவர்கள் விட்டு வைக்கவில்லை. ஈழப் படுகொலைக்கு துணை நின்ற துரோகத்தை ஏற்க மறுத்து தி.மு.க. ஆட்சி வழங்கிய கலைமாமணி விருதை, தன்மானத்துடன் திருப்பி அனுப்பிய கவிஞர் இன்குலாப். இதுபற்றி, 'புதிய ஜனநாயகம்' இப்படி எழுதியிருக்கிறது.

*"பொருள் அற்ற கலைமாமணியை உதறிய இன்குலாப், ஈழத் தமிழனின் அழிப்பை நடத்திய மத்திய அரசின் செம்மொழி ஆய்வு மய்யத்தில், தனது திட்டம் ஒன்றுக்காக, அண்மையில் இரண்டரை லட்சம் ரூபாய் பெற்றுக் கொண்டதை ஏன் திருப்பிக் கொடுக்கவில்லை?" என்ற "அறிவார்ந்த" கேள்வியை எழுப்புகிறது.*

தமிழ் செம்மொழி நிறுவனம், மத்திய அ ரசின் நிதி உதவியோடு தமிழ்நாட்டில் இயங்குகிறது. கவிஞர் இன்குலாப், பேராசிரியர் மங்கை, பேராசிரியர் மில்லி ஆகியோரடங்கிய 'மரப்பாச்சி' என்ற நாடக இயக்கம், நாடக ஆய்வு நடத்தவும், சங்ககால இலக்கியங்களை நாடகமாக்கவும் ஒரு திட்டத்தை இந்நிறுவனத்தின் முன் வைத்து, அதற்கான நிதி ஒதுக்கீட்டையும் பெற்றது. உலகத் தமிழ் செம்மொழி மாநாடு அறிவிப்புக்கு முன்பே, இதற்கான அனுமதி கிடைத்துவிட்டது. செம்மொழியாக தமிழ் அங்கீகரிக்கப்பட்டதையே ஏற்கக்கூடாது என்றும், செம்மொழி நிறுவனத்தின் கீழ் எந்த ஆய்வும் மேற்கொள்ளக் கூடாது என்றும், அதுதான் உண்மையான 'புரட்சி' என்றும், 'புதிய ஜனநாயகம்' கூறுகிறதா, என்பது நமக்குப் புரியவில்லை.

ஈழத் தமிழினத்துக்கு துரோகம் செய்த இந்தியாவில், அதற்கு துணை நின்ற தமிழகத்தில் காங்கிரஸ்-தி.மு.க. ஆட்சி நடக்கும் போது, புலி ஆதரவாளர்கள் வாழலாமா? மூச்சு விட்டுக் கொண்டிருப்பதே சந்தர்ப்பவாதமல்லவா? என்றுகூட புதிய ஜனநாயகம் அசைக்க முடியாத ஆணித்தரமான

(4 ஆம் பக்கம்)

# ‘குரு’விடமிருந்து ‘தந்தை’க்கு மாறிய அதிகாரம் (2)

*சென்னை பல்கலைக்கழக கருத்தரங்கில் 27.11.2009 அன்று அம்பேத்கர் நோக்கில் சாதியம் தோன்றிய சமூக வரலாற்றை விளக்கி பேராசிரியர் ஆ. சிவசுப்பிர மணியன் ஆற்றிய உரை இது.*

நான்கு வருண அமைப்பு இறுக்கமான ஒன்றாக இல்லாதிருந்து பின்னர் இறுக்கமான சாதியாக மாற்ற மடைந்ததை அம்பேத்கர் விரிவாக ஆராய்ந்துள்ளார். இம்முயற்சியில் முதல்கட்டமாக வருணம் சாதியாக மாறியதன் வரலாற்றுப் பின்புலத்தை வெளிப் படுத்தியுள்ளார்.

கி.மு. 185 இல் புஷ்யமித்திரன் என்ற பிராமணப் படைத் தளபதி மௌரிய பரம்பரையில் வந்த தன் மன்னனைக் கொலை செய்துவிட்டு சுங்க மரபை நிறுவினான். இதை புஷ்யமித்திரன் என்ற தனி மனிதனின் செயலாக அம்பேத்கர் பார்க்கவில்லை. புஷ்யமித்திரனின் இச்செயலை ‘பிராமணியப் புரட்சி’ என்று அடைமொழியிட்டு அழைக்கும் அம்பேத்கர், **‘புஷ்யமித்திரனின் புரட்சி புத்த சமயத்தைத் தூக்கியெறிவதற்காக பிராமணர்கள் தூண்டி விட்ட அரசியல் புரட்சி’** என்கிறார்.

புஷ்யமித்திரனைக் கருவியாகக் கொண்டு பிராமணியம் வெற்றி பெற்ற பின்னர் மேற்கொண்ட தீச்செயல்களைப் பின்வரும் ஏழு தலைப்புகளில் அம்பேத்கர் (1995:172-173) பட்டியலிடுகிறார்:

1. ஆட்சி செய்வதற்கும் மன்னனைக் கொல்வதற்கும் பிராமணனுக்கு உரிமை உண்டு என்பதை அது நிலைநிறுத்தியது.
2. பிராமணர்களைத் தனிச் சலுகைகள் பெற்ற ஒரு வகுப்பாக அது ஆக்கியது.
3. அது வர்ணத்தைச் சாதியாக மாற்றியது.
4. வெவ்வேறு சாதிகளிடையே போராட்டங்களை யும் சமூக விரோத உணர்வையும் அது உரு வாக்கியது.
5. அது, சூத்திரர்களையும் பெண்களையும் தாழ்ந்த நிலைக்குத் தள்ளியது.
6. படிப்படியான ஏற்றத் தாழ்வு முறையை அது தோற்றுவித்தது.
7. மரபொழுங்குகளை அடிப்படையாகக் கொண்ட தாகவும், நெளிவு சுழிவானதாகவும் இருந்த சமூக அமைப்பை அது மாற்றிச் சட்டத்துக்கு உட்பட்ட தாகவும் கடுமையானதாகவும் செய்தது.

இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளவை அனைத்தையும் அவர் விளக்கியிருந்தாலும் இக் கட்டுரையின் தலைப்புடன் தொடர்புடைய **‘வர்ணத்தைச் சாதியாக மாற்றியது’** என்ற தலைப்பில் அவர் கூறியுள்ள செய்திகளை மட்டும் சுருக்கமாகக் காண்போம்.

> “வருணதரும் முறையைச் சாதியாக உருமாற்றம் செய்ததுதான் பிராமணியம் தனது வெற்றிக்குப்பின் முதன்மையாக ஈடுபட்ட மிகப் பெரிய சுயநல நோக்குள்ள செயலாகும்”

- என்று குறிப்பிடும் அம்பேத்கர் (1995:186) தன் கூற்றை

> “பிராமணியம் வருணத்தைச் சாதியாக மாற்றியது என்று நான் கூறும்போது அந்தஸ்தையும் தொழிலையும் பரம்பரையாக வருவதாக அது மாற்றிவிட்டது என்பதையே குறிப்பிடுகிறேன்”

- என்று விளக்குகிறார். இம்மாற்றமானது ஒரே காலத்தில் நிகழவில்லை என்றும் பின்வரும் மூன்று கட்டங்களாக அது நிகழ்ந்தது என்றும் கூறுகிறார். (மேலது: 188)

1. முதல் கட்டத்தில் ஒருவருடைய வருணம் - அதாவது, அந்தஸ்தும் தொழிலும் ஒரு குறிப்பிட்ட கால அளவே நீடித்தது.
2. இரண்டாவது கட்டத்தில் ஒருவரது வருணம் அவரது ஆயுட்காலவரை நீடித்தது.
3. மூன்றாவது கட்டத்தில் பரம்பரை அடிப்படையில் வரும் சொத்து போல் வருணம் ஆகிவிட்டது.”

இனி இம்மூன்று கட்டங்கள் குறித்துக் காண்போம்.



### முதல் கட்டம்

ஒருவரின் வருணம் ஒரு யுகம் அளவுக்கு - அதாவது, நான்காண்டு காலம் வரை முதல் கட்டத் தில் நீடித்தது. நான் காண்டுகள் முடிந்தபின் **‘மன்வந்தரம்’** என்பது நிகழ்ந்தது. இதன்படி குழு வொன்று நேர்காணல் நிகழ்த்துவது போல் செயல்பட்டு சிலருடைய வருணத்தை நீடிக்கச் செய்தது. சிலருடைய வருணத்தை மாற்றியது. இது சிலருக்கு வருண உயர்வையும், சிலருக்கு வருணத் தாழ்வையும் வழங்கியது. ஒருவருடைய வருணம் நான்காண்டுக்கால அளவு கொண்டதாக இருக்க வேண்டுமா அல்லது நீடிக்க வேண்டுமா என்பதை மன்வந்தரம் முடிவு செய்தது.

### இரண்டாவது கட்டம்

இரண்டாவது கட்டத்தில் வருணத்தை முடிவு செய்யும் இடமாகக் குருகுலம் மாறியது. கல்வி பயின்று முடிந்தபின் உபநயனம் என்ற சடங்கிற்கு மாணவன் ஆட்படுத்தப்பட்டான். இச்சடங்கில் மாணவனது வருணம் என்ன என்பதை குரு தீர்மானித்தார்.

தன்னிடம் மாணவன் பெற்ற பயிற்சியின் அடிப்படையிலேயே குரு மாணவனின் வருணத்தை முடிவு செய்தார். அவர் முடிவு செய்த வருணம் அம்மாணவனது ஆயுட்காலம் வரை நீடித்தது.

### மூன்றாவது கட்டம்

குருகுல முறையில் குருவால் முடிவு செய்யப்படும் வருணம் ஒருவனது ஆயுட்காலம் வரை நீடித்தது. பிராமணியத்துக்கு நிறைவளிக்கவில்லை. இதற்கான காரணத்தை,

> “இந்த முறையில், ஆசாரியர் ஒரு பிராமணனின் குழந்தையைச் சூத்திரனாக இருப்பதற்குத்தான் தகுதியுடையவன் என்று அறிவிக்கக்கூடிய நிலை இருந்தது. இத்தகைய ஒரு முடிவு ஏற்படாமல் தடுக்க வேண்டும் என்பதில் பிராமணியத்துக்கு இயல்பாகவே அக்கறை ஏற்பட்டது. வருணம் பரம்பரையாக வரவேண்டும் என்று அது விரும்பியது. வருணத்தைப் பரம்பரையாக வருவதாகச் செய்தால்தான் பிராமணர்களின் குழந்தைகள் சூத்திரர்களாக அறிவிக்கப்படாமல் காப்பாற்ற முடியும்.” (மேலது: 191)

என்று அம்பேத்கர் குறிப்பிடுகிறார். தன் நோக்கத்தை நிறைவேற்றும் வழிமுறையாக ‘உபநயனம்’ சடங்கைச் செய்யும் உரிமையைக் குருவிடமிருந்து பறித்து தந்தைக்குப் பிராமணியம் வழங்கியது. உபநயனம் செய்யும் உரிமை பெற்ற தந்தை தன் வருணத்தையே குழந்தைக்குக் கொடுப்பது எதிர்பார்க்கக் கூடியதே. இம்முறையினால் வருணம் என்பது பரம்பரைச் சொத்து போலானது.

> “வருணத்தைத் தீர்மானிக்கும் அதிகாரத் தைக் குருவிடமிருந்து எடுத்துவிட்டுத் தந்தையிடம் அதைக் கொடுத்த தன் மூலம்தான் பிராமணீயம் இறுதியாக வருணத்தைச் சாதியாக மாற்றியது.” (மேலது: 192)

என்று கூறும் அம்பேத்கர் தன் கருத்தை மேலும் வலியுறுத்தும் வகையில்,

> “இதுதான் வருணம் சாதியாக மாறிய கதை. கிடைத்துள்ள ஆதாரங்களிலிருந்து உரு வாக்கப்பட்டதாகும். முன்பே கூறிய காரணங் களினால் இதன் எல்லா விவரங்களும் நாம் விரும்பும் அளவுக்குச் சரியாக இல்லாம லிருக்கலாம். ஆயினும் மேலே விவரித்துள்ளது போன்ற கட்டங்களிலும் வழிகளிலும் தான் வருணம் மறைந்துபோய் அதன் இடத்தில் சாதி வந்திருக்க வேண்டும். இதில் எனக்கு எந்த ஐயமும் இல்லை.” (மேலது: 192)

என்று எழுதியுள்ளார். இறுதியாக வருணத்தைச் சாதியாக மாற்றியதன் நோக்கம் குறித்து,

> “பிராமணர்களுக்குப் பண்டைக்காலம் முதல் இருந்து வந்த உயர்ந்த அந்தஸ்தை, ஒவ்வொரு பிராமணனுக்கும் அவனுடைய சந்ததிகளுக்கும் அவர்களின் தன்மைகளையோ தகுதிகளையோ கருதாமல், சிறப்பு உரிமை யாக்குவதே இதன் நோக்கம். வேறுவிதமாகச் சொன்னால், பிராமணர்களில் சிலருக்கு அவர் களுடைய சிறப்பியல்பு காரணமாகக் கிடைத் திருந்த உயர்ந்த அந்தஸ்துக்கு ஒவ்வொரு பிராமணனையும் அவன் எவ்வளவு இழி தகைமை கொண்டவனாக இருந்தாலும், உயர்த்தி வைக்க வேண்டும் என்பதே நோக்கம். பிராமண சமுதாயம் முழுவதையும் ஒருவர்கூட விடுபடாமல் உயர்ந்தோர் என்று ஆக்கும் முயற்சி இது.”

என்று விளக்கியுள்ளார். (மேலது: 192)

### தீண்டாமையின் தோற்றம்:

நான்கு வருணங்களுக்கு அப்பால் ‘அவர்ணர்கள்’ என்ற பெயரில் வருணமற்றவர்களாக ஒரு பிரிவினர் உருவாக்கப்பட்டனர். தீண்டாமைக் கொடுமைக்கு ஆட்படுத்தப்பட்ட இம்மக்கள் பிரிவை ‘சண்டாளர்’ என்ற பெயரில் மனு அழைத்தார்.

மனுவுக்கு முன்பாகவே வருணங்களும் சாதிகளும் உருப்பெற்றுவிட்டதைக் குறிப்பிடும் அம்பேத்கர். தீண்டாமை என்பது மனுவின் பங்களிப்பு என்பதை வெளிப்படுத்தினார். இதன் காரணமாகவே மனுதர்ம சாஸ்திரத்தை 1927 டிசம்பரில் நெருப்பிட்டுக் கொளுத்தினார்.

மனுதர்மத்தின் மீது இத்தகைய எதிர்ப்புணர்வை அவர் வெளிப்படுத்தியதற்கான காரணம் என்ன என்பது குறித்தும்,

> “சதுர்வருணமாக சமுதாயத்தை நான்கு வகுப்புகளாகப் பிரிப்பது மனுவுக்குப் பிரதானமாக இருக்கவில்லை. ஓர் அர்த்தத்தில் அது அவருக்கு இரண்டாம் பட்சமானதாகவே இருந்தது. சதுர் வருணத்திற்குள் இருப் போரிடையான ஓர் ஏற்பாடாகவே இதனை அவர் கருதினார். ஒருவன் பிராமணனா, சத்திரியனா, வைசியனா அல்லது சூத்திரனா என்பது பலருக்கு முக்கியமானதல்ல. இது அவருக்கு முன்பே இருந்து வருகின்ற ஒரு பிரிவினை. இந்தப் பிரிவினையை மேலும் தீவிரப்படுத்தி அதற்கு மிகுந்த அழுத்தம் கொடுத்தார். இந்தப் பிரிவினை அவரிடமிருந்து தோன்றியதல்ல. மாறாக, மனுவிடமிருந்து ஒரு புதிய பிரிவினை தோன்றிற்று. (1) சதுர் வருண அமைப்புக்குள் இருப்பவர்கள் (2) சதுர்வருண அமைப்புக்கு வெளியே இருப்பவர்கள் என்பதே இந்தப் பிரிவினை. இந்தப் புதிய சமூகப் பிரிவினை மனுவிடமிருந்து உதித்ததாகும். இந்துக்களின் பண்டைத் தர்மத்துக்கு அவரது புதிய சேர்ப்பு இது. இந்தப் பிரிவினை அவருக்கு அடிப்படையானதாக, மூலாதாரமானதாக, இன்றியமையாததாக இருந்தது. ஏனென்றால், அவர்தான் இந்தப் பிரிவினையை முதலில் உருவாக்கியவர். அதற்கு தனது அதிகார முத்திரை அளித்து அதனை அங்கீகரித்தவர்.”

என்று அம்பேத்கர் (1997:232) விளக்கமளித்துள்ளார்.

அம்பேத்கரின் பங்களிப்பு

இந்தியச் சாதிமுறையின் தோற்றத்தை அதைத் தாங்கி நிற்கும் புனித நூல்களின் வாயிலாகக் கண் டறிந்தது அம்பேத்கரின் குறிப்பிடத்தக்க பணியாகும். இத் தேடலின் தொடர்ச்சியாக இந்து சமயம் என்பது சாதி அமைப்பின் மேல் கட்டப்பட்டிருக்கிறது என்ற முடிவுக்கு வந்தார். இம்முடிவின் அடிப்படையிலேயே,

> “நான் தாழ்த்தப்பட்ட இந்துவாகப் பிறந் தேன். இதைத் தடுத்து நிறுத்துவது என்பது என் ஆற்றலுக்கு அப்பாற்பட்டது. ஆனால் உறுதி யாக உங்களுக்குச் சொல்கிறேன். நான் இறக்கும் போது இந்துவாக இறக்க மாட்டேன்.”

என்ற அவரது புகழ் பெற்ற யால்டா பிரகடனம் அமைந்தது.

*27.11.2009 அன்று சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ் இலக்கியத் துறை அம்பேத்கர் பொருளாதார ஆய்வு மையம் மற்றும் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் இணைந்து நடத்திய கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரை இது.*

**நன்றி: ‘உங்கள் நூலகம்’, ஜன. 2010**

# தமிழ்நாடு அரசின் “இளம் பெண் விஞ்ஞானி விருது” பெற்றார் தோழர் அ.புரட்சிக்கொடி



பெரியார் திராவிடர் கழகக் குடும்பத்தைச் சேர்ந்தவரும் திருச்சி அண்ணா பல்கலைக்கழகத்தின் மருந்தியல் தொழில்நுட்பத்துறையில் உதவிப் பேராசிரியராகவும், அண்ணா பல்கலைக்கழக கல்விக்குழு இயக்குநராகவும் பணியாற்றி வருபவருமான முனைவர் அ.புரட்சிக்கொடிக்கு தமிழ்நாடு அரசின் ‘இளம் பெண் அறிவியலாளர் விருது’ (Young Women Scientist ) கிடைத்துள்ளது. இவரது பெற்றோர் ஆய் அறிவன் - அறிவொளி இருவரும் பெரியார் தொண்டர்கள். ஜாதி, தாலி மறுப்புத்திருமணம் செய்தவர்கள். பெரியாரால் பெயர் சூட்டப்பட்ட புரட்சிக்கொடியும் ஜாதி, தாலி மறுப்புத் திருமணம் செய்துகொண்டவர். அவரது துணைவர் கழகச் செயல் வீரர் தோழர் திண்டுக்கல் தாமரைக் கண்ணன்.

நோயின் தன்மையிலிருந்து மீளும் வேகத்தை அதிகப்படுத்தும் ஹைட்ரோசைக்ளிக் கூட்டுப்பொருட்களை உருவாக்கும் ஆய்வில் இவர் ஈடுபட்டார். அந்த அடிப்படையில் புதிய ஹைட்ரோசைக்ளிக் கூட்டுப் பொருட்களைக் கண்டறியும் முதல்கட்ட ஆய்வில் வெற்றி பெற்று அடுத்தகட்டமாக அந்தக் கூட்டுப்பொருட்களைப் பயன்படுத்தி பலமுக்கிய நோய்களுக்கு மருந்து கண்டறியும் ஆய்விலும் இவர் ஈடுபட்டுள்ளார். சென்னை ஐ.ஐ.டியில் உயிர் தொழில்நுட்பத்துறையுடன் இணைந்து ஆய்வுகளை நடத்திவருகிறார். தரை மற்றும் கடல்வாழ் தாவரங்களைப் பகுத்தறிந்து அவற்றில் உள்ள உயிரி செயல்திறனை தனிமைப்படுத்தி அதன் மூலம் பல்வேறு நோய்களைக் குணப்படுத்தக்கூடிய மூலக்கூறுகளைக் கண்டறியும் ஆய்விலும் ஈடுபட்டுள்ளார்.

2006 - 2007 ஆம் கல்வியாண்டில் மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை ( DST ) இவரை இளம் விஞ்ஞானியாக அங்கீகரித்து, கடல் வாழ் தாவரங்கள் குறித்த ஆராய்ச்சிக்கு 9,36,000 ரூபாய் வழங்கியது. திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம் இதே ஆராய்ச்சிக்காக 6 இலட்சம் ரூபாய் வழங்கியது. ஹிமாலயா இயற்கைப் பொருட்கள் நிறுவனம் இவரது ஆய்வைப் பயன்படுத்தி சில மருந்துகளை உருவாக்கியுள்ளது.

30 க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளார். உலகப்புகழ்பெற்ற அறிவியல் இதழ்களில் இவரது கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. 4 முறை சர்வதேச அளவிலான ஆராய்ச்சியாளர் மாநாடுகளிலும் 23 தேசிய அளவிலான ஆய்வு மாநாடுகளிலும் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார். தேசிய அளவிலான ஆய்வாளர் மாநாடுகளை 4 முறை நடத்தியும் உள்ளார். தொடர்ச்சியான இந்த ஆய்வுப் பணிகளுக்காக தமிழ்நாட்டு அரசின் உயர்கல்வித்துறை சார்பில் வழங்கப்படும் 2008 ஆண்டுக்கான இளம்பெண் விஞ்ஞானி விருது தோழர் புரட்சிக்கொடிக்கு வழங்கப்பட்டுள்ளது.

கல்வியாளர் முனைவர் மு.அனந்தகிருட்டிணன் தலைமையிலான குழு இந்த விருதுக்கு இவரைத் தேர்ந்தெடுத்தது. பிப்ரவரி 3 அன்று உயர்கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி விருதினை வழங்கினார். விருதுக்கான சான்றிதழும் 20,000 ரூபாய் தொகையையும் அரசு வழங்கியது. அந்த 20,000 ரூபாயை முதுபெரும் பெரியார் தொண்டர்களுக்கான கருந்திணை விடுதிக்கு நன்கொடையாக வழங்கினார். கழகத்தலைவர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர்கள் கோவை இராம கிருட்டிணன், விடுதலை இராசேந்திரன் மற்றும் தமிழ்நாடு முழுவதும் உள்ள பெரியார் தி.க தோழர்கள் தொலைபேசியிலும் நேரிலும் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். பெரியார் பெருந்தொண்டர் திருச்சி சௌந்திரராசன் அவர்கள் விருது வழங்கும் விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தமது மகிழ்ச்சியையும் வாழ்த்தினையும் தெரிவித்தார்.

(2 ஆம்பக்கத் தொடர்ச்சி)

கேள்விகளை எழுப்பலாம். கலைமாமணி விருதை திருப்பி அனுப்பியவர் தனது பென்சன் பணத்தைத் திருப்பி அனுப்புவாரா, என்றுகூட கேட்கலாம்! தமிழ்நாட்டு சத்தியமூர்த்தி பவன் காங்கிரஸ்காரர்கள் கூட இப்படியெல்லாம் கேள்வி கேட்டால், மக்கள் நம்மை சந்தேகிப்பார்கள் என்று தயங்கி நிற்கும்போது, ‘புதிய ஜனநாயகம்’ அதற்கே உரிய புரட்சிகரமான வீரத்துடன், ‘நான் கேட்கிறேன் பார்’ என்று வெளியே வந்திருக்கிறது.

“பன்னாட்டு நிறுவனங்கள் தரும் ஊதியத்தை நான் ஏற்க மாட்டேன்; ஒடுக்குமுறை அரசு அமைப்பின் கீழ் நான் குடிமகனாக இருக்க மாட்டேன்; ஒடுக்குமுறை அரசு நிறுவனத்தில் ஊழியராக பணி செய்ய மாட்டேன்; அப்படியே பணி செய்தாலும், அதற்கு ஊதியம் பெற மாட்டேன்” என்ற முடிவுகளுக்கு எல்லாம் ‘புதிய ஜனநாயக’வாதிகள் வந்து விடமாட்டார்கள் என்பது நமக்குத் தெரியும். காரணம் மற்றவர்களை மட்டுமே கேள்விகளைக் கேட்டு குற்றக்கூண்டில் நிறுத்தும் சுத்த சுயம்பிரகாச புரட்சியாளர்கள் அல்லவா?

பெரியார் திராவிடர்கழகம் வீண் சர்ச்சைகளில், நேரத்தை விரயமாக்காமல், அதற்கான செயல் திட்டங்களில் களப்பணியைத் தொடரவே விரும்புகிறது. பெரியார் திராவிடர் கழகத்தின் மீது பொறுப்பற்ற வீண் அவதூறுகளையும், வசவுகளையும், வீசியே தீருவோம் என்று புதிய ஜனநாயகம் முடிவெடுத்து விட்டால் அதை சந்திக்க தயாராகவே இருக்கிறோம் என்பதை மட்டும் சொல்லி வைக்கிறோம்!

– ‘இரா’

# கழக சார்பில் முத்துக்குமார் நினைவுப் பலகை



எரியும் ஈழத்திற்காக தன் உடலை எரித்துக் கொண்ட முத்துக் குமாரின் முதலாம் ஆண்டு வீர வணக்க நாள் 29.1.2010 வெள்ளிக் கிழமை காலை 9.30 மணியளவில் சென்னை இராயப் பேட்டை பெரியார் படிப்பகம் பெரியார் சிலை அருகில் முத்துக் குமார் நினைவு பெயர் பலகையை திறந்து வைத்து கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், வீர வணக்க உரை நிகழ்த்தினார். பின்னர் முத்துக் குமார் உடல் வைக்கப் பட்டிருந்த இடமான சென்னை கொளத்தூரில் தற்காலிகமாக வைக்கப்பட்டிருந்த முத்துக்குமார் நினைவு தூணுக்கு கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் வீர வணக்கம் செலுத்தினார். இந் நிகழ்ச்சிகளில் 100க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

## வடசென்னையில் காந்தி படுகொலை கண்டன நாள்

30.1.2010 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் வடசென்னை மாவட்ட கழகம் சார்பில் பெரம்பூர் ராகவன் தெரு காந்தி சிலை அருகில் காந்தியார் நினைவு நாள் பொதுக் கூட்டம் சொ. அன்பு தலைமையில், டி.ஜி. அரசு வரவேற்க, எ. கேசவன், நா. பாஸ்கர், சீ. மணிவண்ணன் ஆகியோர் முன்னிலை வகிக்க, கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் சிறப்புரையாற்றினார். கழக வழக்கறிஞர் சு. குமாரதேவன், அன்பு தனசேகர், ச. குமரன் மற்றும் தோழர்கள் உரையாற்றினர். முன்னதாக சி. அருள்தாசு, நாத்திகன் ஆகியோர் இன எழுச்சிப் பாடல்களை பாடினர். மு. சுதாகர் நன்றி கூற கூட்டம் 10.25 மணியளவில் நிறைவு பெற்றது. சி. பாஸ்கர், பி.கந்தன், ந. தட்சிணாமூர்த்தி, ஜெயவேலு, அருண்குமார் மற்றும் தோழர்கள் கூட்டம் சிறப்புற நடைபெற இணைந்து பணியாற்றினர்.

## எழுச்சியுடன் நடந்த மாவட்டக் கலந்துரையாடல்



2.2.2010 செவ்வாய் கிழமை மாலை 7 மணியளவில் சென்னை மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் இராயப் பேட்டை இலாயிட்சு சாலையிலுள்ள முருகேசன் திருமண மண்டபத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது. கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், கழக வழக்கறிஞர் செ. துரைசாமி, கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் கருத்துரையாற்றினர். இந் நிகழ்ச்சியில் எ. கேசவன், அன்பு தனசேகர், தபசி குமரன், இரா. உமாபதி, ச. குமரன், ஜெயந்தி, தமிழ்ச் செல்வி உள்பட 20க்கும் மேற்பட்ட தோழர்கள் உரையாற்றினர். 100க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். இளைய சிம்மன் நன்றி கூறினார்.

27, 28.2.2010 காஞ்சிபுரத்தில் நடைபெறவுள்ள சென்னை மாவட்ட பயிற்சி முகாம், ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ சந்தா சேர்த்தல், சென்னை மாவட்ட கழக செயல்பாடுகளுக்கு கழகத் தோழர்கள் மாதம் ரூ.100 செலுத்துவது போன்றவை குறித்து தோழர்கள் கருத்து தெரிவித்தனர்.

### ‘தமிழன்’ தொலைக்காட்சியில் விடுதலை இராசேந்திரன்


தமிழன் தொலைக்காட்சியில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், ‘கிழக்கு வெளுக்குமா’ என்ற தலைப்பில் ஈழப் பிரச்சினைக் குறித்து அளித்துள்ள நேர்முகம் பிப். 14 (ஞாயிறு), பிப். 21 (ஞாயிறு) தேதிகளில் காலை 9 மணியிலிருந்து 9.30 மணி வரை ஒளி பரப்பாகிறது.

**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 9840940400

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 12th February 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2041 பிப்ரவரி 18, 2010 புரட்சி 9 முழக்கம் 6 விலை: ரூ.2.50


## "குடிஅரசு" வழக்கில் நீதிபதி கருத்து

# பெரியாருக்கே எதிரான வழக்கு

*பெரியார் உயிருடன் இருந்திருப்பாரேயானால், அவருடைய கருத்துகளைப் பரப்புவதற்கு தடை கோரும் வழக்கை, நீங்கள் தொடர்ந்திருக்கவே முடியாது என்று – "குடி அரசு" வழக்கை விசாரிக்கும் மூத்த நீதிபதி எப்.எம். இப்ராகிம் கலிஃபுல்லா, வீரமணி வழக்கறிஞரிடம் கூறினார்.*

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணனுக்கு எதிராக 'குடி அரசு' ஏட்டில் பெரியார் எழுதிய - பேசிய எழுத்துகளை வெளியிடத் தடைகோரியும், ரூ.15 லட்சம் இழப்பீடு கேட்டும் கி.வீரமணி தொடர்ந்த வழக்கு, உயர்நீதிமன்றத்தில் பிப்.16 அன்று நீதிபதிகள் எப்.எம். இப்ராகிம் கலிஃபுல்லா, எஸ். கிருபாகரன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. கி.வீரமணியின் சார்பில் வாதிட்ட வழக்கறிஞர், பெரியார் 1952 இல் 'விடுதலை'யில் எழுதிய ஒரு தலையங்கத்தில், அறக்கட்டளையின் சொத்துகளாக, ஒரு லட்சம் ரூபாய் அச்சகம், நூல்கள், அதன் விற்பனை உரிமை என்று எழுதியிருப்பதையே மீண்டும் மீண்டும் சுட்டிக் காட்டினார்.

மற்றொரு சான்றாக வே. ஆனைமுத்து எழுதிய பதிப்புரையை எடுத்துக் காட்டினார். திருச்சி சிந்தனையாளர் கழகத்தின் சார்பில் வே. ஆனைமுத்து தொகுத்து, பெரியார் சிந்தனைகள் மூன்று தொகுதிகளாக பெரியார் இருந்த காலத்திலே தொகுத்தார். பெரியார் மறைவுக்குப் பிறகு வெளியிடப்பட்டது. அதில் வே. ஆனைமுத்து எழுதிய முன்னுரையில் பெரியாரிடம், அவரது எழுத்துகளைக் காட்டி ஒப்புதல் பெற்றதாகவும், பெரியார், அதை வெளியிட தனக்கு பதிப்புரிமை வழங்கியதாகவும் குறிப்பிட்டிருந்தார். கி.வீரமணியின் வழக்கறிஞர், ஆனைமுத்து முன்னுரையை எடுத்துக் காட்டி, பெரியார் பதிப்புரிமை வழங்கியதால்தான், ஆனைமுத்து, பெரியார் சிந்தனைகளை வெளியிட முடிந்திருக்கிறது என்று வாதிட்டார். நீதிபதிகள் இந்த வாதங்களை ஏற்கவில்லை.

முதலில், பெரியார், 'விடுதலை' தலையங்கம் பற்றி குறிப்பிட்ட நீதிபதி இப்ராஹீம் கலிஃபுல்லா, பெரியார் 'விடுதலை'யில் எழுதிய தலையங்கத்தை சட்டப்பூர்வமான ஆவணமாக கருத முடியாது. அப்படியே ஏற்றுக் கொண்டாலும், அதில் பெரியார் குறிப்பிடும் நூல்கள் அறக்கட்டளையின் சொத்து என்று வாதிட்டால், எந்த நூல்களைக் குறிப்பிடு கிறீர்கள்? இப்போது இவர்கள் (பெரியார் திராவிடர் கழகத்தினர்) வெளியிட்டுள்ள, பெரியார் எழுத்து- பேச்சுக்கள் அந்த நூல்களிலிருந்து எடுக்கப் பட்டதா? பெரியார் நடத்திய பத்திரிகையிலிருந்து தானே எடுக்கப்பட்டிருக்கிறது என்று நீதிபதி கேட்டார்.

வே. ஆனைமுத்து எழுதிய முன்னுரை பற்றி குறிப்பிட்ட நீதிபதி, இது பெரியார் தமக்கு பதிப்புரிமை தந்ததாக, ஆனைமுத்துவே எழுதியது தான். பெரியார் ஆனைமுத்துவுக்கு பதிப்புரிமை எழுதிக்கொடுத்த ஆவணம் ஏதும் இல்லை. அப்படியே எழுதித் தந்ததாக, வாதத்துக்கு எடுத்துக் கொண்டாலும், அது ஆனைமுத்துக்கு வழங்கப் பட்ட ஒன்று. அவ்வளவுதான். அதற்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று கூறிய நீதிபதி, நான்கு கேள்விகளை வீரமணி வழக்கறிஞரிடம் முன் வைத்தார்.

குடிஅரசு - ஆசிரியர் யார்? குடிஅரசு - உரிமையாளர் யார்? 'குடிஅரசு'க்கான உரிமைகள், கி. வீரமணியின் அறக்கட்டளைக்கு மாற்றி வழங்கப்பட் டுள்ளது என்பதற்கான சான்று, ஆவணம் இருக்கிறதா? பெரியார், தனது எழுத்துக்களை, தமது அனுமதியின்றி, எவரும் பயன்படுத்தக் கூடாது என்று, கைப்பட எழுதி வைத்துள்ளதற்கு சான்று உண்டா? இந்த நான்கு கேள்விகளுக்கும், ஆவணங்கள் இருந்தால், காட்டுங்கள். அதுதான் இந்த வழக்கு என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

"எங்களால் தொகுக்கப்பட்டவற்றைத்தான், அப்படியே பெரியார் தி.க.வினர் வெளியிட்டிருக் கிறார்கள். எனவே அது எங்களுக்கு உரிமையானது" என்று வீரமணி வழக்கறிஞர் வாதிட்டபோது, "பெரியாரின் பேச்சு-எழுத்துகளுக்கு எவருமே உரிமை கோர முடியாது என்பதே, இந்த வழக்கில் இப்போதுள்ள சட்ட நிலை. நீங்கள் 'குடிஅரசு'க்கு ஆசிரியர் இல்லை. நீங்கள் 'குடிஅரசு'க்கு உரிமை யாளர் இல்லை. இந்த நிலையில் உங்களுக்கு உரிமை இல்லாத மற்றவருடைய எழுத்துக்கு, நீங்கள் எப்படி சொந்தம் கொண்டாட முடியும்? எனவே நான் எழுப்பிய நான்கு கேள்விகளுக்கும் பதில் வேண்டும். மீண்டும் மீண்டும் கூறியதையே கூறிக் கொண்டிருக் கிறீர்கள் என்று கண்டிப்பாகக் கூறினார்.

பெரியார் திராவிடர் கழகத்தினர் வெளி யிட்டுள்ள 'பெரியார் சிந்தனைகள் தொகுப்பு', பெரியாரின் நூல்களிலிருந்து எடுக்கப்பட்டதா என்பதை, எங்கள் நூலகத்திலுள்ள நூல்களைப் பார்த்துதான் கூற முடியும் என்றும், அதற்கு ஒரு வார கால அவகாசம் வேண்டும் என்றும் கூறி, வீரமணியின் வழக்கறிஞர் வாதத்தை முடித்துக் கொண்டார்.

நீதிபதி கிருபாகரன், கி. வீரமணியின் வழக்கறிஞரிடம், "பெரியார், கொள்கையைப் பரப்புவதற்கே அறக்கட்டளையை நிறுவினார். நீங்கள் செய்ய வேண்டிய வேலையைத் தானே, இவர்களும் (பெரியார் திராவிடர் கழகத்தினர்) செய்கிறார்கள். அது பெருமை தானே? தனது தள்ளாத 90 ஆவது வயதிலும் பெரியார், தனது கொள்கைகளைத்தானே பிரச்சாரம் செய்தார்? பெரியார் நூல்கள் அரசுடைமையாகாததுதான், பெரும் வேதனை (unfortunate) பெரியார் இந்த நாட்டுக்கே சொந்தமானவர். எத்தனையோ நூல்கள் எல்லாம் அரசுடைமையாக்கப்பட்டுள்ளபோது, நாட்டின் மிகச் சிறந்த பகுத்தறிவைப் பரப்பிய தலைவரின் நூல்கள், நாட்டுடைமையாக்கப்பட வில்லை" என்று குறிப்பிட்டார்.

நீதிபதி எம். இப்ராஹிம் கலிஃபுல்லா கூறும்போது, "பெரியார் மிக உன்னதமான உயர்ந்த தலைவர் (Such a greatman) அவர் உயிருடன் இருந்தபோது நாங்கள், அறிவுரீதியாக முதிர்ச்சிப் பெறாத பருவத்தில் இருந்து விட்டோம். அவருடன் பழகும் வாய்ப்பு எங்களுக்கு கிடைக்கப் பெற வில்லை. பெரியார் உயிருடன் இருந்திருந்தால், நீங்கள் இப்படி பதிப்புரிமை கோரி, நீதி மன்றத்துக்கே வந்திருக்க முடியாது" என்று கூறினார்.

பெரியார் அறக்கட்டளையின் சொத்துதான் 'குடிஅரசு' என்ற வீரமணியின் வழக்கறிஞர் வாதத்துக்கு, வழக்கறிஞர் துரைசாமி விளக்க மளிக்கையில், "பெரியார் நிறுவியது அறக் கட்டளையே (Trust) அல்ல; பெரியார் நிறுவியது ஒரு 'சொசைட்டி'தான்" என்று. பெரியார் நிறுவிய சொசைட்டி விதிகளை சுட்டிக்காட்டி, தெளிவு

(4 ஆம் பக்கம்)

## "சிவராத்திரி"யை நிறுத்தினர் கழகத் தோழர்கள்

*சிவராத்திரி அதுவும் மகாசிவராத்திரி ஆன்மீகம் வணிக மயமாக ஆக்கப்பட்ட பின் சிறு வியாபாரி முதல் பெரிய முதலாளி வரை எல்லா சடங்குகள், மத விழாக்கள் அனைத்தையும் மக்கள் மீது திணிக்கிறார்கள். ஊடகங்களும் அதில் உள்ள உட்பொருள் தெரிந்தும் விழாக்களையும் பண்டிகைகளையும், மதச் சடங்குகளையும் ஊதிப் பெரிதாக்குகின்றன. அதுபோல்தான் இச் சிவராத்திரியும், வீடுகளிலும், கோவில்களிலும் மிகவும் சாதாரண முறையில் நடந்து வந்த நிலைமாறி, தற்போது சென்னையில் பல இடங்களில் பொது நிகழ்ச்சியாக சாலைகளிலும் மைதானங்களிலும் நடத்தப்படுகிறது. சென்னை கலைஞர் கருணாநிதி நகரில் மாநகராட்சிக்கு சொந்தமான சிவன் பூங்கா (ஜீவா நினைவாக பெயரிடப்பட்ட இந்தப் பூங்கா, திட்டமிட்டு, 'சிவன்' பூங்காவாக பெயர் திரிக்கப்பட்டுள்ளது)வில் சிவராத்திரி விடிய விடிய நடைபெறுவதாக தடபுடலாக ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்தன. செய்தி அறிந்ததும் பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் அப்பூங்காவிற்கு எதிரில் உள்ள காவல் நிலையத்தில் இதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக தெரிவித்ததோடு, அரசுக்கு சொந்தமான இடத்தில் மத வழிபாடு செய்யக் கூடாது என அரசின் சுற்றறிக்கைகளை கையளித்தனர். காவல்துறை முதலில் தயங்கினாலும் பின்னர் தோழர்களின் உறுதியினால் தொடர்புடைய ஆட்களை அழைத்து விசாரணை நடத்தினர். நள்ளிரவில் கழகத் தோழர்கள் முன் பூங்காவில் இருந்த ஒலி பெருக்கி, பந்தல், முகப்பு, வாழை மரம், தோரணம் ஆகியவற்றை இரவோடு இரவாக அகற்றி சிவராத்திரியை நடத்தக் கூடாது என எச்சரிக்கை விடுத்து அனுப்பினர். அதையடுத்து ஆர்ப்பாட்ட அறிவிப்பை கழகத் தோழர்கள் திரும்பப் பெற்றனர். மேலும் பூங்காவில் வைக்கப்பட்டுள்ள சிவன் சிலையையும் (இந்த சிலை ஒரு சினிமா படப்பிடிப்புக்காக தயாரிப்பாளர் நாகிரெட்டி அவர்களால் பூங்காவில் வைக்கப்பட்டதாகும்) அகற்ற மேல் நடவடிக்கையை மாநகராட்சி மூலம் எடுத்து வருகின்றனர்.*

*வழக்கறிஞர் சு. குமாரதேவன், தபசி. குமரன், அன்பு தனசேகர், சைதை தியாகு, சிவா, ராசு, இராமாவரம் க. சுப்பிரமணியம், குலசேகரன், துரைராசு, தஞ்சைத் தமிழன் ஆகியோர் இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு, சிவராத்திரி கொண்டாட்டத்தை தடுத்து நிறுத்தினர்.*

**– நமது செய்தியாளர்**

## மக்கள் பல்கலைக்கழகம் நடத்துகிறாராம், வீரமணி

தஞ்சையில் வீரமணி நடத்தும் பொறியியல் கல்லூரிக்கு நிகர்நிலைத் தகுதி ரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து கி.வீரமணி, புதிய சொல்லாடல் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார். அவர் நடத்தும் பல்கலைக்கழகம், மக்களால் மக்களுக்காக நடத்தப்படும் பல்கலைக்கழகமாம். எனவே, மக்களே, உச்சநீதிமன்றத்தில் வழக்காட வழக்கு நிதி தாருங்கள் என்று வழக்கு நிதி திரட்டத் தொடங்கியுள்ளார்.

நிகர்நிலை பல்கலைக்கழகம் நடத்தும் "கோடீசுவரர்கள்", கூட்டாக நீதிமன்றத்தில் இந்தியாவின் தலைசிறந்த வழக்கறிஞர்களைப் பிடித்து வழக்கை நடத்துகிறார்கள். வீரமணி ஒன்றும் தனியாக வழக்கை நடத்தப் போவது இல்லை. ஆனாலும் 'மக்கள் பல்கலைக் கழகம்' என்று கூறிக் கொண்டு, வழக்கு நிதி திரட்டுகிறார்கள்.

"பெரியாரின் 'குடிஅரசு'ம் அதில் அடங்கியுள்ள எழுத்துகளும், மக்களுக்கானவை. அதை வீரமணி அறக்கட்டளைக்குள் முடக்க வேண்டாம்" என்று நாம் - வீரமணி 'குடி அரசு'க்கு உரிமை கோரி வழக்கு தொடர்ந்த போது எழுதினோம்.

வீரமணி பார்வையில் மக்களுக்கான பெரியாரின் 'குடிஅரசு' எழுத்துகள் மக்களிடம் போய்ச் சேரக் கூடாது என்பார். அதை வெளியிடும் உரிமை அறக் கட்டளைக்கே உண்டு என்பார்.

மக்கள் பணத்தைச் சுரண்டி, வணிக ரீதியில் நடக்கும் இடஒதுக்கீடே இல்லாத நிகர்நிலை பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்தை அரசு ரத்து செய்தால், அந்த வணிக நிறுவனத்தை மக்கள் பல்கலைக்கழகம் என்பார்.

பெரியார் திராவிடர் கழகம் 'குடிஅரசு' பெரியார் எழுத்து-பேச்சுகளை வெளியிட்டால்,15 லட்சம் இழப்பீடு தரவேண்டும் என்று வழக்கு தொடருவார்.

அவர் நடத்தும் வர்த்தகப் பல்கலைக் கழகத்துக்கு மட்டும் மக்களிடம் வழக்கு நிதி திரட்டுவார்.

அம்பானியின் ரிலையன்ஸ், வால்மார்ட் நிறு வனங்கள், இந்தியாவில் தொழில் தொடங்க அனுமதி மறுக்கப்பட்டால், "மக்களே, உங்களுக்காக தொழில் நடத்த நாங்கள் முன்வரும்போது, அரசு தடுக்கிறது. நாங்கள் மக்களுக்காக, மக்களால் நடத்தும் தொழில் நிறுவனங்களுக்கு அனுமதி மறுப்பதை எதிர்த்து, வழக்கு தொடரப் போகிறோம். எனவே வழக்கு நிதி தாருங்கள்" என்று அறிவித்தால் எப்படி இருக்கும்?

அதற்கும் வீரமணி திரட்டும் வழக்கு நிதிக்கும் வேறுபாடு ஏதாவது உண்டா?

**வரப்பெற்றோம்**

### இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் தன் வரலாறு

ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உரிமைக் குரல் கொடுத்துப் போராடிய தலைவர் ரெட்டைமலை சீனிவாசன் அவர்கள். தனது வரலாற்றை சுருக்கமாக அவரே எழுதி 1939 ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார். அந்த "ஜீவிய சரித்திர சுருக்கத்தை" சிறந்த நூல்களை தேடிப்பிடித்து வழங்கி வரும் தமிழ்க்குடி அரசுப் பதிப்பகம், நூலாக வெளியிட்டுள்ளது. பார்ப்பன அதிகாரிகள் அப்போது தீண்டப் படாத மக்களுக்கு கடும் எதிரிகளாக இருந்ததை, மனக் குமுறலுடன் பதிவு செய் துள்ளார் இரட்டைமலை சீனிவாசன். பார்ப்பனர்கள் ஆட்சியைவிட பிரிட்டிஷார் ஆட்சியையே தாழ்த்தப்பட்டமக்கள் விரும்புகிறார்கள் என்பதையும் தயங்காமல் எழுதியுள்ளார். பழைய கால தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளது இந்த சரித்திரம்.

வெளியீடு: தமிழ்க்குடி அரசுப் பதிப்பகம், 14/12, மியான் குடில், சேப்பாக்கம், சென்னை - 600 006. பக். 64, விலை: ரூ.25

# "ஆவி" விஸ்கி, சோடா குடிக்கும்

*திரைப்பட உலகை "ஆவி" ஆட்டத் தொடங்கியுள்ளது. அண்மையில் கனகா என்ற நடிகை, ஆவி அமுதா வழியாக இறந்து போன அவரது தாயார் நடிகை 'தேவிகா' ஆவியுடன் பேச வைத்தாராம். தேவிகாவின் ஆவி, கனகாவுக்கு ஒரு மாப்பிள்ளையை தேர்வு செய்ததாம். அந்த மாப்பிள்ளை கனகாவை ரகசிய திருமணம் செய்து, மறைந்து விட்டாராம்.*

*'ஆவி நம்பிக்கை மனநோய் தொடர்பானது' என்று ஒரு மனநல மருத்துவர் என்ற முறையில் தான் சந்தித்த மனநோயாளிகள் பற்றி டாக்டர் கோவூர் கட்டுரைகளை எழுதியிருக்கிறார். அதில் இது ஒரு 'ஆவி'யின் கதை*

இறந்த மனைவியருடன் பேசியவர்கள்...!

"ஆவிகள் விஸ்கி, சோடா குடிக்கும்."

"ஆவிகளுக்குப் பாலுணர்வு உண்டு."

"ஆவி உலகில் உணவு, நீர், மது அனைத்தும் உண்டு."

"மிருகங்களுக்கு ஆவியாக மாறும் சக்தி யில்லை."

"ஆவிகள் ஆங்கிலத்தில்தான் பேசும்."

திரு. கோவூர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் திருமதி தோமஸின் ஆவி இப்படித்தான் பதில் கூறியது.

ஆனால், திருமதி தோமஸின் ஆவியை கோவூர் கண்களால் பார்க்கவில்லை.

அவரது கணவர் திரு.தோமஸ் மூலமாகத்தான் இந்தப் பதில்கள் கோவூருக்குக் கிடைத்தன.

கால் நூற்றாண்டுக்கு முன்பு யாழ்ப்பாண மாவட்ட நீதிபதியாக இருந்த திரு. ராஜபக்ஸ் என்பவர் தனது மனைவியின் ஆவியுடன் பேசியதாகவும், பல கேள்விகளைக் கேட்டதாகவும் அந்த இளம் மனைவி வாழ்ந்தபோது கூறாத பல முக்கிய விஷயங்களை ஆவியின் உருவில் தன்னிடம் கூறியதாகவும், கோவூரிடம் கூறியதை அடுத்தே கோவூர் தோமஸின் மனைவியின் ஆவியுடன் பேச வேண்டிய சூழ்நிலை உருவாகியது.

யாழ்ப்பாணம் கொன்வன்ட் வீதியில் திருராஜபக்ஸ் வசித்து வந்தார். அதே வீதியில்தான் கோவூரும் வசித்து வந்தார். கோவூர் அப்போது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். கோவூரும், ராஜபக்ஸூவும் நெருங்கிய நண்பர்கள்.

ஒரு நாள், திரு. ராஜபக்ஸூவின் இளம் மனைவி திடீரெனக் காலமானார்.

கணவன், மனைவியென்றால் இப்படித்தான் இருக்க வேண்டுமென்று உலகுக்கு எடுத்துக் காட்டுவதுபோல் அந்நியோன்யமாக வாழ்ந்தவர்கள் ராஜபக்ஸ் தம்பதிகள். திரு. ராஜபக்ஸ் தன் மனைவி மீது அசைக்க முடியாத பாசத்தை வைத்திருந்தார்.

இவ்வளவு அன்புடன் வாழ்ந்த தன் மனைவி திடீரென இறந்தது திரு.ராஜபக்ஸூவை நிலை குலையச் செய்தது. மனைவியின் பிரிவு காரணமாக வாழ்க்கையில் எவ்விதப் பிடிப்புமின்றி வாழ முற்பட்டார். திடீரென தன் மனைவி உயிருடன் இருப்பது போன்றே அவருக்குத் தோன்றும். சில சமயங்களில் மனைவியின் ஆவியாவது தன்னை வந்து சந்திக்காதா என்ற ஆசை அவருக்கு உதிக்கும். இந்த நப்பாசை அவரிடம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தது. இதனால் ஆவிகள் பற்றி அறிந்து கொள்ள அவர் பெரிதும் ஆர்வம் கொண்டார். இந்த ஆர்வம் நாட்கள் செல்ல செல்ல அதிகரித்தது. யாழ்ப்பாணம் பொது வாசக சாலையில் இருந்த 'ஆவிகள்' சம்பந்தமான சகல புத்தகங்களையும் வாசிக்க ஆரம்பித்தார். குறிப்பாக "லண்டன் ஆவிகள் ஆராய்ச்சிக் கழகம்" வெளியிட்ட புகத்தங்களை அவர் வாசிக்கத் தவறுவதில்லை.

திருவாளர்கள் மயர்ஸ், சோல், சிஜ்விங், பொட்மோர், ஒலிவர் லொட்ஜ், அலெக்சாண்டர் கெனன், கொனன் டொயல், ஹரிபிறைஸ் போன்றவர்கள் ஆவிகள் உலவுகின்றன என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார்கள். இவர்களின் புத்தகங்களையெல்லாம் வாசித்த திரு. ராஜபக்ஸ், தனது நம்பிக்கையை மேலும் வலுப்படுத்திக் கொண்டார்.

இந்த நிலையில் 1941 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5 ஆம் தேதி காலை திரு.ராஜபக்ஸ், மூச்சு வாங்க, கோவூரின் இல்லத்துக்கு ஓடி வந்தார். "ஏபிரஹாம்... ஏபிரஹாம்" என் கூவியபடி ஓடி வந்த அவரின் முகத்தில் குதூகலமும், அதே நேரத்தில் கலவரமும் குடி கொண்டிருந்தன.

"ஏபிரஹாம்... கடைசியில் என் மனைவியைச் சந்தித்து விட்டேன்" என்று கூவியபடி கோவூரின் வீட்டுக்குள் நுழைந்தார். பலமுறை அதையே சொல்லிக் கொண்டிருந்தார்.

திரு.ராஜபக்ஸூவின் பேச்சு, கோவூரைப் பெரும் ஆச்சரியத்துக்கும், அதிர்ச்சிக்கும் ஆளாக்கியது. இச் சமயத்தில் திரு.ராஜபக்ஸ் பொறுப்புள்ள ஒரு நீதிபதிபோல் அல்லாமல், ஒரு சிறு குழந்தை போலவே தோன்றினார்.

"ஏபிரஹாம்! என் மனைவி என்னிடம் ஒரு மணி நேரம் பேசினாள். தனது மரணத்துக்கு முன்பு சொல்லத் தவறிய பல விஷயங்களைச் சொன்னாள். இன்னொரு முறைகூட அவளைச் சந்திக்கப் போகிறேன். 'அப்பாய்ன்ட்மென்ட்' வைத்துவிட்டு வந்தேன்" இப்படி பரபரப்புடன் கூறினார் ராஜ்பக்ஸ்.

'என்னையும் அப்போது அழைத்துச் செல்லுகிறீர்களா?' என்று கோவூர் அவரிடம்கேட்டார்.

"இல்லை. இல்லை ஏபிரஹாம், அடுத்த முறை அவளிடம் நான் பல இரகசியங்களைக் கேட்கப் போகிறேன். என்னுடன் அப்போது யாரும் இருக்கக் கூடாது" என்று கெஞ்சுவதுபோல் பதிலளித்தார் திருராஜபக்ஸ்.

இதைக் கூறி முடித்ததும் அவரின் கண்கள் கலங்கியிருந்தன. மிகவும் களைப்படைந்தும் காணப்பட்டார்.

இருவரும் காப்பியை அருந்தினர். இதன் பின் ராஜபக்ஸ் சிறிது தெளிவு பெற்றிருந்தார்.

சிறிது நேரம் மவுனம் நிலவியது. திரு. ராஜபக்ஸ் பேச்சை ஆரம்பித்தார்.

"ஏபிரஹாம்... எனது நண்பர் தோமஸின் உதவியால் தான் எனது மனைவியுடன் பேசினேன். திரு.தோமஸ்தான் 'மீடியமாக' இருந்து என்னுடன் என் அன்பு மனைவி பேச வழி செய்து கொடுத்தார்."

இப்படிக் கூறிய திரு. ராஜபக்ஸ், தாம் தோமஸை சந்தித்த கதையையும், தன் மனைவியுடன் பேசியதையும் விவரமாக விளக்கினார்.

இதையெல்லாம் புன்சிரிப்பை உதிர்த்தபடியே கேட்டுக் கொண்டிருந்த கோவூர், திரு. ராஜ பக்ஸ்வுக்கு 'மீடியமாக' இருந்த திரு. தோமஸின் விலாசத்தைப் பெற்றுக் கொண்டார். திரு.ராஜபக்ஸ் விடைபெற்றுச் சென்ற சிறிது நேரத்தில் தம் கைப்படவே தோமஸூக்கு கடிதம் எழுதினார் கோவூர்.

ஒரு வாரம் கடந்தது, தோமஸிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை.

ஒரு நாள் காலை திடீரெனக் கோவூரின் இல்லத்துக்குள் நுழைந்தார் தோமஸ்.

இச்சமயம் கோவூர், வரவேற்பறையில் அமர்ந்து புத்தகம் வாசித்துக் கொண்டிருந்தார். வீட்டுக்குள் நுழைந்து கோவூரைப் பார்த்ததுதான் தாமதம், "அதோ உங்கள் தலைக்குப் பின்னால் தெய்வீகமான ஒரு மஞ்சள் சக்கரம் சுழலுவதைக் காண்கிறேன்" என்றார் தோமஸ்.

தோமஸை வரவேற்ற கோவூர், அவரை அமரச் செய்தார். தெய்வீக சக்கரம் பற்றிக் கூறியபடியே அமர்ந்த தோமஸ், தொடர்ந்து தம்மைப் பற்றிய விவரங்களைச் சொல்ல முற்பட்டார்.

திரு.தோமஸ் தீவிர மதப்பற்றுள்ள ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தவர். தீவிரமான மத நம்பிக்கை யுடன் பெற்றோரால் வளர்க்கப்பட்டார்.

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல கிறிஸ்தவ கல்லூரியில் கல்வி பயின்றார். கிறிஸ்தவ இயக்க மொன்றினால் சிறந்த மாணவனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இளம் பிராயத்தை எட்டியதும் திரு.தோமஸ் மத குருவாகிவிட விரும்பினார். ஆனால், அவரின்

(3 ஆம் பக்கம்)

# 'ஆவி'யை படம் பிடிக்கலாம் என்பது மோசடி!

*(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

மற்றொரு சகோதரர் மதகுருவாகிவிடவே, திரு. தோமஸ் குடும்ப வாழ்வில் ஈடுபட்டார்.

மனைவியோடு மகிழ்ச்சியுடன் வாழ்ந்து கொண்டிருந்தபோது தான் 1926 ஆம் ஆண்டு அவரது மனைவி திடீரென இறந்தாள்.

மனைவி இறந்துவிட்டாலும், அவளின் நினைவு அகலவே இல்லை. காலப்போக்கில் இரண்டாவது திருமணமும் செய்தார். அப்பொழுதும் முதல் மனைவியின் நினைவுதான் ஆட்சி புரிந்து கொண்டிருந்தது.

தோமஸும் ஆவிகள் பற்றி நம்பிக்கைக் கொண்டவர். ஆவிகள் பற்றிய நூற்றுக்கணக்கான நூல்களைப் படித்திருந்தார். தனது முதல் மனைவியின் ஆவியும் வாழ்வதாக நம்பினார்.

1934 ஆம் ஆண்டு தான், தனது மனைவியின் ஆவியுடன் முதல்முறையாகத் தொடர்பு கொண்டதாகத் தெரிவித்தார். அதன் பிறகு அடிக்கடி அந்த ஆவியுடன் தொடர்பு கொள்ளலானார்.

இச்சமயம் லண்டனில் ஆவிகளைப் படமெடுக்கும் பல அற்புத நிபுணர்கள் இருந்தனர். அங்கு தன் மாமனாரினதும், மனைவியினதும் அடையாளங்களை எழுதி, அவர்களுடைய ஆவிகளின் படங்களை வரவழைத்தார்.

மாமனாரின் படத்தில் தோமஸுக்கு சந்தேகம் இருந்தது. ஆனாலும் மனைவியினுடைய ஆவியின் படம் சரியாகவே இருந்ததாகவே நம்பினார்.

நினைத்த பொழுதெல்லாம் தன் மனைவியின் ஆவியைச் சந்தித்துப் பேசும் சக்தி அவருக்கு ஏற்பட்டது.

தனது மகளின் திருமணத்தைக்கூட ஆவியைச் சந்தித்துப் பேசிய பின்னரே ஏற்பாடு செய்தார்.

தனது மனைவியோடு மட்டுமன்றி வேறு சில ஆவிகளுடன் பேச 'மீடியமாக' அவரே இருந்தார். இதில் ஒன்றுதான் திரு. ராஜபக்ஸ், தனது மனைவியின் ஆவியுடன் பேச 'மீடியாமாக' இருந்தது.

இப்படி தன் கதையைச் சொல்லி முடித்த தோமஸ், லண்டனிலிருந்து வரவழைத்த ஆவிகளின் படங்களையும் காட்டினார்.

படங்களில், மாமனாரின் ஆவி சூட்டுடன் தொப்பி அணிந்திருந்தது. மனைவியின் ஆவி வெள்ளைக் கவுன் அணிந்திருந்தது.

தோமஸ் பேசி முடித்த பின்னர், அவர் காட்டிய ஆவியின் படங்களை ஆராய்ந்த கோவூர், "உங்கள் மனைவியின் ஆவியுடன் இப்பொழுது தொடர்பு கொள்ள முடியுமா?" என்று கேட்டார்.

"முடியும்! ஒரு தனி அறைக்குள் அழைத்துச் செல்லுங்கள்" என்றார் தோமஸ்.

உடனே தோமஸுடன் எழுந்த கோவூர், அவரைத் தனது வாசக சாலைக்குள் அழைத்துச் சென்றார். அங்குச் சென்றதும் ஒரு நாற்காலியில் அமர்ந்து "ஜன்னல்களை எல்லாம் மூடுங்கள்" என்றார் தோமஸ்.

ஜன்னல் அனைத்தும் மூடப்பட்டன. தனக்கு நேரெதிராக இருந்த சுவரை உற்று நோக்கினார் தோமஸ். சில வினாடிகள் கழிந்தன.

"அதோ! அதோ!! அவள் நிற்கிறாள். என்னைப் பார்க்கிறாள்" என்று கூறினார் தோமஸ்.

அவர் காண்பித்த திசையைக் கோவூர் நோக்கிய போது, அங்கே தனது தந்தையின் படம் தொங்குவதைக் கண்டு, அதனருகில் நெருங்கி அதைத் தொட்டுப் பார்க்க முயன்றார்.

"தொடாதீர்கள்... தொடாதீர்கள்" என்று குரல் எழுப்பிய தோமஸ், "ஆவிகளைப் புனிதமில்லாத மனிதர்கள் தொடக் கூடாது" என்று அதட்டி எச்சரித்தார்.

"அங்கே சுவருமில்லை; படமுமில்லை. நீல நிறமான ஆகாயம் தெரிகிறது. வெள்ளை உடை உடுத்தி என் அழகிய மனைவி நிற்கிறாள்" என்ற பதில் வந்தது. அடுத்த வினாடி, "என் மனைவியின் ஆவி, கேள்விகளுக்குப் பதிலளிக்கத் தயாராகிவிட்டது" என்று கூறினார்.

உடனே கோவூர் கேள்விகளைக் கேட்டார்.

கோவூர் கேட்ட சில கேள்விகளுக்குத்தான், "ஆவிகள் விஸ்கி, சோடா குடிக்கும், ஆவிகளுக்குப் பாலுணர்வு உண்டு" என்பன போன்ற பதில்களை தோமஸ் மூலமாக அவர் மனைவியின் ஆவி கூறியது.

இந்தச் சுவையான பதில்கள் அனைத்தும் தோமஸின் வாயிலாகத்தான் வந்தன.

கோவூர் மேலும் கேட்ட சில கேள்விகளுக்கு கிடைத்த பதில்கள்:

- கிறிஸ்தவ மதம்தான் உண்மையானது.
- மறுபிறவி என்பதே இல்லை.
- தோமஸ் இறந்தவுடன், நான் ஒரு ஆவியை மணந்து கொண்டு குடும்ப வாழ்க்கையில் ஈடுபடப் போகிறேன்.
- வேறு சில கிரகங்களிலும் மனிதர்கள் வாழ்கின்றனர்.

கோவூரின் கேள்விகள் முடிந்த சிறிது நேரத்தில் தோமஸ் சுயநினைவுக்கு வந்தார். இதனையடுத்து இருவருமே அந்த அறையைவிட்டு வெளி அறைக்கு வந்தனர். ஆவியுடன் பேசுவதற்கு முன்னும் - பேசும் போதும், பேசிய பின்னும் தோமஸுக்கு ஏற்படும் அனுபவங்கள் பற்றிக் கேட்டார் கோவூர்.

"மனைவியுடன் தொடர்பு கொள்ள நினைத்து, சிந்தனையை அதில் மட்டும் செலுத்தி வெறித்துப் பார்க்க ஆரம்பிப்பேன். அப்பொழுது நான் நோக்குமிடத்தில் வர்ணஜாலம் மிக்க புதுமையான ஒரு ஒளி பிரகாசிக்கும், ஆவி அங்கே தோன்றும், அந்த ஆவியுடன் பேச, அதன் முழு உருவமும் தெரிய வேண்டிய அவசியமில்லை. ஆவியுடன் பேசி முடிந்ததும் மிகக் களைப்பாகவே இருக்கும். தண்ணீர்த் தாகமெடுக்கும். உடனே நித்திரை வரும்." இப்படித் தனது அனுபவங்களைக் கூறிய தோமஸ், கண்களை மூடியவாறு ஓய்வெடுத்தார்.

தோமஸின் நடவடிக்கைகளையும், அவரது கதையையும், அனுபவங்களையும் நன்கு கண்டு, கேட்டு அறிந்த பின்னர் திரு. ராஜபக்ஸ், திரு. தோமஸ் போன்றவர்கள் எவ்வாறு ஆவியுடன் பேசுகிறார்கள் என்பது கோவூருக்கு விளங்கியது.

"ராஜபக்ஸ், தோமஸ் இருவருமே தங்கள் மனைவிமார் மீது தீராத ஆசை வைத்திருந்தனர். ஆனால் இருவருமே இளம் வயதிலேயே மனைவியரை இழந்துவிட்டனர். அவர்கள்மீது கொண்டிருந்த அளவுக்கு மீறிய அன்பாகப்பட்டது. தங்கள் மனைவியர் ஆவிகளாகவாவது வந்து தங்களுடன் பேச மாட்டார்களா என்ற நப்பாசை பிறந்தது."

"இதற்கு உறுதுணையாக ஆவிகள் பற்றிய புத்தகங்கள் அவர்களுக்கு நம்பிக்கையூட்டின."

"தோமஸ் தீவிரமான மதப்பற்றுள்ள குடும்பத்தில் பிறந்தவராதலால், அவர் தெய்வீகமென்பது உண்மையெனத் தீவிரமாக நம்பினார்."

"எந்தவொரு பொருளையுமே நீங்கள் உற்று நோக்கியபடி இருந்தால் அந்த இடத்தில் உங்கள் கண்களுக்கு அபூர்வமான ஒளி தென்படும்."

"அதற்குமேல் எதையும் நீங்கள் கற்பனை செய்தால் நீங்கள் நினைப்பதே உங்கள் கண்முன் நிற்பது போன்று தெரியும்."

"தோமஸுக்கு, தாடி வளர்த்த எனது தந்தையின் படம் அவர் மனைவியாகக் காட்சியளித்ததும் இப்படித்தான்."

"மனிதரின் கண்களுக்கும், மூளை நரம்புகளுக்கும் எப்பொழுதுமே ஒரு தொடர்பு உண்டு. கண்கள் பார்ப்பதை மூளை சிந்திக்கும். அதுவும் அந்தக் கண்களுக்குத் தெரிய நீங்கள் பார்க்கும் பொருள்களின் மீது ஒளி விழ வேண்டும்."

"இப்படித்தான் தோமஸ் தனது மனைவியைக் கற்பனையில் கண்டார்."

"புளியைச் சாப்பிடுவதாக நினைத்துக் கொண்டால், உங்கள் வாயும், முகமும் உங்களை அறியாமலே சுருங்கிப் பலவித முக பாவங்களையும் ஏற்படுத்தும்."

"இதே போன்றுதான் தோமஸ் தனது இறந்த மனைவியை நினைத்துக் கொண்டு, எனது கேள்விகளுக்கு மனைவியின் ஆவி போன்று பதிலளித்தார். அந்த ஆவி, எனது கேள்விகளுக்கு அளித்த பதில்களை ஆராய்ந்தால் பல உண்மைகள் புலப்படும்."

"தோமஸ் ஒரு தீவிர கிறிஸ்தவ குடும்பத்தைச் சேர்ந்தவரென்பதால்தான், கிறிஸ்தவ மதம் உண்மையானதென்றும், மிருகங்களுக்கு ஆவியாக உலவும் சக்தி இல்லையென்றும் சொன்னார்."

"அவர் ஒரு இந்துவாக இருந்திருந்தால் இந்து மதம்தான் சிறந்ததென்றும், மிருகங்களுக்கும் ஆவியாகும் சக்தி கிடைக்குமென்றும் கூறியிருப்பார்."

"இதிலிருந்து இவை மதப்பற்றால் கூறப்பட்ட பதில்கள் என்பது தெளிவாகிறது."

"ஆவிகளின் உலகில் உணவு, நீர், மது உண்டென்றார். உணவு உண்ண முடியுமானால், அது பூவுலகப் பிறவியாகத்தான் இருக்க வேண்டுமே தவிர ஆவியாக இருக்க முடியாது."

"ஆவிகளுக்குப் பாலுணர்வும், உடலமைப்பும் உண்டென்று கூறியதை அவதானிக்கும்போது, மனிதன் அடக்கம் அல்லது தகனம் செய்யப்பட்டதும் அவனது உடல் அழிந்து விடுகிறது. பிறகு எப்படி உடலமைப்பும், பாலுணர்வும் இருக்க முடியும்?"

"அதிகமான கிறிஸ்தவர்கள் அக்காலத்தில் பேசியது ஆங்கிலம். அதனால்தான் ஆவிகளின் மொழி ஆங்கிலமென்றும், உடை, சூட், கவுண் என்றும் பதில் கூறப்பட்டது."

"இந்தப் பதில்களெல்லாம் கிறிஸ்தவ மதத்தின் நம்பிக்கையே."

"ஆவியுலகில் விஸ்கியும், சோடாவும் உண்டென்றால், கசிப்பும் இருக்க வேண்டும்? தோமஸ் கிறிஸ்தவர்களின் அன்றைய முக்கிய மதுபானமான விஸ்கியைத்தான் ஞாபகமாகக் கொண்டு, அந்தப் பதிலைக் கூறியிருக்கிறார்."

"தோமஸ் எனக்குக் காட்டிய அவரின் மாமனார் மனைவி ஆகியோரின் ஆவிகளின் புகைப்படங்கள் எப்படி எடுக்கப்பட்டன என்பது பெரும் கேள்வியாக எழலாம்!"

"லண்டனில் இப்படியொரு ஏமாற்றும் கோஷ்டியே பிழைப்பு நடத்தியது. சில காலத்திற்குப் பின்பு இக்கோஷ்டி போலீசாரால் பிடிக்கப்பட்டு பல உண்மைகள் வெளியாகின."

"இக்கோஷ்டியின் தலைவர்கள் எனக் கருதப்பட்ட திரு. பிரட்பலோ, மேஜர் ரம்ளிங் ரோஸ் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்."

"ஒரு வேடிக்கை என்னவென்றால், வேட்டி, சட்டை அணிந்து வாழ்ந்த தோமஸின் தந்தையின் ஆவி, சூட்டும் தொப்பியும் அணிந்திருந்ததுதான்."

"தோமஸுக்கு 'மோனா மேனியாக்' என்ற ஒருவித மனோ வியாதியே பீடித்திருந்தது."

"மதத்தின் மீது கொண்ட நம்பிக்கையால், அவர் ஆவிகள் பற்றிய மூட நம்பிக்கையில் ஈடுபட்டார். ஆவிகள் பற்றிய புத்தகங்களும் அவருக்கு நம்பிக்கையூட்டின."

லண்டன் 'ஆவிகள் ஆராய்ச்சிச் சங்கம்' அன்று வெளியிட்ட புத்தகங்களும் அவரது நம்பிக்கையை வலுப்படுத்தின.

"இன்று இதே சங்கம் வெளியிட்டுள்ள திருவாளர்கள்; அந்தனி புளு, கட்னர், சைமன்ஸ், வட்வட்ருஷ், ஹென்ஸல், ஸ்பென்ஸர் பிரவுண் ஆகியோரின் புத்தகங்களை இவர் படித்திருந்தால் இப்படியான மூடநம்பிக்கைகளுக்கு இடமே கொடுத்திருக்க மாட்டார்."

"தோமஸின் மூடநம்பிக்கைகளுக்கு ஒரு பொறுப்புள்ள நீதிபதியும் அடிமைப்பட்டிருக்க மாட்டார்."

"என்னைப் பார்த்தவுடன் எனது தலைக்குப் பின்னால் தெய்வீக சக்கரம் சுழல்கிறதென்று கூறியதிலிருந்து அவர் ஒரு 'மோனோ மேனியாக்' என்பதை நான் உணர்ந்து கொண்ட பின்பே, அவரை ஆராய்ந்து இந்த உண்மைகளை அறிந்தேன்."

இப்படி விளக்கமளித்த கோவூர், பின்பு ஹிப்னாடிஸ் முறையில் தோமஸ், ராஜபக்ஸ் ஆகியோரின் உள்ளுணர்வுகளுக்கு இந்த மூட நம்பிக்கைகள் பற்றி எடுத்துக் கூறி, அவர்கள் இருவரும் இந்த மனோ வியாதியிலிருந்து விடுபட வழிசெய்தார்.

●

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

## சென்னை மாவட்ட கழகத்தினருக்கான பெரியாரியல் பயிற்சி முகாம்

நாள் : 27, 28. 2. 2010.

இடம் : மேல் கதிர்பூர் கிராமம், காஞ்சிபுரம்.

பயிற்சி அளிப்போர் : கழகத் தலைவர் கொளத்தூர் மணி, துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், பொதுச் செயலாளர்கள் கோவை இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன், சிற்பி இராசன், எழுத்தாளர் கவிஞர் அழகிய பெரியவன்.

கழக மூத்த வழக்கறிஞர் செ. துரைசாமி நிறைவுரையாற்றி, பயிற்சியை நிறைவு செய்கிறார். காஞ்சி மக்கள் மன்றத் தோழர் மகேசு தொடங்கி வைக்கிறார்.

திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்ட தோழர்களும், பயிற்சியில் பங்கேற்கிறார்கள். சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் பயிற்சி முகாம் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

படுத்தினார். அத்துடன் சொத்துகளை “அறக் கட்டளைக்கு” ஒப்படைப்பதற்கான ஒப்பந்தம் (Deed) வழங்கப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினார். நீதிபதிகள் அதை ஏற்றுக் கொண்டனர்.

கழகத்தின் சார்பில் வாதிட்ட மூத்த வழக்கறிஞர் தியாகராசன், வீரமணியின் வழக்கு மனுவில் முன்வைக்கப்பட்டுள்ள வேண்டுகோள்களே (Prayer) தெளிவற்றதாக இருப்பதை சுட்டிக்காட்டினார். ‘குடிஅரசு’ பத்திரிகையின் ஆசிரியராகவும், உரிமையாளராகவும் பெரியார் மட்டுமே இருக்கவில்லை. இந்தப் பொறுப்பில் பெரியாரைத் தவிர, வேறு பலரும் இருந்திருக்கிறார்கள். பதிப்புரிமை சட்டத் தின்படி, ஒருவர் எழுத்துப்பூர்வமாக பதிப்புரிமையை தந்தாக வேண்டும். அப்படி எழுத்துப் பூர்வமாக தராத நிலையில் பதிப்புரிமை கோரவே முடியாது. பெரியார் தனது சொசைட்டியை உருவாக்கிய காலத்தில் உள்ள பதிப்புரிமை சட்டப்படி பதிப்புரிமை எழுதித் தந்தால்கூட - அது, 25 ஆண்டுகாலத்துக்கு மட்டுமே செல்லும். பெரியார் தமது ‘சொசைட்டி’யை உருவாக்கியது 1952 இல் தான். ஆனால், அதற்கு முன்பே ‘குடிஅரசு’ பத்திரிகை நிறுத்தப்பட்டுவிட்டது.

அதுமட்டுமல்ல, பெரியார் நிறுவிய சொசைட்டியின் விதிகள்கூட எதிர்காலத்தில் வாங்கக்கூடிய சொத்துக்களுக்குத்தான் உரிமை கோருகிறது. ‘வாங்கக்கூடிய சொத்து’ என்ற வரையறைக்குள் பெரியாரின் ‘குடிஅரசு’ பத்திரிகை எப்படி வர முடியும்? பெரியார் நடத்திய ‘குடிஅரசு’ வாங்கக்கூடிய சொத்தா? (to be purchased property) அல்லது சிந்தனைப் படைப்பா? (created) பெரியார் எழுத்தும் பேச்சும், சொத்துக்கள் அல்ல; சிந்தனை படைப்புகள்; தங்களால் தொகுக்கப்பட்டதையே பெரியார் திராவிடர் கழகத்தினர் வெளியிடுவதாக அவர்கள் கூறுவதை ஏற்க முடியாது. பெரியாரின் குடிஅரசில் வெளிவந்த கட்டுரைகள்தான், அப்படியே பிரதி எடுக்கப்பட்டு எங்களால் வெளியிடப்பட்டிருக்கிறது. இதில் தொகுப்பு என்ற வரையறைக்கு இடமே இல்லை. அவர்களிடம் இருப்பதுபோலவே எங்களிடமும் ‘குடிஅர’ இதழ்கள் இருக்கின்றன. அதிலிருந்துதான், பெரியாரின் கட்டுரைகள் அப்படியே எடுத்தாளப்பட்டுள்ளன” என்று கழக சார்பில் நீதிபதி வாதிட்டார்.

கழகத்திடமிருந்த ‘குடிஅரசு’ தொகுப்புகள் நீதிபதிகளின் பார்வைக்காக வழங்கப் பட்டன. புதிய காப்புரிமை சட்டம் 1957 இல் தான் அமுலுக்கு வந்தது. பெரியார் 1952லேயே ‘அறக்கட்டளையை நிறுவிட்டார். அதனால் தான் ‘காப்புரிமை’யை எழுதித் தரவில்லை என்று வீரமணி வழக்கறிஞர் வாதிட்டார். 1957க்குப் பிறகு, 1973 வரை பெரியார் வாழ்ந்துள்ளாரே. பதிப்புரிமை தமக்கு வேண்டும் என்று கருதியிருந்தால், எழுதியிருக்க மாட்டாரா என்று நீதிபதி எஸ். கிருபாகரன் கேட்டார்.

வழக்கு விசாரணை பிப்.17 ஆம் தேதியும் தொடருகிறது. வழக்கறிஞர் துரைசாமி, வழக்கறிஞர் இளங்கோ, வழக்கறிஞர் கிளேடியல் ஆகியோர் மூத்த வழக்கறிஞருக்கு சட்டரீதியான உதவிகளை வாதத்தின்போது வழங்கினர். வழக்கறிஞர் குமாரதேவன், அமர்நாத் மற்றும் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், மாவட்ட தலைவர் தபசி குமரன், கழகத் தோழர் மயிலை சுகுமார் ஆகியோர் நீதிமன்றம் வந்திருந்தனர்.

**– நமது செய்தியாளர்**

## வந்த கடிதம்

21.1.2010 ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்தின் தலையங்கம் மிகச் சிறப்பு. “பெரியாரின் சுயமரி யாதை இயக்கமும், திராவிடர் இயக்கமும் வலியுறுத்திய கொள்கைகளில் இடஒதுக்கீடு கொள்கையை மட்டும் ஏற்றுக் கொண்டு, ஏனைய சாதி ஒழிப்பு - பார்ப்பன புரோகித எதிர்ப்பு - பெண்ணுரிமை - பகுத்தறிவு - சமதர்ம கொள்கைகளை படிப்படியாக திராவிட அரசியல் கட்சிகள் கைக் கழுவிவிட்டதை வெட்கத்தோடு ஒப்புக் கொண்டே ஆக வேண்டும்” என அற்புதமாய் படம் பிடித்துள்ளது.

**தங்க. சங்கர பாண்டியன், சென்னை-103.**

4.2.2010 ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்தில் வீரமணி, பெரியார் பல்கலைக்கழகத்தை வணிக நிறுவன மாக ஆக்கியதையும், மக்கள் பல் கலைக்கழகம் என்று சொல்லி வழக்கு நிதி வசூல் செய்வதையும் தெள்ளத் தெளிவாக விளக்கி விட்டார்கள். வீரமணியின் கொள்கை துரோ கத்தையும், கல்வி நிறுவனங்களில் குடும்ப உறுப்பினர்களையும் சேர்த்தது பற்றியும் இதுவரை வீரமணி பெரியார் கொள்கைக்கு செய்த துரோகத்தையும் பெரியார் பெயருக்கு இழுக்கு ஏற்படுத்தியதை 1995 ஆம் ஆண்டிலிருந்து ஒரு நூலாக வெளியிட்டு அனைவருக்கும் பயன்பட செய்யுமாறு மிகப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**க. சொ. சிவசுப்பிரமணியன், வடசேரி, தஞ்சை.**

## புலிகளுக்கு ஆயுதம் தயாரித்ததாக வழக்கு: கோவை ஆறுச்சாமி உள்ளிட்ட தோழர்கள் விடுதலை

1989 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கு ஏ.கே. 47 துப்பாக்கி தயாரித்ததாகவும், இந்திய அரசுக்கு எதிரான சதித் திட்டம் தீட்டிய தாகவும், அரசு அனுமதி இன்றி பயங்கர ஆயுதம் தயாரித்ததாகவும், கழக மத்திய செயற்குழு உறுப்பினர் ஆறுச்சாமி, ஆவரம் பாளையம் சோமு, கிருஷ்ணன், முருகானந்தம் ஆகிய 4 பேர் மீது கியூ பிரிவு காவல்துறை வழக்கு பதிவு செய்தனர். தோழர்கள் 90 நாட்கள் சிறையில் இருந்தனர். பின்னர் கோவை ஜே.எம். 6 நீதிமன்றம் இவர்களை விடுதலை செய்தது. அதை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் அரசு தரப்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது. அந்த வழக்கில் 10.2.2010 சென்னை உயர்நீதிமன்றம் 4 பேரையும், குற்றமற்றவர் என்று கூறி விடுதலை செய்தது. வழக்கில் மூத்த வழக்கறிஞர் துரைசாமி, இளங்கோவன் ஆகியோர் வாதாடினர்.

## சென்னையில் கழகததின் ‘காதலர் தின’ பரப்புரை

சென்னையில் காதலர் தினத்தை முன்னிட்டு, கழகப் பொதுக் கூட்டம் 13.2.2010 அன்று சென்னை நேரு பூங்கா அருகே கலை நிகழ்ச்சிகளுடன் சிறப்புடன் நடைபெற்றது. தோழர் கவின் மலர், அருள்தாசு, கீர்த்தி, நாத்திகன் ஆகியோர் பங்கேற்ற இசை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. தொடர்ந்து ந. பாஸ்கர் வரவேற்புரையாற்ற க.சீ. வாசன் தலைமையில் தோழர்கள் தட்சிணாமூர்த்தி, அ. சரவணன் முன்னிலையில் நடந்த கூட்டத்தில் கு. அன்பு தனசேகர், ச. குமரன் உரையாற்றியதைத் தொடர்ந்து, மருத்துவர் எழிலன், சாதி மறுப்புக் கொள்கைகளை விளக்கி ஒரே சாதி, குடும்ப உறவுகளுக்குள் நடக்கும் திருமணங்களால், உடலியல், உளவியல் ரீதியாக உருவாகும் பாதிப்புகளை விளக்கினார். கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் சிறப்புரையாற்றினார். புராணங்களில் கடவுளர்களே காதலர்களாக புனையப்பட்ட கதைகளையும், வரலாற்றின் நிலைத்த புகழ் பெற்ற அம்பிகாபதி-அமராவதி, லைலா-மஜ்னு, ஷாஜகான்-மும்தாஜ் வரலாறுகளையும் எடுத்துக் கூறி, காதல், வரலாறுகளிலும், புராணங்களிலும் போற்றப்பட்டுள்ளதை பல்வேறு உதாரணங்களுடன் சுட்டிக்காட்டிப் பேசினார். தோழர் கு. முனியன் நன்றி கூற, 10 மணியளவில் கூட்டம் நிறைவடைந்தது.

## ‘பி.ஆர்.கே.’ முடிவெய்தினார்

காவிரிப் பிரச்சினைக்காக இறுதி வரை குரல் கொடுத்த கரூர் வழக்கறிஞர் பி.ஆர். குப்புசாமி, பிப்.15 ஆம் தேதி விடியற்காலை 5 மணிக்கு முடிவெய்தினார். கடந்த சில காலமாகவே அவர் உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்தார். பொதுவுடைமைவாதியாக அவரது பொது வாழ்க்கைத் தொடங்கியது. ஜீவாவுடன் இணைந்து, கலை இலக்கியப் பெருமன்றத்தை நிறுவியதில் அவருக்கு பெரும் பங்கு உண்டு. தேசிய இனப் பிரச்சினையில் பொதுவுடைமை கட்சியிடம் கருத்து மாறுபாடு கொண்டு, பெரியாரியத்தில் ஈடுபாடு கொண்டார். கரூரில் சமூக அறிவியல் மய்யம், பகுத்தறிவாளர் கழகத்தை உருவாக்கி, பெரியார் கருத்துகளைப் பரப்பினார். நொய்யல் ஆற்று நீர் உரிமைகளுக்கும், நதி நீர் சுற்றுச் சூழலால் மாசுபடுவதற்கும் எதிராக பல போராட்டங்களை நடத்தியவர்.

இடையில் சில ஆண்டுகள் தி.மு.க.வில் சேர்ந்து, கரூர் அவைத் தலைவர் பொறுப்பில் இருந்தாலும், கட்சி அரசியலை அவரால் ஜீரணிக்க முடியாத நிலையில் வெளியேறி, காவரி உரிமைப் பிரச்சினையில் தமது முழு கவனத்தையும் குவித்து, தொய்வின்றி, அதற்காக போராட்டம், பரப்புரை, எழுத்து, கருத்துருவாக்கம் என்ற பல்வேறு தளங்களில் அர்ப்பணித்துக் கொண்டு செயல்பட்டார். ‘மண்ணுக்கேற்ற மார்க்சியம்’, ‘மன்னர்களும் மனுதர்மமும்’ ஆகிய நூல்களை அவர் எழுதினார்.


கரூரில் மூத்த வழக்கறிஞராகப் பணியாற்றிய அவர், மார்க்சியத் தத்துவத்தில் தேர்ச்சிப் பெற்றவராவார். சிந்தனை படைப்பு செயல் என்ற திறமைகளோடு பொதுத் தொண்டாற்றிய பி.ஆர். குப்புசாமி அவர்களின் மறைவு தமிழினத்துக்கு பேரிழப்பாகும். பெரியார் திராவிடர் கழகம் ஆழ்ந்த இரங்கலைப் பதிவு செய்கிறது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் - கடந்த வாரம் உடல் நலிவுற்றிருந்த அவரை நேரில் சந்தித்து நலம் விசாரித்தனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 19th February 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2041 பிப்ரவரி 25, 2010 புரட்சி 9 முழக்கம் 7 விலை: ரூ.2.50


# “குடிஅரசு” முழுமையான தொகுப்புகளே - பெரியார் நிறுவனத்திடம் இல்லை

## அடுக்கடுக்கான வாதங்களை முன் வைத்தார் வழக்கறிஞர் துரைசாமி

*“ ‘குடிஅரசு’ தொகுப்புகளே முழுமையாக வழக்கு தொடர்ந்தவர்களிடம் இல்லை; ‘குடிஅரசு’ தொகுப்பை வெளியிடுவதில் எங்களுக்கு எந்தப் பொருள் பயனும் இல்லை; இதை வைத்து நாங்கள் மாட மாளிகைகள் கட்டப் போவதில்லை; எங்களுக்கு கிடைக்கும் பயன், மன நிறைவுதான்” என்று கழக வழக்கறிஞர் துரைசாமி நீதிமன்றத்தில் குறிப்பிட்டார்.*

பெரியார் எழுத்து பேச்சுகளை வெளியிடத் தமக்கு மட்டும் உரிமை உண்டு என்றும், மீறி வெளியிட்டால் ரூ.15 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் கி.வீரமணி, பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் மீது தொடர்ந்த வழக்கு விசாரணை நீதிபதிகள் எப்.எம்.இப்ராகிம் கலிஃபுல்லா, எஸ். கிருபாகரன் ஆகியோர் முன் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பிப். 16 ஆம் தேதி நடந்த வழக்கு விசாரணையின் செய்திகள், கடந்த வார இதழில் வெளியிடப் பட்டது. தொடர்ந்து பிப்.17,18 தேதிகளில், வழக்கு விசாரணை நடந்தது. இரு நாட்களிலும் கழகத்தின் மூத்த வழக்கறிஞர் துரைசாமி, கழக சார்பில் வாதிட்டார்.

2003 ஆம் ஆண்டில் கழகம் குடிஅரசு முதல் தொகுதி - 1925அய் வெளியிட்டபோது அந்த இதழில் எழுதிய அணிந்துரையின் ஒரு பகுதியை நீதிபதி கிருபாகரன் சுட்டிக்காட்டினார்.

“1983 இல் பல பெரியார் பற்றாளர்கள் ஒரு குழுவாக இணைந்து தொடர்ந்து மூன்று கோடை விடுமுறைகளில் பணியாற்றி ‘குடி அரசு’ இதழ்களில் இருந்து பெரியார் எழுதியதாக அவர்கள் கருதிய கட்டுரைகள், இதழில் வெளிவந்த பெரியாரின் சொற்பொழிவுகள், இரங்கலுரைகள் ஆகியவற்றைத் தொகுத்து கையெழுத்துப்படி எடுத்து திராவிடர் கழகத் தலைமையிடம் ஒப்படைத்துள்ளனர்” என்ற பகுதியை சுட்டிக்காட்டி,



“இது, வழக்கு தொடர்ந்தவர்களுக்குரிய தொகுப்பு என்பதை ஒப்புக் கொண்டுள்ளீர்களே” என்று கேட்டார்.

வழக்கறிஞர் துரைசாமி இதை மறுத்தார். “பல பெரியார் பற்றாளர்கள், அவர்களாகவே ஒரு குழுவாக இணைந்து, ‘குடிஅரசு’ இதழிலிருந்து, பெரியார் கட்டுரைகளை எழுதி, அதை தி.க. தலைவரிடம் ஒப்படைத்தார்கள். அதை தி.க. தலைமை வெளியிடாமல் கிடப்பில் போட்டதால் அந்தக் குழுவிலிருந்த பெரியார் மய்யத்தைச் சார்ந்த வழக்கறிஞர் பாண்டியன், எங்களிடம் தந்தார். இந்தக் குழு, வழக்கு தொடுத்த கி.வீரமணியால் நியமிக்கப்பட்டது அல்ல; திராவிடர் கழகத்தாலும் அறிவிக்கப்பட்ட குழு அல்ல; பெரியார் பற்றாளர்கள் பலரும் கூடி, அவர்களே தன் விருப்பமாக நடத்திய பணியேயாகும். அவர்களிடமிருந்து பெற்ற ‘குடிஅரசில்’ பெரியார் எழுதியதாகக் கூறப்பட்ட சந்தேகத்துக்குரிய கட்டுரைகளை எல்லாம் நீக்கிவிட்டு, 2003 இல் அதை வெளியிட்டோம். அதை எதிர்த்து எந்த வழக்கும் எதிர்தரப்பினரால் தொடரப்படவும் இல்லை. பிறகு 2005 இல் நாங்கள் வெளியிட்ட இரண்டு தொகுதிகளுக்குமான ‘குடிஅரசை’ இதழ்களை நாங்களே தனியாக சேகரித்தோம்” என்றார்.

இரண்டாவதாக - எதிர் தரப்பினர் தாக்கல் செய்த மனுவில் உண்மைக்கு மாறான தகவல் தரப்பட்டுள்ளதை வழக்கறிஞர் துரைசாமி சுட்டிக் காட்டினார். பெரியாரின் ‘குடிஅரசு’ பத்திரிகைகள் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம், சரசுவதி மகால், கரந்தைத் தமிழ்ச் சங்கம் உள்ளிட்ட பல்வேறு நூலக - ஆய்வகங்களிலிருந்து திரட்டினோம் என்று, எங்கள் மனுவில் குறிப்பிட்டிருந்தோம். “அது பொய். அந்த நூலக ஆய்வகங்களில் ‘குடி அரசு’ இதழ்களே கிடையாது” என்று அவர்கள், தங்கள் மனுவில் மறுத்திருந்தனர். ஆனால், இப்போது இந்த வழக்கு தொடர்ந்ததற்குப் பிறகு அவர்கள் வெளியிட்டுள்ள 1925 ஆம் ஆண்டு முதல் ‘குடிஅரசு’ தொகுப்பில் எந்த நூலகங்களில் ‘குடிஅரசு’ இல்லை என்று கூறினார்களோ, அந்த நூலகங்களுக்கு தொகுப்புக்கு உதவியதாக நன்றி செலுத்தியிருக்கிறார்கள். ஆக, மனுவில் உண்மைக்கு மாறாக அவர்கள் தகவலை அவர்கள்தான் தந்திருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டினார்.

அடுத்து, கழகம் வெளியிட்ட முதல் தொகுப்பில் பெரியாரின் கட்டுரை குடிஅரசில் வெளிவந்த சில பக்கங்கள் கிழிந்து, மறைந்து போயிருந்ததால், அந்தப் பகுதியை அப்படியே இடைவெளியிட்டு வெளியிட்டிருந்தோம். ஆனால், வீரமணி நிறுவனம் வெளியிட்டதொகுப்பில் அதே கட்டுரை, வார்த்தைகளால் நிரப்பப்பட்டிருக்கிறது. எங்களின் தொகுப்பு வேறு; அவர்களுடையது அல்ல என்பதற்கு, இது ஒரு சான்று என்று கூறினார். இரண்டு தொகுதிகளையும் ஒப்பிட்டுப் பார்த்த நீதிபதி, அவர்களுக்கு கிடைத்த ‘குடிஅரசில்’, எழுத்துகள் மறையாமல் இருந்திருக்கலாம் அல்லவா? என்று கேட்டார்.

அதற்கு பதிலளித்த வழக்கறிஞர் துரைசாமி, “நீதிபதி அவர்களே, அவர்களிடம் 1925, 1926 ஆம் ஆண்டுகளுக்கான குடிஅரசுகளே கிடையாது. ‘தங்களிடம் அவைகள் இல்லை; இருப்பவர்கள் அனுப்பி உதவுங்கள்’ என்று 2008 இல் அவர்கள் விளம்பரமே செய்திருக்கிறார்கள். 1925 ஆம் ஆண்டு ‘குடிஅரசே’ தங்களிடம் இல்லை என்று அவர்களே விளம்பரம் செய்துவிட்டு, அவர்களிடமிருந்த தொகுப்பைத் தான் நாங்கள் வெளியிட்டுள்ளோம் என்று கூறுகிறார்கள் என்று எடுத்துக் கூறி, வீரமணியின் வேண்டுகோள் விளம்பரம் வெளிவந்த ‘விடுதலை’ ஏட்டையும் நீதிபதிகளிடம் காட்டினார். இதை, வழக்கு மனுவில் குறிப்பிட்டுள்ளீர்களா, என்று நீதிபதிகள் கேட்டதற்கு - ஆம், குறிப்பிட்டுள்ளோம் என்று கூறி, அப்பகுதியைப் படித்துக் காட்டினார்.

பெரியார் தனது கருத்துகள் மக்களை சென்றடைய வேண்டும் என்றுதான் விரும்பினாரே தவிர, அதற்கு பதிப்புரிமை கோர விரும்பவில்லை. எனவே, எழுத்துப்பூர்வமாக இதற்காக எதையும் எழுதித் தரவில்லை என்று வழக்கறிஞர் துரைசாமி கூறியபோது, நீதிபதி, கொளத்தூர் மணி, பெரியார் இருந்த காலத்திலேயே அவருடன் இருந்தவரா என்று கேட்டார், ‘ஆம்’ என்று வழக்கறிஞர் கூறினார்.

இதுவரை வெளிவந்த தொகுப்புகள் பற்றி நீதிபதி கேட்டபோது - “2003 ஆம் ஆண்டிலேயே தொடங்கி, 2005 ஆம் ஆண்டு வரை ‘குடிஅரசை’

(4 ஆம் பக்கம்)

## பெரியார் கருத்தில் நெகிழ்ந்த நீதிபதி

**பெரியார் தன்னுடைய சிந்தனைகள் மக்களிடம் போய்ச் சேரவேண்டும் என்று கருதிய தலைவரே தவிர, தன்னைப் பற்றி கருதாத தலைவர். எனவே அவர் தனக்கான பதிப்புரிமை எதையும் எழுதவில்லை என்ற கருத்தை வலியுறுத்திய வழக்கறிஞர் துரைசாமி, தந்தை பெரியாரின் கருத்து ஒன்றை முன் வைத்தார்.**

**“எந்த நூலை எடுத்துக் கொண்டாலும், அதன் மதிப்பு, அந்த நூலின் பயனை அளவாகக் கொண்டே ஒழிய, அதனை ஆக்கினவனையோ, அதில் உள்ள தெய்வீகத் தன்மை என்பதையோ இலக்கண இலக்கிய அளவையோ, அமைப்பையோ, அற்புதத் தன்மையையோ அளவாகக் கொண்டதாக ஆகாது.”**

**(பெரியார், ‘விடுதலை’ 31.1.1958)**

**- மேற்குறிப்பிட்ட பெரியார் கருத்தைக் கேட்ட நீதிபதி இப்ராகிம் கலிஃபுல்லா அவர்கள், அக்கருத்தால் ஈர்க்கப்பட்டு, இது போன்றே உலக சிந்தனையாளர்கள் பலரும் சிந்தித்திருக்கிறார்கள். இதற்கு இணையாக பல நிகழ்வுகளைக் (ancedote) கூற முடியும் என்று கூறிவிட்டு, வின்ஸ்டன் சர்ச்சில் கூறியதை எடுத்துக் காட்டினார்.**

**எந்த ஒரு கருத்து வெளிப்படும்போதும் முதலில் கூறுகிறவரைப் பார்க்க வேண்டும்; கூற்று என்ன என்பதைக் கேட்க வேண்டும்; கூறியவற்றை சரியாக உள்வாங்க வேண்டும்; இறுதியாக, அதை ஏற்பதா, வேண்டாமா என்ற முடிவுக்கு வரவேண்டும் என்று சர்ச்சில் கூறியதை, பெரியார் சிந்தனையோடு ஒப்பிட்டார், நீதிபதி.**

**இதை மேலும் விளக்குவதற்காக வழக்கறிஞர் துரைசாமியை உதாரணமாக முன் வைத்து விளக்கினார். பெரியார் கருத்தில் நெகிழ்ந்து போன நீதிபதி, அதை மீண்டும் ஒரு முறை படித்தார்.**

**தலையங்கம்**

## சுமைதாங்கி, தமிழன்!

முல்லைப் பெரியாறு அணையில் 142 அடி உயரம் நீரைத் தேக்கலாம் என்று உச்சநீதிமன்றம் அறிவித்தப் பிறகும், கேரள அரசு அதை ஏற்கத்தயாராக இல்லை. உச்சநீதிமன்றத்தின் ஆணையை நிறைவேற்றாமல் தடுக்க, மாநிலத்தில் தனிச் சட்டம் நிறைவேற்றிக் கொண்டது. இதன் மூலம், இந்தியாவின் கூட்டமைப்பிலிருந்து தங்களின் மாநில உரிமைக்காக விலகி நிற்கத் தயாராக இருப்பதாக அறிவித்திருக்கிறது. அங்கே ஆட்சியில் இருப்பது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தான்! தேசியம், தேசிய ஒருமைப்பாடு பற்றி பேசும் அக்கட்சிதான், இப்படி ஒரு முடிவை எடுத்திருக்கிறது.

கேரளஅரசின் சட்டத்தை எதிர்த்து, தமிழக அரசு உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. கேரள அரசு உச்சநீதிமன்ற ஆணையை தனிச் சட்டத்தின் மூலம் மீறியுள்ளதை உச்சநீதி மன்றமும் தட்டிக் கேட்கவில்லை. மத்திய அரசும் கண்டு கொள்ளவில்லை. இந்த நிலையில், உச்சநீதிமன்றம், மேலும் 5 பேர் கொண்ட குழுவை அமைத்து விசாரிக்கச் சொல்லி உத்தரவிட்டுள்ளது. இந்தக் குழு புதிய அணையைக் கட்டுவது பற்றியும் பரிசீலிக்கும். ஏற்கனவே 7 உறுப்பினர்கள் கொண்ட குழுதான், ஆய்வு நடத்தி, முல்லைப் பெரியாறு அணை உறுதியாகவே இருக்கிறது என்று நீதிமன்றத்துக்கு அறிக்கை தந்தது. இப்போது எதற்கு புதிய குழு? பிரச்சினையை கிடப்பில் போடுவதற்கு நடுவர் மன்றம் நியமிக்கலாம் என்ற யோசனையை முன் வைத்தார்கள். தமிழக அரசு எதிர்த்தது. இப்போது அய்வர் குழு வந்திருக்கிறது. இந்த நிலையில் குழுவில் இடம் பெறப் போவதில்லை என்று தி.மு.க.வின் பொதுக் குழு தீர்மானித்து, தனது எதிர்ப்பை மறைமுகமாகத் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே – காவிரிப் பிரச்சினையில் நடுவர் மன்றம் வழங்கிய தீர்ப்பை கருநாடகம் அமுல்படுத்த மறுத்துவிட்டது. மத்திய அரசும் மவுனம் சாதிக்கிறது. இப்போது முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 142 அடியாக உயர்த்தலாம் என்று உச்சநீதிமன்றம் ஆணையிட்டும், தமிழ்நாட்டுக்கான உரிமையை கேரளா பிடிவாதமாக மறுக்கிறது. மத்திய அரசு மவுனம் சாதிக்கிறது.

தேசியம் – சர்வ தேசியம் பேசும் கட்சிகள் எல்லாம் தங்கள் மாநிலங்களின் நலன்களுக்காக, ‘தேசியத்துக்கு’ சவால் விடுகின்றன. ஒரு காலத்தில் ‘திராவிட நாடு’ பேசிய கட்சியோ “ஒருமைப்பாட்டைக் காப்பாற்றுவதற்கு – பொறுமைக் காப்போம்” என்று கூறுகிறது. “நம்முடைய நியாயமான உரிமைகளையும் பறி கொடுத்துவிட்டு, ஒருமைப்பாட்டுக்கு துரோகம் செய்கிறவர்கள் யார் என்பதை உலகத்துக்கு உணர்த்த இன்றில்லா விட்டாலும், நாளை, நாளை இல்லாவிட்டாலும் நாளை மறுநாள், ஒரு காலம் வரும். அதுவரை நாம் பொறுமையாக இருந்து, அப்படி பொறுமையாக இருக்கிற நேரத்திலும் சட்ட ரீதியாக நம்முடைய வாதங்களை எடுத்து வைத்து, நம்முடைய உரிமைகளைப் பெற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்” என்று முதல்வர் கலைஞர் கருணாநிதி தி.மு.க.வின் பொதுக் குழுவில் பேசியுள்ளார். (‘முரசொலி’ பிப்.22) ஒருமைப்பாட்டின் விரோதிகளை அடையாளம் காட்டுவதற்காக நாம் நமது உரிமைகளை இழந்து காலம் வரும் வரை காத்திருக்க வேண்டும் என்று கலைஞர் கூறுவதில் நியாயம் இருப்பதாக தெரியவில்லை. இது மாநில சுயாட்சிக் கொள்கைக்கான புதிய விளக்கமா என்றுதான் கேட்க வேண்டியிருக்கிறது.

சேது சமுத்திரத் திட்டம் தொடங்கி, பணிகள் வேகமாக நடந்த நிலையில், ‘ராமனை’ காட்டி, பார்ப்பன சக்திகள் முடக்கிவிட்டன. மத்திய அரசு, இதில் மெத்தனம் காட்டுவதையும் முதல்வர் கலைஞர் நியாயப்படுத்தியிருக்கிறார்.

“இராமரைக் காட்டி பயமுறுத்துகிறார்கள். அதனால் அவர்கள் (மத்திய அரசு) சற்றுத் தயங்குகிறார்கள். அந்தத் தயக்கத்துக்குக் காரணத்தை நம்மிடமும் தெரிவிக்கிறார்கள். நாமும் அவர்களுடைய தர்மசங்கடத்திற்காகப் பார்க்க வேண்டியிருக்கிறது” (‘முரசொலி’, பிப்.22) என்று பேசியிருக்கிறார். இதே “தர்ம சங்கடத்துக்காக” ஈழத் தமிழர் மீது நடந்த இனப்படு கொலைகளைக்கூட மூடி மறைத்து, மத்திய அரசின் துரோகத்தை நியாயப்படுத்தியதும் இவர்கள்தான்.

ஆக, மத்தியில் காங்கிரஸ் கட்சியின் கூட்டணிக்காக தமிழர்களின் உரிமைகள் ஒவ்வொன்றாக பறிபோய்க் கொண்டிருக்கின்றன என்பதே உண்மை. தமிழக காங்கிரசு கட்சியோ தமிழ்நாட்டின் உரிமைகளை மத்திய அரசிடம் தட்டிக் கேட்காமல், அவர்கள் போடும் பதவிப் பிச்சைகளுக்காக மடியேந்தி நிற்கிறது. தமிழ்நாடு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், கேரள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியிடம் இடித்துரைக்கத் தயாராக இல்லை. தேர்தல் கூட்டணி கட்சி – கட்சி அரசியல் என்ற சந்தர்ப்பவாதங்களுக்குள், தமிழன் உரிமைகள் முடங்கிப் போய் கிடக்கின்றன. தமிழன் தலையில் தேசப்பற்று – ஒருமைப்பாடு என்ற சுமையையும் தூக்கி வைத்து சுமக்கச் சொல்கிறார்கள்! போலி தேசியத்தையும், போலி அரசியலையும், மக்கள் மன்றத்தில் அம்பலப்படுத்தி, உரிமைகளுக்கான போர்ப்படை ஒன்று தமிழகத்தில் கட்சி அரசியலுக்கு அப்பால் உருவாக வேண்டியதன் அவசியத்தையே, இவைகள் உணர்த்துகின்றன.

# மக்கள் சிரிக்கிறார்கள்!

“அவனும் சிரித்தான்; நானும் சிரித்தேன்!” என்ற தலைப்பில் தமிழக முதல்வர் கலைஞர் ‘முரசொலி’ ஏட்டில் (12.2.2010) உடன் பிறப்புகளுக்கு கடிதம் எழுதியுள்ளார். அவருக்கே உரிய உருவகக் கதை பாணியில் அந்தக் கடிதம் அமைந்துள்ளது.

கும்பகோணம் மகாமக குளத்தில் அரசியும், அவரது தோழியும் நீராடச் சென்றதாகவும் அப்போது பக்தர்களிடையே பரபரப்பும், பதைபதைப்பும் ஏற்பட்டதாகவும் அதே நாளில் அந்தக் குளத்திற்கு பாவ விமோசனம் தரச் சென்றிருந்த பெரியசாமியாரும், சின்ன சாமியாரும் இது குறித்து பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளித்ததாகவும், இதனால் ஆத்திரமடைந்த அரசியார், மடத்திலே நடைபெற்ற ஒரு கொலையில் சாமியாரை சிக்க வைத்துவிட்டார் என்றும், இதனிடையே ஊராட்சி மன்ற ஒலிபெருக்கியில் “நாம் இருவரும் ஒரு குலம் அல்லவா? நம்மை எதிர்ப்போர் நம்மை வெல்லவா?” என்ற பாட்டு ஒலிக்க ஆரம்பித்து, “இன எதிரிகள் யார் என்று பார்த்திடுவோம் - கூத்திடுவோம், அவர்களை வீழ்த்திடுவோம்!” என பாடல் முழங்கியதாகவும், நீண்டு செல்லும் கடிதத்தின் முடிவில், “இதற்குப் பெயர் தானய்யா இன ஒற்றுமை” என்றேன். “அவனும் சிரித்தான், நானும் சிரித்தேன்” என்றுஅந்தக் கடிதம் முடிந்திருக்கிறது.

மகாமகக் குளக்கரையையும், சங்கரமட சங்கரராமன் கொலை வழக்கையும் சுற்றித்தான் இந்தக் கடிதம் பின்னப்பட்டிருக்கிறது என்பதை புரிந்து கொள்ள விசேஷ அறிவு எதுவும் தேவையில்லை. அன்றாடம் நாளேடுகளில் வரும் செய்திகளைப் பார்த்தாலே புரிந்து கொள்ள முடியும்.

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 2004 ஆம் ஆண்டு ஒரு தீபாவளி நாளில் காஞ்சி மடாதிபதி ஜெயேந்திர சரஸ்வதி கைது செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து, இளைய சாமியார் விஜயேந்திரரும் கைதானார். காஞ்சி மடத்திற்கு நெருக்கமான சங்கரராமனை, சங்கராச்சாரியார்கள் கூலிப் படையை ஏவி கொலை செய்தார்கள் என்பது குற்றச்சாட்டு. கூலிப் படைக்கு பணம் கொடுப்பதற்காக காஞ்சி மடத்தின் வங்கிக் கணக்கில் இருந்து பணம் எடுத்ததும், அலைபேசியில் உரையாடியதும் சங்கரராமன் ஜெயேந்திரருக்கு எழுதிய கடிதங்களும் போலீசாரால் கைப்பற்றப்பட்டன. ஜெயேந்திரர் கூலிப்படைக்கு கொடுத்த பணத்தின் ஒரு பகுதி அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகின.

இதனடிப்படையில், முதல் தகவல் அறிக்கையும் குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டன. ஜெயேந்திரர் நேரடியாகச் சென்று கொலை செய்யவில்லை என்றாலும், சதிச் செயலில் மையப் புள்ளி அவர்தான் என்பது குற்றப் பத்திரிகையின் சாராம்சம்.

இந்த நிலையில், சங்கராச்சாரியார் உச்சநீதிமன்றத்தை அணுகி, தமிழகத்தில் அந்த வழக்கு விசாரணை நடைபெற்றால் தனக்கு நீதி கிடைக்காது என்று முறையிட்டார். அது குறித்த விசாரணையின்போது, உச்சநீதிமன்ற நீதிபதி ஒருவர், தாம் சங்கர மடத்தின் பக்தர் என்றும், எனவே இந்த வழக்கை விசாரிக்க முடியாது என்றும் ஒதுங்கிக் கொண்டதெல்லாம் உபகதை. சங்கராச்சாரியாரின் கோரிக்கையை ஏற்று, வழக்கு புதுவை நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு விசாரணை நடந்து வருகிறது.

ஆனாலும், வழக்கை நடத்துவது தமிழக காவல்துறைதான். இதனிடையே, தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு தி.மு.க. ஆட்சிக்கு வந்தது. கும்பகோணத்தில் சங்கராச்சாரியார்கள் மணியான அமைச்சர் ஒருவரை சந்தித்தது குறித்து ஏடுகளில் செய்தி கசிந்தது.

சங்கரராமன் கொலை வழக்கு விசாரணை குறித்து நாளேடுகளில் செய்தி வந்து கொண்டிருக்கிறது. ஆனால், செய்தியின் தலைப்பு ஒன்றுதான். கொலை வழக்கில் சாட்சிகள் பல்டி என்பதுதான் அன்றாடம் தலைப்பாகிறது. பல்டி என்றால் உங்கள் வீட்டு பல்டி, எங்கள் வீட்டு பல்டி அல்ல. இந்திய நீதித்துறை வரலாற்றில் முதன் முறையாக... என்று தொலைக்காட்சிகளில் அலறும் அளவுக்கு நீதிமன்றத்திற்கு வரும் சாட்சிகள் அனைவரும் தொடர் பல்டி அடித்து சாதனை புரிந்து வருகின்றனர்.

59 அரசுத் தரப்பு சாட்சிகளில் இதுவரை 29 பேர் பல்டியடித்துள்ளனர் என்பது சமீபத்திய செய்தி. பல்டிகளின் பட்டியல் தொடரும் என்பதுதான் விசாரணை செல்லும் திசை தெரிவிக்கும் விவரம். இதில் வேதனையான வினோதம் என்னவென்றால், சங்கரராமன் கொலை வெளிச்சத்திற்கு வந்த போது, கண்ணீரும் கம்பலையுமாக பேட்டிக் கொடுத்த அவரது குடும்பத்தினர்களேகூட, இப்போது பிறழ் சாட்சிகளாக மாறி, தற்போது சங்கராச்சாரியாரின் தண்டக் கோலை பலப்படுத்தி வருகின்றனர்.

துப்பாக்கி முனையில் மிரட்டி போலீசார் வாக்கு மூலம் வாங்கியதாகக் கூட சில சாட்சிகள் கூறியுள்ளனர். சங்கரராமனே ஆவி உருவில் வந்து சாட்சி சொன்னதாகக் கூட செய்திகள் வரக் கூடும். புராணங்களில் இவ்வாறு ஆவி சாட்சி சொன்னதற்கான சான்றுகள் உண்டு என்று நிரூபிப்பதற்கும் சில சட்டப் புலிகள் முன்வரக்கூடும். விசாரணை அதிகாரியே பல்டி அடித்த நிலையில், இதுவெல்லாம் சாத்தியம்தான்.

இந்த நிலையில், ‘கீற்று’ என்கிற இணைய தள ஏடு’ சங்கரராமன் கொலை வழக்கில் சாட்சிகள் தொடர் பல்டி அடிப்பது குறித்து கருத்துக் கணிப்பு ஒன்றை நடத்தியுள்ளது. அதில், தி.மு.க. அரசின் உள்குத்து என்று 54.6 விழுக்காட்டினரும், காஞ்சி பணம் விளையாடுகிறது என்று 42.8 விழுக்காட்டினரும் எல்லாம் சரியாகத்தான் நடக்கிறது என்று 2.6 விழுக்காட்டினரும் தங்கள் கருத்தை பதிவு செய்துள்ளனர். இது 16.2.2010 மாலை 6.20 மணி நேர நிலவரம்.

நிற்க.... இந்த நிலையிலேயேதான் “அவனும் சிரித்தான்; நானும் சிரித்தேன்” என்று கலைஞர் கடிதம் எழுதியுள்ளார். வழக்கு விசாரணை நடைபெற்று வரும் நிலையில், “மடாலயத்தில் நடைபெற்ற ஒரு கொலையில் சாமியார் சிக்க வைக்கப்பட்டார் என்றும், சாமியாரை அரசியார் பழி தீர்த்துக் கொண்டார்” என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

உருவக் கதை என்றாலும், முதல்வரே, சாமியார் சிக்க வைக்கப்பட்டார் என்றும், பழி வாங்கப்பட்டார் என்றும் குறிப்பிட்டுள்ள நிலையில், தமிழக காவல்துறை இந்த வழக்கை எந்த திசையில் நடத்திச் செல்லும் என்பது மிகப் பெரிய கேள்விக்குறி.

சங்கரராமன் கொலை வழக்கில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அ.தி.மு.க. ஆட்சியில் வழக்கு நடந்து கொண்டிருப்பதோ தி.மு.க. ஆட்சியில். காவல்துறை முறையாக வழக்கை நடத்தினால், குற்றத்தை நிரூபிக்க அனைத்து வகையிலும் முயன்றால், சாட்சிகள் பல்டியடிக்க வாய்ப்பு இல்லை. வழக்கை ஒப்புக்கு நடத்துவதால்தான் சர்க்கசில் பார் விளையாட்டு போல, சாட்சிகள் பல்டியடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில், இன ஒற்றுமை என்று சிரிப்பதாகக் கூறுவது பொருத்தமான சிரிப்பாக தெரியவில்லை. வழக்காடு மன்றம் சாட்சிகளின் வழுக்குப் பாறையாக மாறிக் கொண்டிருப்பதற்கு காரணம் என்னவோ? என்று மக்கள் தான் சிரிக்கிறார்கள். விசாரணை முடிந்து தீர்ப்பு வரும்போது, மக்கள் வருத்தப்படக் கூடும். சிரிப்பதற்கு வாய் ஒன்றே ஒன்றுதானே இருக்கிறது என்று!

**நன்றி: ‘தீக்கதிர்’ நாளேடு**

# கழகத்தின் தீவிரக் களப் பணிகள்

முத்துக்குமார் நினைவு நாளான ஜன. 29 அன்று சீர்காழியில் முத்துக்குமார் சீர்காழி ரவிச்சந்திரன் உள்ளிட்ட ஈழத் தமிழர்களுக்காக தீக்குளித்த தியாக மறவர்களுக்கு வீர வணக்கப் பேரணி நடைபெற்றது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சீரிய பெரியாரில்வாதியுமான ம.தி.மு.க. அரசியல் ஆலோசனைக் குழு உறுப்பினர் கா. சுப்ரவேலு தலைமை தாங்கினார். தம்பி இனிய தமிழன் (விடுதலை சிறுத்தைகள்), த. ரவி (த.த.மு.), கோ. செயராமன் (மா.பெ.பொ.க.), கோ. மார்க்ஸ் பிரியன் (ம.தி.மு.க.), மு. ராஜா (ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம்), செந்தில்குமார் (பகுஜன் சமாஜ்) முன்னிலை வகித்தனர்.

விடுதலை சிறுத்தைகள், பகுஜன் சமாஜ் கட்சி, ஏகாதிபத்திய எதிர்ப்புஇயக்கம், விவசாயிகள் விடுதலை முன்னணி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மா.லெ.), மக்கள் விடுதலை, தமிழ்நாடு மாணவர் கழகம் உள்ளிட்ட பல்வேறு அமைப்பாளர் பங்கேற்ற இந்தப் பேரணி, சீர்காழி முக்கிய வீதிகள் வழியாக சென்று, பழைய பேருந்து நிலையம் வந்தடைந்தது. அங்கு நடைபெற்ற வீரவணக்கக் கூட்டம் நடைபெற்றது. பெரியார் திராவிடர் கழகம் இந்தப் பேரணியை ஒருங்கிணைத்தது. கழக மாவட்டத் தலைவர் பரசுராமன், சீர்காழி கழகப் பொறுப்பாளர்கள் பெரியார் செல்வம், அன்பு முருகன், செல்வேந்திரன், சந்தோசு, வேதேந்திரன் உட்பட 150 தோழர்கள் பங்கேற்றனர்.

### மயிலாடுதுறையில்

போராளி முத்துக்குமார் முதலாமாண்டு நினைவு 'தமிழினம் எதிர் நோக்கும் சவால்கள்' எனும் தலைப்பில் மயிலாடுதுறையில் பிப். 13, சனி மாலை 7 மணியளவில் கூறை நாடு கடை வீதியில் கழகப் பொதுக் கூட்டம் மாவட்ட துணைத் தலைவர் ரசீத்கான் தலைமையில் சிறப்புடன் நடைபெற்றது. மு. அன்பரசன் வரவேற்புரையாற்றினார். மாவட்ட தலைவர் இரா. பரசுராமன், மா.மகாலிங்கம் (ம.தி.மு.க.), பேராசிரியர் ஜெயராமன், இரா. முரளீதரன் (தமிழர் உரிமை மீட்பு இயக்கம்), பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் உரையாற்றினர். இறுதியில் பொதுச் செயலாளர் கோவை. இராம. கிருட்டிணன் ஒன்றரை மணி நேரம் எழுச்சியுடன் சிறப்புரையாற்றினார். இறுதி வரை, கூட்டத்தினர் கருத்துகளை செவிமெடுத்தனர். கருத்துச் செறிவு மிக்க கூட்டமாக இருந்தது என்று பொது மக்கள் பாராட்டினர்.

### திருப்பூரில்

27.12.2009 பெரியார் 36வது நினைவு நாள் பொதுக் கூட்டம் திருப்பூர் சாமுண்டிபுரம் பகுதியில் நடைபெற்றது. செகதீசன் தலைமையேற்க மூர்த்தி, பெரியார் முத்து, சம்பூகன், மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் கோபிநாத் வரவேற்புரையாற்றினார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகப் பொதுச்செயலாளர் கோவை கு. இராம கிருட்டிணன், பொள்ளாச்சி காசு. நாகராசு ஆகியோர் சிறப்புரையாற்றினர். காவை இளவரசனின் 'மந்திரமா, தந்திரமா' நிகழ்ச்சி நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டத் தலைவர் சு. துரைசாமி, முகில்ராசு, அகிலன், தியாகராசன், பாரதி வாசு, பரிமளராஜ், நீதிராசன், இரா. குமார் நிர்வாகிகள் உட்பட பலரும் திரளாக கலந்து கொண்டனர் இறுதியாக சண். முத்துகுமார் நன்றி கூறினார்.

### பொள்ளாச்சியில்

முத்துக்குமாரின் முதலாமாண்டு நினைவேந்தல் நிகழ்ச்சிகள் பொள்ளாச்சி, ஆனைமலை பகுதிகளில் எழுச்சியோடு கடைபிடிக்கப்பட்டன.

சனவரி 29, காலை 8 மணிக்கு கா.க.புதூரில் ஒன்றிய துணைச் செயலாளர் சம்பத் தலைமையிலும், காலை 10 மணிக்கு ஆனைமலையில் நகர செயலாளர் வே. அரிதாசு தலைமையிலும், மதியம் 12 மணிக்கு சூளேசுவரன்பட்டியில் கண்ணன் தலைமையிலும், மாலை 5 மணிக்கு பொள்ளாச்சி பேருந்து நிலையம் முன்பு பொள்ளாச்சி நகர செயலாளர் வே. வெள்ளிங்கிரி தலைமையிலும் நினைவேந்தல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.



நிகழ்ச்சிகளில் தி.மு.க. சார்பில் கி. கண்ணப்பன், ம.தி.மு.க. நகர செயலாளர் குகன்மில் செந்தில், சரவணன், இந்திய கம்யூனிஸ்ட் சுப்பையன், விடுதலை சிறுத்தைகள் வழக்கறிஞர் சக்தி மற்றும் அப்பன்குமார், தமிழ் இளைஞர் பொதுநல மன்றத்தின் இராசுக்குமார், ஆதித் தமிழர் பேரவையின் மணிமாறன், நேதாஜி இளைஞர் மன்றத்தின் வெள்ளை நடராஜ் மற்றும் தமிழ்நாடு மாணவர் கழகம், ஆதித் தமிழர் விடுதலை ன்னணி உள்ளிட்ட அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள் கலந்து கொண்டனர். முடிவில் வட்ட செயலாளர் கா.சு. நாகராசன் நன்றி கூறினார்.

முத்துக்குமார் உள்ளிட்ட வீரமறவர்களின் உருவப்படங்கள் பொறித்த பதாகைகள் பொள்ளாச்சி - ஆனைமலை பகுதிகளில் மக்கள் கூடும் இடங்களில் வைக்கப்பட்டிருந்தன.

### நம்பியூரில்

27.12.2009 ஞாயிறு ஈரோடு மாவட்டம் நம்பியூர் பகுதியிலுள்ள ரங்கநாதபுரத்தில் தந்தை பெரியாரின் 131வது பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம், ரங்கநாதபுரம் பகுதிச் செயலாளர் தோழர் இரமேசு தலைமையில், மாவட்ட இணை செயலாளர்




செல்வக்குமார், நம்பியூர் ஒன்றிய தலைவர் அருளானந்தம், நகரச் செயலாளர் அழகிரி முன்னிலையில்நடைபெற்றது.

கூட்டத்தில் குடந்தை சிற்பி இராசன் , மந்திரமா தந்திரமா? நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக செய்து காட்டினார். பின்னர், கிளைச் செயலாளர் இரமேசு, மாவட்டச் செயலாளர் இராம. இளங்கோவன் ஆகியோர் உரைக்குப் பின் தலைமைக் கழகப் பேச்சாளர் கா.சு. வேலுச்சாமி, நகைச்சுவை ததும்ப மூடநம்பிக்கைகளை விளக்கி உரை நிகழ்த்தினார். கூட்டம் இரவு 11 மணிக்கு முடிவடைந்தது. பொதுமக்கள் கூட்டம் நிறைவடையும் வரை கலையாமல் அமர்ந்திருந்தனர்.

### பெரம்பலூர்

15.2.2010 அன்று பெரம்பலூர் மாவட்டம் அம்மா பாளையத்தில் கழகத்தின் சார்பில் மூடநம்பிக்கை ஒழிப்பு விளக்கக் கூட்டம் சிறப்புடன் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் துரை தாமோதரன் தலைமையில் தோழர்கள் அக்ரி ஆறுமுகம், சுதாகர் முன்னிலையில் கோபி வேலுசாமி உரை நிகழ்த்தினார். சிற்பி இராசன் 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சிகளை நடத்தினார். தோழர் சவுந்தர்யா நன்றி கூறினார்.

அம்மா பாளையத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தை கேட்டுவிட்டு, சுரேஷ், பி.ஏ., இராதா கிருஷ்ணன் ஆகிய இரு தோழர்கள் கழகத்தில் இணைந்து பணியாற்றுவதாக விருப்பம் தெரிவித்தனர்.

அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தில் கலந்து, ஒன்றரையாண்டு சிறைத் தண்டனைப் பெற்ற பெரியார் தொண்டர் போல்ட் ராமசாமி அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி சிறப்பு செய்யப்பட்டது.

அம்மாபாளையம் பேரூராட்சி துணைத் தலைவர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டனர்.

குழந்தைகள், இளைஞர்கள், முதியவர்கள் என இருநூறுக்கும் மேற்பட்ட தோழர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

### தொழுவந்தாங்கலில்

13.2.2010 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் விழுப்புரம் மாவட்டம் பெரியார் திராவிடர் கழகம்



சார்பில் சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும், ஏன்? விளக்கப் பொதுக்கூட்டம் சங்கராபுரம் வட்டம், தொழுவந்தாங்கலில் நடைபெற்றது. கூட்டத்திற்கு, விழுப்புரம் கணேசன், ம. தலித்குமார், நாவாப்பிள்ளை ஆகியோர் முன்னிலை வகிக்க, ம. குப்புசாமி வரவேற்புரையாற்றினார். செ. பிரபு தலைமை தாங்கினார்.

சி. ஆசைத்தம்பி, கல்லை தங்க செந்தில்குமார், ந. அய்யனார் ஆகியோர் கருத்துரை வழங்கியதைத் தொடர்ந்து, காவை இளவரசன், 'மந்திரமல்ல தந்திரமே' அறிவியல் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. கூட்டத்தில் சி. சாமிதுரை, ச. பெரியார் வெங்கட், ச.கா. இளையராசா, செஞ்சி சாக்கரடீசு, பிரபாகரன், பரமசிவம், ராசு, ஆ. தமிழ் தாசதுரை, விழுப்புரம் இளங்கோவன் உள்பட பல பகுதிகளிலிருந்தும் ஏராளமான தோழர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர்,.

மாலை 5 மணியளவில் மூடநம்பிக்கை ஒழிப்பு பிரச்சார ஊர்வலம் நடைபெற்றது. கழகத் தோழர்கள் மு.வ. செல்வராசு, செ. பிரபு ஆகியோர் அலகு குத்தி டாடா ஏ.சி. கார் இழுத்துக் கொண்டும், தோழர்கள் தீ சட்டி ஏந்திக் கொண்டும், மூட நம்பிக்கை ஒழிப்பு முழக்கங்கள் எழுப்பிக் கொண்டும் வந்தனர். இந்து முன்னணியினரின் எதிர்ப்புகளைத் தாண்டி, மூடநம்பிக்கை ஊர்வலம் நடைபெற்றது. வ. வீராசாமி நன்றி கூறினார்.

### திருச்சிராப்பள்ளியில்

கழகம் சார்பாக தெருமுனை பிரச்சாரக் கூட்டம் 8, 9.2.2010 ஆகிய இரண்டு நாட்கள் தொடர்ச்சியாக திருச்சி வேர் அவுஸ் செங்குளம் காலனியில் 8.2.2010 அன்று மாலை 6 மணிக்கும், 9.2.2010 அன்று மாலை 6 மணிக்கு காந்தி சந்தை அருகிலுள்ள கல்பாளையத்திலும் நடைபெற்றது. இவ்விருக் கூட்டத்திற்கும் மாவட்டத் தலைவர் செ.த. இராசேந்திரன் தலைமை தாங்கினார். திருச்சி பெரியார் இசைக் குழுவினர் குமார் இயக்க கொள்கைப் பாடல்களை பாடினார். ஆறுமுகம், பழநிவேல் வரவேற்புப் பேசினார். திருவரங்கம் தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.முத்து, புதியவன் ஆகியோர் பேசினர். சிற்பி இராசன், அறிவியல் விளக்க நிகழ்ச்சிகளை செய்து காண்பித்தார்.

திருச்சிராப்பள்ளி வேர் அவுஸ் கல்லறையில் உள்ள தீண்டாமை தடுப்புச் சுவரை மாநகராட்சி விரைவில் அகற்ற வேண்டும் என வலியுறுத்தி பேசப்பட்டது. முடிவில் மாவட்ட செயலாளர் மு. மனோகரன் நன்றி கூறினார். மாரிமுத்து வந்திருந்த கழகத் தோழர்களுக்கு இரவு அசைவ உணவு விருந்தளித்து உபசரித்தார்.

### பொய் வழக்கு: சேலம் கழகத் தோழர்கள் விடுதலை

கடந்த நாடாளுமன்ற தேர்தல் பிரச்சாரத்தின் போது சேலம் மாநகரில் காங்கிரசுக்கு எதிராக துண்டறிக்கை வழங்கிய தோழர்களிடம் தகராறு செய்த தி.மு.க.வினர், தோழர்கள் மீது பொய்யான புகார் செய்தனர். சேலம் மணியனூர் பகுதி தோழர்களான ஆனந்த், கார்த்திக் ஆகியோர் மீது தடை செய்யப்பட்ட துண்டறிக்கைகளை வழங்கிய தாகவும், அதை கேட்ட தி.மு.க.வினரை கொடூரமாக தாக்கியதாகவும், காவல் துறை வழக்கு பதிவு செய்தது. இந்தப் பொய் வழக்கிலிருந்து 1.2.2010 அன்று சேலம் நீதிமன்றம் தோழர்களை விடுதலை செய்தது.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# எங்களுக்கு கிடைக்கும் பயன் மன ஆறுதல் ஒன்றுதான்!

*(முதல் பக்கத் தொடர்ச்சி)*

வெளியிட்டுள்ளோம். 1926 ஆம் ஆண்டுக்கான இரண்டாவது தொகுதியும் வெளிவந்துள்ளது. இனி வெளியிடப்பட வேண்டிய, தொகுதிகளைத்தான், இங்கே இதோ, அடுக்கி வைத்திருக்கிறோம். இவைகளையெல்லாம் கரையான் அரித்துவிடாமல் நாங்கள் காப்பாற்ற வேண்டியிருக்கிறது" என்று வழக்கறிஞர் துரைசாமி கூறியபோது, நீதிபதிகள் சிரித்துக் கொண்டனர். அன்று விவாதம் முடிந்தது.

பிப்.18 ஆம் தேதி மீண்டும் வழக்கறிஞர் துரைசாமி வாதத்தைத் தொடர்ந்தார்.

பதிப்புரிமை தொடர்பாக நீதிமன்றத்தில் வந்த சில வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்புகளை, தமது வாதத்துக்கு வலிமை சேர்த்திட எடுத்துக் காட்டினார். இந்த வெளியீட்டின் வழியாக நாங்கள், ஏதோ பொருளீட்டப் போவதாக கி. வீரமணி மனுவில் கூறுவதை மறுத்த வழக்கறிஞர், "நாங்கள் அதிகமாகப் போனால் 1000 பிரதிகளைத்தான் அச்சேற்றுகிறோம். அதுவும்கூட அரசு நூலகங்களில் எங்கள் பதிப்புகளை வாங்க மாட்டார்கள். நாங்கள், பல நூலகங்களுக்கு இலவசமாகவே வழங்கப் போகிறோம். இந்த நிலையில் இதை வெளியிடுவதன் மூலம், அரண்மனைகளையும், மாளிகைகளையுமா கட்டப் போகிறோம்? இதை வெளியிடுவதில் எங்களுக்கு பயன் ஏதாவது இருக்கிறது என்றால், அது எங்களுக்கு ஏற்படும் உள்ளத் திருப்தி ஒன்றுதான்" என்று கூறினார்.

"இந்தத் தொகுப்புகளை வெளியிடுவது 'பெரியார் திராவிடர் கழகம்' என்ற அமைப்புதான். காசோலை அனுப்புவோருக்கு, வங்கிக் கணக்கு வேண்டும் என்பதற்காகவே "தா.செ.மணி" பெயரில் அனுப்பும்படி வேண்டுகோளை வைத்தோம்" என்று கூறி வழக்கறிஞர் துரைசாமி தமது வாதத்தை நிறைவு செய்தார்.

தொடர்ந்து கழக பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் சார்பில் வாதிட்ட வழக்கறிஞர் கிளாடியஸ் - பதிப்புரிமை சட்டத்தின் பல்வேறு பிரிவுகளை எடுத்துக்காட்டினார். "1914 ஆம் ஆண்டு பதிப்புரிமை சட்டப்படி ஒரு எழுத்தாளர் தனது படைப்புகளுக்கு பதிப்புரிமை கோரினால் எழுத்துப்பூர்வமாக வெளிப்படுத்த வேண்டும். அப்படி எழுத்துபூர்வமாக வெளிப்படுத்திய பிறகும், 25 ஆண்டுகள் வரைதான் அது செல்லும். பெரியாரின் குடிஅரசு - 1925லிருந்து 1938 வரை வெளியிடப்படுவதால், இந்த வழக்கில், 1914 ஆம் ஆண்டு பதிப்புரிமை சட்டத்தின் பிரிவுகள்தான் பொருந்தும்.

புதிய பதிப்புரிமை சட்டம் 1957 ஆம் ஆண்டுதான் வருகிறது. புதிய பதிப்புரிமைச் சட்டத்தின்படி எழுத்துப் பூர்வமாக ஒருவர் கோரியுள்ள பதிப்புரிமை 60 ஆண்டுகளுக்கு நீடிக்கும். 1957 ஆம் ஆண்டு புதிய பதிப்புரிமை சட்டத்திலேகூட, 1914 ஆம் ஆண்டு பதிப்புரிமைச் சட்டம், புதிய சட்டம் அமையும் கால இடைவெளியில் பொருந்தக் கூடியவையே என்பதற்கான பிரிவுகள் இடம் பெற்றுள்ளன" என்று வாதிட்டார். நீதிபதிகள், பதிப்புரிமை சட்டப் பிரிவுகள் தொடர்பான விளக்கங்களை கேட்டனர். இதற்கு தெளிவான விளக்கங்களை கிளேடியஸ் முன் வைத்தார்.

தொடர்ந்து, கி. வீரமணியின் வழக்கறிஞர், "1957 ஆம் ஆண்டு வந்த புதிய பதிப்புரிமை சட்டம்தான், இந்த வழக்கிற்கு பொருந்தும் என்றும், காரணம், இந்த சட்டம் வந்ததற்குப் பிறகும் 1973 வரை பெரியார் உயிருடன் இருந்திருக்கிறார்" என்றும் வாதாடினார். இந்த வாதத்தை நீதிபதிகள் ஏற்கவில்லை. "இதற்கான சட்டப் பிரிவுகள் இருந்தால் காட்டுங்கள்" என்று கேட்டனர்.

"பெரியார் உருவாக்கிய அறக்கட்டளையில், தனது நெருங்கிய உறவினர்களையே உறுப்பினர்களாக்கினார் என்றும், அப்படி நெருங்கிய உறவினர்களிடம் அறக்கட்டளை இருக்கும்போது, 25 ஆண்டுகளுக்கும் மேலும் பதிப்புரிமை சட்டம் செல்லும்" என்று, வீரமணியின் வழக்கறிஞர் முன் வைத்த மற்றொரு வாதத்தையும் நீதிபதிகள் ஏற்கவில்லை. பெரியார் அறக்கட்டளையில் நெருங்கிய உறவினர்கள் மட்டும் இல்லை; வெளியில் இருந்து பலரும் உறுப்பினர்களாக இருந்ததை நீதிபதிகள் சுட்டிக்காட்டினர். உறவினர்களைக் கொண்ட அறக்கட்டளைக்கு காப்புரிமையின் காலம் 25 ஆண்டுகளுக்கு மேலும் நீடிக்கும் என்ற சட்டப் பிரிவை ஏற்க வேண்டுமானால், அதையும், நூலாசிரியர்தான் வெளிப்படுத்தியிருக்க வேண்டும் என்ற சட்டப்பிரிவுகளில் இடம் பெற்றுள்ளதை நீதிபதி இப்ராகிம் கலிபுல்லா சுட்டிக்காட்டினார்.

மீண்டும் மீண்டும் அதே சட்டப் பிரிவையே சுட்டிக்காட்டி வீரமணியின் வழக்கறிஞர் வாதிட்டபோது, நீதிபதி கலிபுல்லா அவர்கள், "மீண்டும் மீண்டும் எத்தனை முறை அதையே கூறுவீர்கள்? உங்கள் வாதப்படியே ஆனைமுத்துவுக்கும், ஸ்டார் வெளியீட்டு நிறுவனத்துக்கும் பெரியார் வழங்கியதைத் தவிர, அனைத்து உரிமைகளும் உங்களுக்கு மட்டுமே இருக்கிறது என்பதை அப்படியே ஏற்றுக்கொண்டே கேட்கிறோம்; அப்படியே இருந்தாலும், நூலின் உரிமையாளர் இறந்து 25 வருடங்கள் வரைதான், அது செல்லும். எனவே பெரியார் இறந்து 25 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. பிறகு எங்கே இருக்கிறது, உரிமை?" என்று நீதிபதி கேட்டார்.

தொடர்ந்து தஞ்சை பகுத்தறிவாளர் கழகத்தைச் சார்ந்த இரத்தினகிரி, தம்மையும் இந்த வழக்கில் சேர்க்கக் கோரி செய்திருந்த மனுவை விசாரணைக்கு ஏற்கவேண்டும் என்று அவரது சார்பில் ஆஜரான வழக்கறிஞர் வேங்கடபதி கூறினார். இரத்தினகிரி மனு ஏற்கனவே உயர்நீதிமன்றத்தில், நீதிபதி சிவக்குமார் அவர்களால் தள்ளுபடி செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. அதற்கு மேல் முறையீடு செய்து, இரத்தினகிரி நீதி மன்றத்துக்கு இப்போது வந்திருக்கிறார். மனுவை நீதிபதிகள் ஏற்று, தாக்கீது அனுப்ப உத்தரவிட்டனர். மீண்டும். பிப். 23 ஆம் தேதி வழக்கு விசாரணைக்கு வருகிறது.

**– நமது செய்தியாளர்**

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 9840940400

# அறிவார்ந்த காதலை வரவேற்போம்!

*சென்னை மாவட்டக் கழகம் காதலர் தினத்தையொட்டி பொதுமக்களுக்கு வழங்கிய துண்டறிக்கை*

காதலை வரவேற்போம்! அந்தக் காதல், உணர்ச்சிகளால் மட்டுமே உருவாகி விடாது, அறிவார்ந்த காதலாக வேண்டும்.

"காதலை அவரவர் உள்ளத்திற்கே விட்டுவிடுவோம். ஆனால் வாழ்க்கைத் துணை விசயத்தில் காதல் போதாது. அறிவு, அன்பு, அனுபவம், பொருத்தம் ஆகிய பல காரியங்களே முக்கியமானதாகும். பழங்காலத்தில் காதலே போதுமானதாக இருந்திருக்கலாம். அப்போதைய அறிவுக்கு அவ்வளவுதான் தேவையாக இருந்திருக்கும். இப்போதைய அறிவுத் திருமணம் வாழ்நாள் முழுதும் பொருந்தும்படியாக இருக்க வேண்டும். மனித வாழ்வையும் பிறவிக் குணங்களையும் மேன்மைப் படுத்துவதாக இருக்க வேண்டும்."

**– தந்தை பெரியார்**

காதல் பற்றின் காரணமாக
ஆக்கிரமிக்கத் தூண்டுவது அல்ல;
அன்பின் அடிப்படையில்
அரவணைக்கத் தூண்டுவது.
குடும்பம் என்ற குறுகிய வட்டத்தில்
தேங்குவது அல்ல;
சமுதாயம் என்ற பெருவெளியில்
பிரகாசிப்பது.
உடல் உறவு அதற்கொரு
தொடக்கம்;
மனிதநேயம் அதன் சிகரம்;
ஆதலினால் காதல் செய்வீர்,
உலகத்தீரே.

**– கவிஞர் இன்குலாப்**

எல்லாவற்றிலும்
எனக்குப் பிடித்ததையே
நீ
தேர்ந்தெடுத்தாய்
உனக்குப் பிடித்ததையே
நான் தேர்ந்தெடுத்தேன்
அதனால்தான்
நட்பு
நம்மைத் தேர்ந்தெடுத்திருக்கிறது.

**– கவிஞர் அறிவுமதி.**

"என்னை நீயாக்காமல்
இருப்பாயா.... நீ"

**– கவிஞர் இளம்பிறை**

அறிவார்ந்த காதலை வரவேற்போம்

சாதி - மதம் பலகோடி மைல்களுக்கு
அப்பால்
வானத்தில் உள்ள நட்சத்திரங்கள்
வடமொழி புரோகிதம்
ஏலம் கூவும் வரதட்சணை
என்ற மடமைகள்
நமது வாழ்க்கையை தீர்மானிக்க
வேண்டாம்.
சம உரிமையும் - நட்பும்
காதல் வாழ்க்கையின்
பண்புகளாகட்டும்!

**– பெரியார் திராவிடர் கழகம்**

**'புரட்சிப் பெரியார் முழக்க'த்திற்கு நன்கொடை வழங்கிய தோழர்கள்**

கரூர் வழக்கறிஞர் இராசேந்திரன்- ரூ.500

வெள்ளியனை க. முருகேசன் - ரூ.500/-

கோவை மாநகர செயலர் கோபால் - உமா இணையர், தங்கள் மகன் தமிழினியன் பெயர் சூட்டு விழாவில்- ரூ.1000/-

டேவிட் பெரியார் இல்ல மணவிழாவில்- ரூ.1000/-

# ஒரு மார்க்சிஸ்ட் தலைவரின் துயரமான முடிவு

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான டபிள்யூ ஆர். வரதராஜன், சில வாழ்க்கைப் பிரச்னைகளுக்கு உள்ளாகியதால் அனைத்துப் பொறுப்பிலிருந்தும் கட்சி, அவரை விலக்கி வைத்தது. மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகிய அவர், போரூர் ஏரியில் குதித்து, தனது வாழ்க்கையை முடித்துக் கொண்டதாக வந்த செய்தி, பொது வாழ்க்கையில் பலரையும் பாதித்துவிட்டது. ஒருவேளை கிடைத்த சடலம் அவருடையதில்லை என்றாலும், அவர், எங்கே போனார் என்பது புதிராகவே இருக்கறிது.

ஒரு கம்யூனிஸ்டாகவோ, பெரியாரியல்வாதியாகவோ, தத்துவார்த்த இயக்கங்களில் தங்களை முழுமையாக ஒப்படைத்துக் கொண்டவர்களுக்கு வாழ்க்கையே இயக்கமாகவும், இயக்கமே வாழ்க்கையாகவும் அமைந்து விடு கிறது. ஆனால், கட்சித் தலைமை இந்த உணர்வுகளைக் கவனத்தில் கொள்ளாமல், 'அதிகாரத்துவ' பண்போடு செயல்படும்போதுதான் பிரச்னைகள் உருவாகின்றன. நீருக்குள்ளே வாழக்கூடிய மீன், தரையில் தூக்கிப் போட்டால் துடிப்பதைப் போன்ற நிலைக்கு பாதிக்கப்பட்டவர்கள் உள்ளாகிறார்கள்.

தி.க. தலைவர் கி.வீரமணியும், இதே தவறைத்தான் அதிகார மமதையில் செய்தார். அவரால் கழகத்திலிருந்து தூக்கி எறியப்பட்டவர்கள், கொள்கைக்கு மாறாக செயல்பட்டதாக, எந்த ஒருவர் மீதும் குற்றம் சாட்டவும் முடியாது. தலைமைக்கும் கழகக் கட்டுப்பாட்டுக்கும் எதிராக செயல் பட்டார்கள் என்றே குற்றம்சாட்டி, தனக்கு அதிகாரம் இருக்கிறது என்று தூக்கி வீசினார். அதனால் ஏற்பட்ட விளைவுகளை, அவர் ஒவ்வொரு நாளும் இப்போது சந்தித்துக் கொண்டிருக்கிறார். கழகங்கள், "அரசு"களைப் போல் அதிகாரங்களை ஏவும் போதும், அறக்கட்டளைகளாக உருவெடுத்து, அதைக் காப்பதே கொள்கை என்று செயல்படும்போதும், கொள்கைத் தோழமை, நேசம், நேர்மைப் பண்புகள் எல்லாமே புதைக்குழிக்குப் போய்விடுகின்றன.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 25th February 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.